விலை ரூபா: 15.00

Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி

பக்கங்கள்: பதினாறு — Valampurii

சங்கு 12 வள்ளுவர் ஆண்டு 2042 தை 11 செவ்வாய்க்கிழமை (25.01.2011) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 037

ராம்கோ MADRAS CEMENTS LTD RAMCO CEMENT RAMCO
SLS 107 தரம் கொண்டதும் 100 வீத சாதாரண போட்லான் சீமெந்து (O.P.C.) ராம்கோ சீமெந்து

# அநுராதபுரம் சிறைச்சாலையில் கைதிகள் மீது துப்பாக்கிச்சூடு





## 3 பேர் பலி; பலர் படுகாயம்

(அநுராதபுரம்)

அநுராதபுரம் சிறைச்சாலையில் கைதிகள் மீது நேற்றிரவு மேற்கொள்ளப்பட்ட துப்பாக்கி பிரயோகத்தில் மூன்று கைதிகள் உயிரிழந்துள்ளதாகவும் பலர் படுகாயமடைந்துள்ளதாகவும் அநுராதபுரம் சிறைச்சாலை கைதிகளை மேற்கோள்காட்டி கொழும்புச் செய்திகள் தெரிவிக்கின்றன. (16ஆம் பக்கம் பார்க்க)

## இராணுவ நீதிமன்றம் சட்டபூர்வமானதா?

### தீர்ப்பு இன்று

(கொழும்பு)

இராணுவ நீதிமன்றை, அரசியல் அமைப்பின் அடிப்படையில் நீதிமன்றமாக ஏற்றுக் கொள்வதா என இன்று நீதிமன்றம் தீர்மானிக்கவுள்ளது. இராணுவ நீதிமன்றின் தீர்ப்பிற்கு அமைய சரத் பொன்சேகா தரப்பு சட்டத்தரணிகள் நீதிமன்றில் அடிப்படை உரிமை மீறல் மனுத்தாக்கல் செய்திருந்தனர்.

இராணுவ நீதிமன்றை ஏற்றுக் கொள்ளப்பட்ட நீதிமன்றமாக அறிவிப்பதா என்பது தொடர்பில் மேன்முறையீட்டு நீதிமன்றம் உச்ச நீதிமன்றின் ஆலோசனையை கோரியிருந்தது. (16ஆம் பக்கம் பார்க்க)

## அவலங்களோ, அச்சுறுத்தல்களோ வடக்கில் இன்னும் குறையவில்லை

### மக்கள் எவ்வாறு நடமாட முடியுமென விஜிதஹேரத் எம்.பி.கேள்வி

(கொழும்பு)

அரசாங்கத்தின் பாதாள உலகக் குழுக்களின் ஒழிப்பு நடவடிக்கைகள் எப்போது வடக்கில் சாத்தியப்படும் என்று தெரியவில்லை. வடக்கில் அச்சுறுத்தல்களோ பொது மக்களின் அவலங்களோ என்னும் குறைவடையவில்லை என ஜனநாயக தேசியக் கூட்டணியின் பொதுச் செயலாளரும் நாடாளுமன்ற உறுப்பினருமான விஜித ஹேரத் தெரிவித்துள்ளார்.

எதிர்க்கட்சிகளுக்கு சுதந்திரமாக உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் செயற்படவோ வேட்பாளர் தெரிவுகளில் ஈடுபடவோ முடியாத சூழலே தற்போது யாழ்.குடாநாட்டில் ஏற்பட்டுள்ளது. இவ்வாறானதொரு சூழ்நிலையில் பொதுமக்கள் எவ்வாறு சுதந்திரமாக நடமாட முடியும் எனவும் அவர் கேள்வி எழுப்பினார்.

இது தொடர்பாக விஜித ஹேரத் எம்.பி. தொடர்ந்து கூறுகையில், அண்மையில் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ யாழ்ப்பாணம் சென்று அங்கு வாழ் தமிழ் மக்களிடம் வாக்குறுதி ஒன்றை வழங்கினார். அதாவது இனி (15ஆம் பக்கம் பார்க்க)

## ஜனாதிபதி மகிந்தவுக்கு அமெரிக்காவில் சிகிச்சை

(நியூயோர்க்)

ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவுக்கு அமெரிக்காவின் டெக்ஸாஸ் மாநிலத்திலுள்ள ஹூஸ்டன் மருத்துவமனையொன்றில் சிகிச்சையளிக்கப்பட்டு வருவதாக செய்திகள் வெளியாகியுள்ளன.. ஹூஸ்டன் நகரில் எம்.டீ.அண்டர்சன் மருத்துவமனையிலேயே அவர் சிகிச்சைக்குள்ளாக்கப்பட்டுள்ளதாக கொழும்பு செய்திகள் தெரிவிக்கின்றன.

கடந்த இரண்டு மாதங்களாக அதற்கான சிகிச்சையை இலங்கையில் பெற்றுக் கொண்டிருந்த போதிலும் குணமாகாத நிலையிலேயே அவர் தற்போது அமெரிக்காவுக்கு திடீர் பயணத்தை மேற்கொண்டுள்ளார்.

அமெரிக்காவின் டெக்ஸாஸ் மாநிலப் பல்கலைக்கழகத்தின் (16ஆம் பக்கம் பார்க்க)

## சர்வதேச நெருக்கடிகளைத் தவிர்க்க

## மனித உரிமைகள் விவகாரம் மீண்டும் மகிந்த சமரசிங்கவிடம்

(கொழும்பு)

வெளிவிவகார அமைச்சின்கீழ் இதுவரை இயங்கிவந்த மனித உரிமைகள் விவகாரங்கள் தொடர்பான பிரிவு மீண்டும் பொருந்தோட்டக் கைத்தொழில் அமைச்சர் மஹிந்த சமரசிங்கவிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

கடந்த அரசாங்கத்தில் மஹிந்த சமரசிங்க மனித உரிமைகள் மற்றும் இடர் முகாமைத்துவ அமைச்சராக பதவி வகித்தார். எனினும் 2010ஆம் ஆண்டு நடைபெற்ற தேர்தல்களின் பின்னர் அமைந்த (15ஆம் பக்கம் பார்க்க)

## கனடா உலகத் தமிழர் அமைப்பின் சொத்தை முடக்க நீதிமன்றம் உத்தரவு

(கொழும்பு)

கனடாவின் ஒன்ராறியோ மற்றும் கியூபெக் மாநிலங்களில் செயற்பட்டு வந்த உலகத் தமிழர் அமைப்பின் உடைமைகளை கனேடிய அரசாங்கத்திடம் கையளிக்குமாறு கனேடிய நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளதாக செய்திகள் வெளியாகியுள்ளன.

இவ்வுத்தரவைத் தொடர்ந்து கனடா உலகத் தமிழர் அமைப்பின் வங்கிக் கணக்குகள், அலுவலகங்கள், பிரசார சாதனங்கள் மற்றும் உடைமைகளை கனேடிய பொலிஸார் முடக்கியுள்ளதாக தெரியவந்துள்ளது.

உலகத் தமிழர் அமைப்பின் உடைமைகள் பயங்கரவாத அமைப்பினால் பயன்படுத்தப்பட்டவை என்ற குற்றச்சாட்டின் அடிப்படையிலேயே அதன் சொத்துக்களை முடக்குமாறு கனேடிய நீதிமன்ற தீர்ப்பு வழங்கியிருந்தது.

இவ் உத்தரவு கனடாவில் விடுதலைப் புலிகளின் செயற்பாட்டிற்கு மிகப்பெரிய பின்னடைவை ஏற்படுத்தும் என கனடா தமிழர்கள் தெரிவித்துள்ளனர்.

இந் நடவடிக்கை விடுதலைப் புலிகளின் நிதி சேகரிக்கும் நடவடிக்கைகள் உள்ளிட்ட விடுதலைப் (15ஆம் பக்கம் பார்க்க)

## பௌத்த துறவிகள் மீது தமிழகத்தில் தாக்குதல்

(சென்னை)

தமிழகம் எழும்பூரில் பௌத்த துறவிகள் தங்குகின்ற விடுதியில் இனந்தெரியாதவர்கள் புகுந்து தாக்குதல் நடத்தி உள்ளனர். நேற்றிரவு நடத்தப்பட்ட இந்தத் தாக்குதலில் அங்கு தங்கியிருந்த பௌத்த பிக்குகளுக்கு கடுமையான காயங்கள் ஏற்பட்டுள்ளதாக செய்திகள் தெரிவிக்கின்றன.

எனினும் தமிழக அரசினதோ தமிழக பொலிஸாரினதோ உத்தியோகபூர்வ தகவல்கள் கிடைக்கவில்லை. பாண்டியன் சாலையில் உள்ள மேக்கூரி (15ஆம் பக்கம் பார்க்க)

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

**Study & Work in UK and Canada**

Hurry......for Jan-2011
Intake Get Register Now
இறுதிச் சந்தர்ப்பம் IELTS தேவையில்லை
Administration & Documentation
என்பன வெற்றிகரமான முறையில் எங்களால் செய்து தரப்படும்.
ஐரோப்பிய நாடுகளுக்கான விசா பெறுவதற்கான Sponsorship
பிரச்சினையா? உடனடியாக ஏற்பாடு செய்து தரப்படும்.
சகல தொடர்புகளுக்கும்: 0729994777
(C-2291)

# மின்தடை அறிவித்தல்

(யாழ்ப்பாணம்)

உயரழுத்த மின் மார்க்கங்களில் பராமரிப்பு வேலைகள் செய்யும் பொருட்டு இன்று செவ்வாய்க்கிழமை மற் றும் 27ஆம் திகதி வியாழக்கிழமை ஆகிய தினங்களில் காலை 8.00 மணியிலிருந்து மாலை 5.00 மணிவரை சுன்னாகம், குப்பிளான், மயிலங்காடு, ஏழாலை, காங்கேசன்துறை உயர் பாதுகாப்பு வலயப் பகுதி ஆகிய இடங்களில் மின் விநியோகம் தடைப்பட்டிருக்கும்.

வேலைகள் முன்னதாக முடிவுற்றால் குறிப்பிட்ட நேரத்திற்கு முன் மின் விநியோகம் வழங்கப்படலாம். (ந)

**வர்த்தகப் பெருமக்களே...**

பெறுமதிமிக்க உங்கள் வியாபார நிறுவனங்களை இலகுவாகப் பதிவு செய்து, அதற்குரிய கௌரவத்தையும் உத்தரவாதத்தையும் பெற்றுக் கொள்ளுங்கள்.
தொடர்புகளுக்கு:-0729994777
(C-2290)

## வடக்கு மாகாணக் கல்வித் திணைக்களம்

# கடிதங்களை மருதனார்மடத்திற்கு அனுப்பி வைக்குமாறு அறிவிப்பு

(திருகோணமலை)

வடக்கு மாகாணக் கல்வித் திணைக்களம் மருதனார்மடத்தில் எதிர்வரும் முதலாம் திகதி முதல் தனது அலுவலகப் பணிகளை ஆரம்பிக்கவுள்ளது.

எனவே கடிதம் மூலம் தமது தேவைகளைப் பூர்த்திசெய்ய விரும்புபவர்கள் முதலாம் திகதி முதல் மருதனார்மடம் அலுவலகத்தில் சேவையைப் பெற்றக்கொள்ள முடியும் என வடக்கு மாகாணக் கல்விப்பணிப்பாளர் ப.விக்னேஸ்வரன் அறிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது,

வடக்கு மாகாணக் கல்வித் திணைக்களம் தனது அலுவலகப் பணிகளை எதிர்வரும் முதலாம் திகதி முதல் மருதனார்மடத்தில் ஆரம்பிக்கிறது.

இந்நிலையில் திருகோணமலை அலுவலகத்திலிருந்த கோவைகள் அனைத்தும் மருதனார்மடம் அலுவலகத்திற்கு மாற்றப்பட்டுள்ளது.

எனவே மாகாணக் கல்வித் திணைக்களத்தின் சேவையை கடிதம் மூலம் பெற விரும்புவோர் எதிர்வரும் முதலாம் திகதிமுதல் மருதனார்மட அலுவலகத்திற்கு அனுப்பி வைக்குமாறு கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளனர்.

இவ்வாறு வடக்கு மாகாணக் கல்விப் பணிப்பாளர் ப.விக்னேஸ்வரன் அறிவித்துள்ளார். (ந-5)

# ஆயிரம் பாடசாலைத் திட்டம் அபிவிருத்திக் கூட்டம் இன்று

(வவுனியா)

ஆயிரம் பாடசாலைத் திட்டத்தில் வடக்கு மாகாணத்தில் தெரிவுசெய்யப்பட்ட பாடசாலைகளின் அபிவிருத்தி தொடர்பான கூட்டம் இன்று காலை வவுனியா முதல்நிலை அலுவலகத்தில் நடைபெறவுள்ளது.

இக் கூட்டத்தில் வடக்கு மாகாணத்தில் 2011 ஆம் ஆண்டிற்கான மாவட்டங்களுக்கு இடையிலான ஆசிரியர் இடமாற்றம் தொடர்பில் ஆராயப்படும் என தெரியவருகிறது.

இது தொடர்பில் மேலும் தெரியவருவதாவது,

ஆயிரம் பாடசாலைகள் திட்டத்தில் வடக்கு மாகாணத்தில் தெரிவுசெய்யப்பட்ட பாடசாலைகளின் அபிவிருத்தி தொடர்பான கூட்டம் இன்று வடக்கு மாகாண முதல்நிலை அலுவலகத்தில் இடம்பெறவுள்ளது.

இக் கூட்டத்திற்கு வலயக் கல்விப்பணிப்பாளர்கள், திட்டமிடல் உதவிக் கல்விப்பணிப்பாளர், கோட்டக் கல்விப்பணிப்பாளர் ஆகியோருக்கு வடக்கு மாகாணக் கல்விப்பணிப்பாளர் ப.விக்னேஸ்வரன் அழைப்பு விடுத்துள்ளார்.

இந்நிலையில் வடக்கு மாகாணக் கல்வித் திணைக்களத்தினால் 2011 ஆம் ஆண்டிற்கான மாவட்டங்களுக்கிடையில் ஆசிரிய இடமாற்றம் வழங்குவது தொடர்பில் வலயக் கல்விப் பணிப்பாளர்களுடன் ஆராயப்படவுள்ளதாகத் தெரியவருகிறது. (ந-5)

# வடக்கு கல்வி அபிவிருத்தி மீளாய்வுக் கூட்டம் 28ஆம் திகதி

(திருகோணமலை)

வடக்கு மாகாணக் கல்வித் திணைக்களத்திற்கு உட்பட்ட அபிவிருத்திப் பணிகள் தொடர்பான மீளாய்வுக் கூட்டம் எதிர்வரும் 28ஆம் திகதி திருகோணமலை வடக்கு மாகாண சபை அலுவலகத்தில் வடக்கு மாகாண ஆளுநர் மேஜர் ஜெனரல் ஜீ.ஏ.சந்திரசிறி தலைமையில் நடைபெறவுள்ளது.

இக் கூட்டத்திற்கு வடக்கு மாகாணக் கல்வியமைச்சின் செயலாளர், மாகாணக் கல்விப் பணிப்பாளர்கள், 12 கல்வி வலயங்களினதும் வலயக் கல்விப் பணிப்பாளர்களுக்கும் அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

இக் கூட்டத்தில் கடந்த வருடம் நடைபெற்ற அபிவிருத்திப் பணிகளின் மீளாய்வு, இந்த ஆண்டு நடைபெறவுள்ள அபிவிருத்திப் பணிகளின் முன்மொழிவுகள் என்பன தொடர்பில் ஆராயப்படவுள்ளது. (ந-5)

# பச்சை மிளகாய்க்கு பதிலாக செங்கல்

(கொழும்பு)


பச்சை மிளகாய்க்கு பதிலாக செங்கற்களை விற்பனை செய்தமை தொடர்பான ஆச்சரிய தகவல் ஒன்று தம்புள்ள பொருளாதார மத்திய நிலையத்தில் இடம்பெற்றுள்ளது.

பொலநறுவையைச் சேர்ந்த வர்த்தகர் ஒருவர் தம்புள்ள பொருளாதார மத்திய நிலையத்தில் 45 கிலோ பச்சை மிளகாயை கொள்வனவு செய்வதற்கான கட்டணத்தை செலுத்தியுள்ளார்.

இதன் பின்னர் இந்தப் பொதியை வீட்டிற்கு எடுத்துச் சென்று பார்த்தபோது அதில் நான்கு செங்கல் கட்டிகளே இருந்ததாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த செங்கற்களின் நிறை 13 அரை கிலோ என தெரிவிக்கப்பட்டுள்ளது. (ந-5)

# மரண அறிவித்தல்



## திருமதி ஞானபதி பரமேஸ்வரன்

**(இளைப்பாறிய பரிசாரகர், யாழ்.போதனா வைத்தியசாலை)**

மானிப்பாய் மேற்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி ஞானபதி பரமேஸ்வரன் 22.01.2011 சனிக்கிழமை அகால மரணமானார். அவர் காலஞ்சென்றவர்களான யோகரட்ணம் செல்லம்மா தம்பதியினரின் அன்பு மகளும் காலஞ்சென்ற வீரவாகு மற்றும் இரத்தினம்மா ஆகியோரின் அன்பு மருமகளும், சீனியர் வீரவாகு பரமேஸ்வரனின் (இளைப்பாறிய கல்வித்திணைக்கள கணக்குப் பதிவு உத்தியோகத்தர்) அன்பு மனைவியும் அமரர் முரளிதரன் மற்றும் London ஐச் சேர்ந்தவர்களான ஞானகௌரி, சுமங்கலி, பரணிதரன் மற்றும் நிஜாந்தினி (Colombo) ஆகியோரின் அன்புத் தாயாரும், London ஐச் சேர்ந்தவர்களான ஜீவராஜன், தேவபாலன், காயத்திரி மற்றும் துஸ்யந்தன் (Colombo) ஆகியோரின் அன்பு மாமியாரும் செந்திமலர், துரைசிங்கம், பூபாலசிங்கம், சிலோசனாவதி, அற்புதவதி, சந்திராவதி, கமலாவதி ஆகியோரின் அன்புச் சகோதரியும், அமரர் நாகலிங்கம் மற்றும் அன்னரத்தினம், இரத்தினமலர், நித்தியானந்தசிவம், சிவநேசன், அமரர் கனகராஜா ஆகியோரின் அன்பு மைத்துனியும், London ஐச் சேர்ந்தவர்களான விதுஷன், அமிஷா, ஆரணி, அபிந்தா, விஸ்ணு மற்றும் பிரவினி (Colombo) ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும், செல்வமலர், லிங்கமலர், தியாகலிங்கம், சுந்தரலிங்கம் ஆகியோரின் சிறிய தாயாரும், பிரலாத் (தீசன்) (London), சசிலா, வனஜா, அனுஷா, அஜந்தா, எழிலரசி, தர்சன், நிஷாத் ஆகியோரின் அன்பு பெரியதாயாரும், விமல்ராஜ், ரவிராஜ், பத்மராஜ், சுமதி, அகிலன், சுதா, திருமதி சங்கரி பிரலாத் ஆகியோரின் அன்பு மாமியாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் 25.01.2011 இன்று செவ்வாய்க்கிழமை நண்பகல் 12 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக பிப்பிலி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

மானிப்பாய் மேற்கு,
மானிப்பாய்.
0777563031

தகவல்
வீரவாகு பரமேஸ்வரன்
(கணவர்)

(3572)

# இந்தியாவில் புலிகளுக்கு தடை எதிர்த்து வாதாடுகிறார் வைகோ

(சென்னை)

விடுதலைப் புலிகளின் அமைப்பிற்கு இந்திய மத்திய அரசு தடை விதித்ததை எதிர்த்து சென்னை உயர் நீதிமன்றத்தில் மதிமுக பொதுச் செயலாளர் வைகோ இன்று நேரில் ஆஜராகி வாதாடுகிறார்.

இது குறித்து மதிமுக தலைமை அலுவலகம் வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பில்,

விடுதலைப் புலிகள் இயக்கத்திற்கு இந்திய அரசு தடைவிதித்ததை டில்லித் தீர்ப்பாயம் உறுதி செய்து தீர்ப்பை வழங்கியது. இதை எதிர்த்து சென்னை உயர் நீதிமன்றத்தில் வழக்குத் தொடரப்பட்டது.

இது குறித்த விசாரணை இன்று நடைபெறுகிறது. இதில் வைகோ நேரில் ஆஜராகி வாதாடுகிறார் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (ந-5)

# நாட்டின் பால் உற்பத்தியை அதிகரிக்க பாகிஸ்தானிலிருந்து எருமைகள் இறக்குமதி

(கொழும்பு)

பாகிஸ்தானிலிருந்து மூன்று வருடங்களுக்குள் 5ஆயிரம் எருமை மாடுகளையும் 10 ஒட்டகங்களையும் இறக்குமதி செய்வதற்கு அரசாங்கம் திட்டமிட்டுள்ளதாக கால்நடைகள் அமைச்சின் செயலாளர் எச்.ஏ.கமகே தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது,

5 ஆயிரம் எருமைமாடுகள் எதிர்வரும் மார்ச் மாதம் இறக்குமதி செய்யப்பட்டு ஆரம்பத்தில் அரசாங்கத்தினால் நடத்தப்படும் பண்ணைகளில் வளர்க்கப்படும் எனவும் பின்னர் அவற்றின் கன்றுகள் கால்நடை விவசாயிகளுக்கு வழங்கப்படும்.

இரு நாடுகளுக்கும் இடையில் கையெழுத்திடப்பட்ட பொருளாதார கூட்டுறவு ஒப்பந்தத்தின் கீழ் மேற்படி எருமை மாடுகள் இறக்குமதி செய்யப்படும்.

தற்போது இலங்கை தனது பால்தேவையில் 20 தொடக்கம் 25 சதவீதமானவற்றை மாத்திரமே உற்பத்தி செய்கிறது. இதை 40 சதவீதமாக அதிகரிப்பதற்கு அரசாங்கம் திட்டமிட்டுள்ளது.

ஒட்டகப் பண்ணை குறித்துக் கேட்டபோது பாகிஸ்தானில் ஏற்கெனவே ஒட்டகங்களின் விலை விசாரிக்கப்பட்டுள்ளதாக கமகே கூறினார்.

பாகிஸ்தானிலிருந்து 3இலட்சம் ரூபாயிற்கு ஒட்டகங்களை வாங்கமுடியும். ஆனால் இறக்குமதிச் செலவு உட்பட ஒட்டகம் மொன்றுக்கு 4இலட்சம் ரூபாயை செலவிடவேண்டியிருக்கும் என அவர் கூறினார். (ந-5)

**செல்லா சினிமா**



காட்சி நேரம்: 10.30,2.30,6.30,9.30

**தேவை**

செரமிக் விற்பனை நிலையத்திற்கு வேலையாட்கள் தேவை. (ஆண், பெண் இருபாலாரும்) O/L சித்தியடைந்தவர்கள் 26.01.2011 (புதன்கிழமை) 27.01.2011 (வியாழக்கிழமை) காலை 10.00-நண்பகல் 12.00 மணிவரை நேரில் வரவும். தொடர்புக்கு:-
R.K.CERAMIC
122, Main Street, Nelliady.
T.P.: 0213207525, 0776660699
(3574)

# இன்று ஒரு தகவல்

## எழுத்து சாஸ்திரம்

ஒருத்தர் எழுதும் எழுத்தைப்பார்த்து விட்டு, அந்த ஆள் எப்படிப்பட்டவனாக இருப்பான் என்பதை யூகிக்க முடியுமா?

முடியும் என்று சொல்கிறார்கள் சிலபேர்.

அதுதான் எழுத்து சாஸ்திரம் – Graphology

இப்பொழுது மேல் நாடுகளில் சில பத்திரிகை விளம்பரங்களைப் பார்த்தால் "இந்தவேலைக்கு விண்ணப்பிப்பவர்கள் தங்களுடைய சொந்த கையெழுத்தில் மனுவை எழுதி அனுப்ப வேண்டும்" என்று இருக்குமாம். இது எதற்கென்று நினைக்கிறீர்கள்?

பல பெரிய கம்பனிகளுக்கு எழுத்து சாஸ்திரத்தில் நம்பிக்கை இருப்பது தான் இதற்குக் காரணமாம்.

இன்றைக்கும் லண்டனில் உள்ள பல பெரிய கம்பனிகள் வேலைக்கு ஆள் எடுப்பதற்கு முன் எழுத்து சாஸ்திர நிபுணர்களைக் கூப்பிட்டு மனுதாரர்களின் கையெ ழுத்தை காட்டுவது உண்டாம். எழுத்துக்கு மதிப்பெண் போடச் சொல்வார்களாம். நிறைய விண்ணப்பங்கள் வரும்போது அதை வடிகட்டுவதற்கும் இந்த முறையை உபயோகப்படுத்துகிறார்களாம்.

பிரிட்டன், பிரான்ஸ், ஜேர்மனி, சுவிற்ஸர்லாந்து, செக்கோஸ்லாவாக் கியா, இஸ்ரேல் போன்ற நாடுகளில் எல்லாம் இந்தக் கலையில் தேர்ச்சிபெற்ற நிபுணர்களுக்கு ஏகப்பட்ட கிராக்கியாம். அவர்களுக்கு நல்ல வருமானம் கிடைக்கிறதாம்.

ஒரு ஊழியர் நேர்மையானவரா இல்லையா? பணம் புழங்கும் இடத்தில் அவருக்கு வேலை கொடுக்கலாமா? கூடாதா? விசுவாசமான ஊழியரா–பொய்–சொல்லுவாரா என்பதையெல்லாம் எழுத்தைப் பார்த்து முடிவு செய்கிறார்களாம்.

இத்தாலியில் 17 ஆவது நூற்றாண்டில் இந்தக் கலை ஆரம்ப மாகியிருக்கிறது. 1871 வரைக்கும் இது ஒன்றும் அவ் வளவாக பிர பலமாகவில்லையாம். பிரெஞ்சுப் பாதிரியார் (ஹிபோலைட் மிஷாந்த்) என்பவர் 1871 இல் பிரெஞ்ச் எழுத்து சாஸ்திரத்தை நிறுவினாராம். அதன்பின் இது கொஞ்சம் கொஞ்சமாக பரவ ஆரம்பித்திருக்கிறது.

இன்றைக்கு உலகத்திலேயே மிகப் பொரிய எழுத்துக் கலைக்கழகம் (Graphology Institute) இஸ்ரேலின் டெல்அவீவ் நகரத்தில் இருக்கிறது. அதனுடைய கிளை லண்டனில் உள்ளதாம். இஸ்ரேலின் சில சமயம் நீதிமன்றங்கள் கூட எழுத்து சாஸ்திர அறிஞர்களின் அறிக்கையை ஏற்றுக்கொள்கிறார்களாம். குற்றவாளிகள் உண்மையிலேயே குற்றம் இழைக்கக்கூடியவர் தானா என்பதை அவர் எழுதிய எழுத்தின் வடிவத்தை வைத்து கண்டு பிடித்து விடுகிறார்களாம்.

எழுத்து சாஸ்திரம் சம்பந்தமாக கடந்த 200 வருடங்களில் ஏராளமான நூல்கள் வந்திருக்கிறதாம். சில பல்கலைக்கழகங்களில் இதை படமாகக் கூட வைத்திருக்கிறார்களாம். இந்தக் கலையை நூற்றுக்கு நூறு துல்லியமானது என்று சொல்ல முடியாது. இதை விஞ்ஞான ரீதியில் நிரூபிக்க முறையான ஆராய்ச்சிகள் எதுவும் நடத்தப்படவில்லை.

ஆனாலும் ஒருத்தர் எழுதும் எழுத்தின் வடிவத்தை வைத்து அவருடைய மனநிலையை ஓரளவுக்கு புரிந்து கொள்ளமுடியும் என்பது உண்மை. உளவியல் நிபுணர்கள் இதை ஒத்து கொள்கிறார்கள். ஒருவருடைய குணாதிசயத்தை கண்டுபிடிக்க இது மிகவும் உதவியாக இருக்கிறது.

கோடு போடாத வெள்ளைத்தாளில் ஒரு பேனாவால் 20 வரி எழுதிக் கொடுத்தால் போதும் நீங்கள் எப்படிப்பட்டவர்கள் என்று சொல்வதற்கு பல நிபுணர்கள் இருக்கிறார்கள்.

ஆங்கில எழுத்துக் களை அடிப்படையாக வைத்து விளக்கம் கொடுக்கிறார்களாம். இருந்தாலும் பிறமொழிகளில் எழுதுபவர்களின் குணநலனை கண்டுபிடிப்பதற்கும் பொதுவான விதி முறைகள் இருக்கிறதாம்.

ஒருத்தர் பெரிதாக இடைவெளி விட்டு எழுதினால் ஒழுக்கம், கட்டுப்பாடும் உள்ளவர். ஒரு தாளில் இருபக்கமும் 'மார்ஜின்' விட்டு எழுதினால் கலைநோக்கு உள்ளவர்களாகவும் எதிலும் பட்டும் படாமலும் இருக்கும் சுபாவம் உள்ளவர்களாகவும் இருப்பார்களாம். ஆங் கில எழுத்துக்களில் l, t, f ஆகிய எழுத்துக்களை அளவுக்கதிகமாக மேல்புறம் நீட்டி எழுதுபவர்கள்– குறிக்கோள் உள்ளவர்களாம்.

g,y,p போன்ற எழுத்துக்களை அளவுக்கதிகமாக கீழ் நோக்கி எழுதுபவர்கள் பாலியல் ஆர்வம் உள்ளவர்களாம்.

குறைவான 'மார்ஜின்' விட்டு எழுதுபவர்கள் சிக்கனமான பேர்வழிகள். இஸ்ரேலில் Graphology Institute ஐ நிறுவிய திருமதி அன்னா கொரன் இதையெல்லாம் சொல்கிறார். ஆகக் கூடிய நம்முடைய கையெழுத்தே போலிருக்கிறது.

அது இருக்கட்டும்.

ஒரு ஆள் கையில் ஒரு விலாசத்தை வைத்துக் கொண்டு வீட்டைத் தேடிக் கொண்டிருந்தார்.

அதில் விலாசத்தை எழுதிக் கொடுத்தார். ஏதோ அவசரத்தில் கிறுக்கிக் கொடுத்திருக்கிறார்.

ஒன்றும் புரியவில்லை.

வழியில் போகிறவர்களையெல்லாம் விசாரித்தார். யாருக்கும் அந்த எழுத்து விளங்கவில்லை.

இந்த ஆள் யோசித்தார். அருகில் ஒரு சிறிய மருத்துவமனை இருந்தது அங்கேபோய் கம்பவுண்டரை தேடிப்பிடித்தார். டாக்டரின் எழுத் தையே கண்டுபிடிப்பவராயிற்றே! அதனால் அவருடைய கையில் சீட்டைக் கொடுத்தார். அவர் சீட்டை வாங்கி அப்படியும் இப்படியும் பார்த்துவிட்டு இவரை நோக்கி போத்தல் கொண்டு வந்திருக்கிறீங்களா? என்றாராம் அவர்.

*தென்கச்சி கோ சுவாமிநாதன்*

# சைவசமய அறிவுப் பரீட்சையும் செயல்முறைப் போட்டியும்

வண்ணை சாந்தையர் மடம் ஸ்ரீ கற்பக விநாயகர் கோவில் சைவ சமய அபிவிருத்திக்கழகம், பாடசாலை மாணவர்களுக்கிடையில் சைவ சமய அறிவை விருத்திசெய்யும் பொருட்டு கடந்த 57 வருட காலமாக நடாத்தி வரும் சைவ சமய அறிவுப் பரீட்சை, செயல்முறைப் போட்டி ஆகியவற்றை இவ் வருடமும் நடாத்துவதற்கு ஏற்பாடுகள் செய்யப் பட்டுள்ளன.

சைவசமய அறிவுப் பரீட்சை தரம்–1 தொடக்கம் தரம் –13 வரையிலான மாணவர் மட்டத்திலும் கோலம்போடுதல், மாலைகட்டுதல், தோரணம் பின்னுதல் ஆகிய செயல் முறைப்போட்டிகள் வயது வேறுபாடின்றி சகலரும் பங்குபற்றும் வகையிலும் ஒழுங்கு செய்யப் பட்டுள்ளன.

சைவசமய அறிவுப் பரீட்சை எதிர்வரும் பெப்ரவரி மாதம் 27 ஆம் திகதி மற்றும் மார்ச் மாதம் 6ஆம் திகதிகளிலும் செயல்முறைப் போட்டி எதிர்வரும் மார்ச் மாதம் 14 ஆம் திகதியும் நடைபெறவுள்ளன. இவற்றிற்கான விண்ணப்ப முடிவுத் திகதி பெப்ரவரி 3ஆம் திகதியாகும்.

பரீட்சையிலும் போட்டியிலும் முதல் 3 இடங்களைப் பெறுபவர்களுக்கான பரிசில்கள் ஏப்ரல் 2ஆம் திகதியன்று வழங்கப்படும்.

மேற்படி பரீட்சையிலும் போட்டிகளிலும் பங்குபற்ற விரும்புவர்கள்சைவ சமய அபிவிருத்திக்கழக அறிவகம் இல.82, நாவலர் வீதி, வ ண் ணா ர் ப ண் ணை , யாழ்ப்பாணம் என்ற முகவரியுடன் தொடர்பு கொண்டு மேலதிக விபரங்களைப் பெற்றுக் கொள்ளலாம்.

அத்துடன் ஒருபாடசாலையிலிருந்து சைவசமய அறிவுப்பரீட்சைக்கு 100 பரீட்சார்த்திகள் தோற்றுவார்களாயின் அப்பாடசாலையை ஒரு பரீட்சை நிலையமாக அமைத்துக் கொள்ளலாம் என்றும் பாடசாலைகள், பரீட்சார்த்திகளின் பெயர்களை பட்டியலிட்டு விண்ணப்பிக்கலாம் என்றும் சைவசமய அபிவிருத்திக் கழகத்தின் பரீட்சை செயலர் சு.சிறீகாந்தன் அறிவித்துள்ளார். (ஸ்ரீ)

### கிளிநொச்சி மாவட்ட செயலகத்தால்

# மட்டக்களப்பு மக்களுக்கு வெள்ள நிவாரணப் பொருட்கள் அனுப்பிவைப்பு

மட்டக்களப்பு மாவட்டத்தில் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு கிளிநொச்சி மாவட்ட செயலயக்கதினால் கடந்த வாரம் உதவிப் பொருட்கள் அனுப்பி வைக்கப் பட்டுள்ளன.

இவ் உதவிப் பொருட்களானது, மட்டு மாவட்ட அரச அதிபர் எஸ். அருமைநாயகம் வேண்டுகோளுக்கு இணங்க அவரால் குறிப்பிடப் பட்ட சுமார் 7 இலட்சம் ரூபா பெறுமதியான பொருட்கள் கிளிநொச்சி மாவட்ட அரச அதிபர் திருமதி றூபவதி கேதீஸ்வரனால் அனுப்பி வைக்கப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இப்பொருட்கள் ஏனைய திணைக்களத் தலைவர்களின் ஒத்துழைப்போடு சேகரிக்கப்பட்டு லொறி மூலம் கிளிநொச்சி மாவட்ட உதவித் திட்டமிடல் பணிப்பாளர் எஸ்.கேதீஸ்வரன், கிளிநொச்சி மாவட்ட உதவி அனர்த்த முகாமைத்துவ இணைப்பாளர் ப.சுதர்சன் தலைமையின் கீழ் நேரடி யாகக் கொண்டு சென்று மட்டக்களப்பு மாவட்ட அரச அதிபரிடமும் மட்டு.மாவட்ட உதவி அனர்த்த முகாமைத்துவ இணைப்பாளர் லதாப் ஆகியோரிடமும் ஒப்படைக்கப்பட்டதாக குறிப்பிடப்படுகிறது.

கிளிநொச்சி மாவட்ட மக்களால் வழங்கப்பட்ட உதவிப் பொருட்கள் போதுமானதாக இல்லாவிடிலும் இப்பகுதி மக்கள் இடம் பெயர்ந்து மீளக்குடியமர்ந்த நிலையில் உதவிகள் புரிந்தமை பாராட்டுக்குரியதாகும் என கூறப் படுகிறது. (ஸ்ரீ–2)

# குடாநாட்டு சந்தைகளில் நேற்றைய விலை விபரம்

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | யாழ்ப்பாணம் | சாவகச்சேரி |
|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 180 | 240 | 200 |
| உருளைக்கிழங்கு | 60 | 70 | 60 |
| பச்சைமிளகாய் | 500 | 500 | 550 |
| தக்காளி | 80 | 80 | 140 |
| மரவள்ளிக்கிழங்கு | 40 | 60 | 50 |
| கோவா | 80 | 140 | 90 |
| கரட் | 120 | 160 | 120 |
| பூசணி | 40 | 40 | 30 |
| புடோல் | 100 | 120 | 90 |
| வாழைக்காய் | 40 | 60 | 50 |
| சின்ன வெங்காயம் | 300 | 300 | 280 |
| பெரிய வெங்காயம் | 120 | 100 | 120 |
| பாகற்காய் | 200 | 200 | 180 |
| வெண்டிக்காய் | 120 | 160 | 80 |
| கருணைக் கிழங்கு | 50 | 80 | 50 |
| பயற்றங்காய் | 200 | 200 | 200 |
| லீக்ஸ் | 120 | 200 | 100 |
| பீற்றூட் | 150 | 160 | 120 |
| கறிமிளகாய் | 300 | 300 | - |
| முருங்கைக்காய் | - | - | - |
| போஞ்சி | 160 | 240 | 170 |
| கத்தரிதம்புள்ள | 150 | 220 | 100 |
| கீரை – 1 பிடி | 40 | 30 | 30 |
| தேசிக்காய் | 50 | 70 | 90 |
| தேங்காய் (ஒன்று) | 50 | 50-60 | 45 |

# இராசி பலன்

*25.01.2011*

*(தை 11, செவ்வாய்க்கிழமை)*

*சூரிய உதயம் காலை 6.29 மணிக்கு*

*சஷ்டி பிற்பகல் 2.43 மணிவரை*

*அத்தம் பிற்பகல் 3.20 மணிவரை*

*இராகுகாலம் 3.36–5.06 மணிவரை*

*சுப நேரம் 11.06–12.36 மணிவரை*

**மேடம்** தேகாரோக்கியத்தில் தெளிவு பிறக்கும் நாள், கடன்களை வசூலிக்க எடுத்த முயற்சி வெற்றி பெறும், நல்லவர்களின் ஆதரவும் அறிவுரையும் கிடைக்கும்.

**இடபம்** அருமையான நாள், நீண்ட நாளைய கோரிக்கைகளை நிறைவேற்றி வைப்பீர்கள், பூர்வீகச் சொத்துக்கள் தொடர்பிலான பிரச்சனை நல்ல முடிவுக்கு வரும்.

**மிதுனம்** இயல்பான வாழ்க்கையில் இன்பங்கள் கூடும் நாள், வாகன மாற்றம்பற்றி சிந்திப்பீர்கள், பொதுக்காரியங்களில் நாட்டமுண்டு, தொலைபேசிமூலம் பொன்னான செய்தி வந்து சேரலாம்.

**கடகம்** கனிவான பேச்சால் காரியம் சாதிக்க வேண்டிய நாள், வியாபாரவிருத்திக்கு வித்திடுவீர்கள், நேற்றைய பிரச்சனை ஒன்று இன்று நல்ல முடிவுக்குவரும்.

**சிங்கம்** குடும்பத்தில் குதூகலம் அதிகரிக்கும், ஆடம்பரப்பொருட்களை வாங்கி மகிழ்வீர்கள், பேச்சில் இனிமை பிறக்கும், எண்ணங்கள் எளிதில் நிறைவேறும்.

**கன்னி** பெண் தெய்வ வழிபாட்டால் பெருமை காணவேண்டிய நாள், குடும்பத்தில் ஏற்பட்ட கருத்து வேறுபாடுகள் அகலும், பணத் தேவைகள் இறுதி நேரத்தில் பூர்த்தியாகும்.

**துலாம்** ஒரு சில வேலைகளுக்காக நீண்ட நேரம் காத்திருக்க வேண்டிவரலாம், வேலைச்சுமை அதிகரிக்கும், தொழில் கூட்டாளிகளிடம் கூடுதல் கவனம் தேவை.

**விருச்சிகம்** வியக்கும் செய்தி வீடுவந்து சேரும், சகோதர ஒற்றுமை பலப்படும், கொடுக்கல் வாங்கல்கள் சீராகும், வீட்டுத்தேவைகள் பூர்த்தியாகும், போசன சுகமுண்டு.

**தனுசு** வருங்கால நலன் கருதி எடுத்த முயற்சி வெற்றி தரும், நண்பர்களின் ஒத்துழைப்புண்டு, உடல் நலம் உற்சாகமாக இருக்கும், சுபசெய்திகள் வந்துசேரலாம்.

**மகரம்** போட்டியாக இருந்தவர்கள் இனி மனம் மாறுவர், மருத்துவச் செலவு குறைந்து மன நிம்மதியை கொடுக்கும், திடீர் பயணவாய்ப்புக்கள் வந்து சேரலாம், சொத்துப் பிணக்குகள் தீரும்.

**கும்பம்** துயர்கள் தீர கணபதியை வழிபட வேண்டிய நாள், மற்றவர்களிடம் பேசும் போது நிதானத்தை கடைப் பிடிப்பது நல்லது, பிரயாணங்களில் கூடிய கவனம் அவசியம்.

**மீனம்** இனசனத் தொடர்புகள் அதிகரிக்கும், விட்டுப்போன வரன்கள் மீண்டும் வந்து சேரலாம், கணவன்- மனைவியிடையே அந்நியோன்னியம் அதிகரிக்கும்.

வளவன்

# அரச நிறுவனங்களில் சுதந்திரதின நிகழ்வு

(அல்வாய்)

பொதுநிர்வாக உள்நாட்டு அலுவல்கள் அமைச்சின் செயலாளர் 63 ஆவது சுதந்திர தின விழாவை முன்னிட்டு சகல அரச நிறுவனங்களிலும் எதிர்வரும் பெப்ரவரி மாதம் 4 ஆம் திகதி வெள்ளிக்கிழமை மு.ப.8.50 மணிக்கு தேசியக் கொடியேற்றி தேசிய கீதம் இசைக்குமாறும் பொதுமக்களின் நன்மைக்கான முக்கிய பணிகளை இனங்கண்டு அவற்றிற்குரிய நடவடிக்கைகளை சிரமதான மட்டத்தில் ஏற்படுத்துமாறும் கேட்டுள்ளார்.

இதனைப் பருத்தித்துறை பிரதேச செயலர் இரா.வரதீஸ்வரன் பருத்தித்துறை பிரதேசத்திற்கு உட்பட்ட சகல பாடசாலைகளுக்கும் அரச திணைக்களங்களிற்கும் கடிதமூலம் அறிவித்துள்ளார். (ஸ்ரீ-3-19)

# சட்டவிரோதமாக மண் ஏற்றி சென்ற நபருக்கு ரூ.50 ஆயிரம் அபராதம்

(கரவெட்டி)

சாவகச்சேரி நகரப் பகுதியில் சட்ட விரோதமான முறையில் மண் ஏற்றிச் சென்ற நபருக்கு 50 ஆயிரம் ரூபா அபராதம் விதித்து சாவகச்சேரி நீதிமன்றம் தீர்ப்பளித்துள்ளது.

சாவகச்சேரி நகரப்பகுதியில் சட்டவிரோதமான முறையிலும் அனுமதிப்பத்திரம் இல்லாமலும் உழவு இயந்திரத்தைப் பயன்படுத்தி மண் ஏற்றிச் சென்றவேளை சந்தேக நபரை சாவகச்சேரி பொலிஸார் கைது செய்துள்ளனர்.மேற்படி சந்தேக நபரை சாவகச்சேரி பொலிஸார் நேற்றைய தினம் மாவட்ட நீதிபதி மாணிக்கவாசகம் கணேசராசா முன்னிலையில் மன்றில் ஆஜர்படுத்தினர்.

வழக்கை விசாரித்த நீதிபதி சந்தேகநபர் மன்றில் குற்றத்தை ஒப்புக்கொண்டமையால் குற்றவாளியாகக் கண்டு 50 ஆயிரம் ரூபா அபராதம் செலுத்துமாறு மண்ணை மன்றினால் பறிமுதல் செய்யுமாறும் உத்தரவிட்டதுடன் வாகனத்தைப் பெறுவது தொடர்பாக அடுத்த தவணைக்கு வழக்கை ஒத்திவைத்தார்.

(ஸ்ரீ-3-24)

# 18 வயதுக்கு குறைந்த பெண்களின் பிரசவங்கள் குறித்து அறிவிக்க கோரிக்கை

(அல்வாய்)

யாழ்.மாவட்டத்தில் உள்ள வைத்தியசாலைகள், ஆரம்ப சுகாதார நிலையங்கள், மகப்பேற்று விடுதிகள் மற்றும் தனியார் வைத்தியசாலைகள் என்பனவற்றில் 18 வயதுக்குக் குறைந்த திருமணமாகாத இளம் பெண்களுக்கு பிரசவம் செய்வதாயின் அது பற்றி யாழ்.மாவட்ட சுகாதார பணிமனைக்கு அறிவிக்க வேண்டும்.

இது தொடர்பான நடவடிக்கைகளை சுகாதார திணைக்களம் மேற்கொள்ளவுள்ளது.

இதனை மீறுவோர் மீது சட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்படுமென யாழ்மாவட்ட சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்திய கலாநிதி எஸ்.கேதீஸ்வரன் அறிவித்துள்ளார்.

(ஸ்ரீ-3-19)

# பொலிஸாரின் நடவடிக்கையையடுத்து குற்றச்செயல்கள் குறைந்துள்ளன

(பொலிகண்டி)

வல்வெட்டித்துறைப் பிரதேசத்தில் குறிப்பாக கம்பர்மலைப் பகுதியில் பொலிஸார் சுற்றுக் காவல் நடவடிக்கையை அதிகரித்துள்ளனர்.

இதனால் கம்பர்மலைப் பகுதிகளில் இடம்பெறும் திருட்டுச் சம்பவங்கள், சந்திகளில் இளைஞர்கள் ஒன்று கூடுவது மட்டுமன்றி பெண்கள் மீது சேஷ்டைவிடும் சம்பவங்கள் போன்ற நடவடிக்கைகள் குறைந்துள்ளன.

சமீப காலமாக சந்திகளில் இளைஞர் வட்டம் ஒன்று கூடுவதும் இதனால் போவோர் வருவோர் பல இடையூறுகளை அனுபவிப்பதனையும் நேரடியாக அவதானிக்க முடிந்தது.

தற்போது சந்திகளில் இரண்டு பேருக்கு மேல் ஒன்றுகூடக் கூடாது எனவும் கம்பர்மலை பாரதி சனசமூக நிலையத்திற்கு முன் பகுதிகளிலோ யாரும் நின்று செல்போன் கதைக்க கூடாது என்றும் பொலிஸார் அறிவுறுத்தியுள்ளனர்.

இது தொடர்பாக பாரதி சனசமூக அறிவுறுத்தல் பலகையில் எழுதப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது. பொலிஸாரின் இந்நடவடிக்கையை அப்பகுதி மக்கள் பாராட்டியுள்ளனர்.

(ஸ்ரீ-3-48)

# தரம் 9 இலிருந்து சகல வகுப்புக்களிலும் சுகாதார கழகங்கள் அமைக்கப்படவுள்ளன


(அல்வாய்)

பாடசாலை மாணவர்களிடையே சுகாதார விழிப்புணர்வை ஏற்படுத்தும் முகமாக தரம் 9 இல் இருந்து சகல வகுப்புக்களிலும் சுகாதார கழகங்கள் அமைக்கப்படவுள்ளன.

இதற்கான நடவடிக்கைகளை யாழ்.பிராந்திய சுகாதாரப் பணிப்பாளர் வைத்திய கலாநிதி ஆ.கேதீஸ்வரன் மேற்கொண்டுள்ளார்.

சகல கல்வி வலயங்களிலும் நடைபெறும் அதிபர் கூட்டங்களுக்குச் சென்று பாடசாலைகளில் சுகாதார கழகங்கள் அமைக்க வேண்டிய அவசர தேவையையும் சுட்டிக்காட்டி வருகின்றார்.

(ஸ்ரீ-3-19)



புலோலி தெற்கு சின்னத்தாய் சித்தி விநாயகர் ஆலயத்தில் நடைபெற்ற திருவாசக முற்றோதலில் பங்குபற்றிய அடியார்களைப் படத்தில் காணலாம். (படங்கள்:- மருதங்கேணி செய்தியாளர்)

# புத்தாக்கங்களை ஒப்படைக்கவும்

(யாழ்ப்பாணம்)

வலிகாமம் கல்வி வலயத்திற்குட்பட்ட பாடசாலை மாணவர்கள், ஆசிரியர்களினால் ஆக்கப்பட்ட புத்தாக்கங்கள் மற்றும் கண்டுபிடிப்புக் கருவிகளை இன்று பிற்பகல் 2.00 மணிக்கும் 4.00 மணிக்கும் இடையில் வலிகாமம் வலயக் கல்வி அலுவலகத்தில் ஒப்படைக்குமாறு வலயக் கல்விப் பணிப்பாளர் ஆ.ராஜேந்திரன் கேட்டுள்ளார். (ந)

# 1008 சங்காபிஷேகம்

(பொலிகண்டி)

பொலிகண்டி தியலம்பற்றை வீரபத்திரர் ஆலயத்தில் வீரபத்திர சுவாமிக்கும் ஏனைய பரிவாரமூர்த்திகளுக்கும் 1008 சங்காபிஷேகம் இன்று செவ்வாய்க்கிழமை காலை 10.30 மணியளவில் நடைபெறவுள்ளது.

தொடர்ந்து 12 மணியளவில் மகேஸ்வர பூசை இடம் பெறும் என ஆலய பரிபாலன சபையினர் அறிவித்துள்ளனர். (ஸ்ரீ-3-48)

# இசைக்கச்சேரி

(மருதங்கேணி)

ஸ்ரீ வல்லிபுர ஆழ்வார் ஆலய சூழலில் அமைந்திருக்கும் பெரியாழ்வார் ஆச்சிரமத்தில் பிரதி ஞாயிற்றுக்கிழமை தோறும் நடைபெற்றுவரும் ஆன்மீக நிகழ்வு தொடரில் எதிர்வரும் 30 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை பகல் 10 மணி பூசை முடிவுற்றதும் யாழ். பல்கலைக்கழக மாணவர்களின் இசைக் கச்சேரி நிகழ்த்தப்படவுள்ளது.

(ஸ்ரீ-3-35)

# ஞானச்சுடர் வெளியீடு

(மருதங்கேணி)

தொண்டைமானாறு செல்வ சந்நிதி ஆலய சூழலில் அமைந்திருக்கும் சந்நிதியான் ஆச்சிரம சைவகலை பண்பாட்டுப் பேரவையினால் மாதம் தோறும் வெளியிடப்படும் 'ஞானசுடர்' ஆன்மீக சஞ்சிகை 157 ஆம் வெளியீடும் 14 ஆம் ஆண்டு ஆரம்ப நிகழ்வும் எதிர்வரும் 30 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை மு.ப.10.30 மணிக்கு இடம் பெறவுள்ளது.

வெளியீட்டுரையை செஞ்சொற்செல்வர் ஆறுதிருமுருகன், மதிப்பீட்டுரையை வல்வை சிவகுரு வித்தியாலய அதிபர் ஆ.சிவநாதன் ஆகியோர் வழங்கவுள்ளனர்.

(ஸ்ரீ-3-35)

# பொதுக்கூட்டம்

(யாழ்ப்பாணம்)

யா/புன்னாலைக்கட்டுவன் மகாவித்தியாலயத்தின் பொதுக்கூட்டமும், புதிய நிர்வாக சபைத்தெரிவும் இன்று செவ்வாய்க்கிழமை பிற்பகல் 2.30 மணிக்கு வித்தியாலய அதிபர் இரா.ஜெயக்குமார் தலைமையில் நடைபெறவுள்ளது.

இக்கூட்டத்தில் கட்டாயக் கல்விக்குழு, விளையாட்டுக்குழு என்பன தெரிவு செய்யப்படவுள்ளதாக பாடசாலை அதிபர் தெரிவித்துள்ளார். (ஸ்ரீ-9)

# சைக்கிளை தவறவிட்டோர் தொடர்பு கொள்ளவும்

(கரவெட்டி)

நெல்லியடி பகுதியில் அண்மையில் களவாடப்பட்ட 15 துவிச்சக்கர வண்டிகளை மீட்ட நெல்லியடி பொலிஸார் அவற்றை பருத்தித்துறை மாவட்ட நீதிமன்றத்தில் கடந்த 20 ஆம் திகதி பாரப்படுத்தி உள்ளனர்.

துவிச்சக்கரவண்டிகளை களவு கொடுத்த உரிமையாளர்கள் தமது துவிச்சக்கர வண்டிகளை அடையாளம் காட்டுமாறும் துவிச்சக்கர வண்டிகளை மீட்பதற்கு ஏற்பாடு செய்யுமாறு பருத்தித்துறை நீதவான் நீதிமன்ற பதில் பதிவாளர் வி.தர்மகுலசிங்கம் அறிவித்துள்ளார். (ஸ்ரீ-3-24)




# புதுமைமாதா ஆலய கொடியேற்றம்

(குருநகர்)

குருநகர் பாங்சால் வீதியில் அமைந்துள்ள புதுமை மாதா ஆலய திருவிழாக் கொடியேற்றம் இன்று செவ்வாய்க்கிழமை காலை 6 மணிக்கு திருப்பலி முடிந்ததும் பங்குத் தந்தை ஆர்.நேசராசா அடிகளாரால் ஏற்றி வைக்கப்படவுள்ளது.

வழமைபோல் நவநாள் தினமும் மாலை 5 மணிக்கு ஆரம்பமாகி தொடர்ந்து நடைபெற்று எதிர்வரும் 3 ஆம் திகதி வியாழக்கிழமை திருநாள் திருப்பலி நடைபெறவுள்ளது. (ஸ்ரீ-3-39)

# பொதுக்கூட்டமும் மாணவர் கௌரவிப்பும்

(பொலிகண்டி)

தொண்டைமானாறு அரசடி கலைவாணி சனசமூக நிலையத்தின் வருடாந்த பொதுக் கூட்டமும் நிர்வாக சபைத் தெரிவும் இன்று செவ்வாய்க்கிழமை பி.ப 2.30 மணிக்கு சனசமூக நிலைய மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இதில் இப்பிரதேசத்தில் 5 ஆம் ஆண்டுப் புலமைப்பரிசில் பரீட்சையில் சிறந்த பெறுபேறுகளைப் பெற்ற மாணவர்களையும் பல்கலைக்கழகத்திற்கும் தெரிவு செய்யப் பட்டமாணவர்களையும் கௌரவிக்கும் நிகழ்வும் நடைபெறவுள்ளது.


இக்கூட்டத்திற்கு அங்கத்தவர்கள், கழக உறுப்பினர்கள், நலன் விரும்பிகள் அனைவரையும் கலந்து சிறப்பிக்குமாறு சனசமூக நிலைய நிர்வாகத்தினர் அறிவித்துள்ளனர். (ஸ்ரீ-3-48)

# யாழில் நீண்டகாலமாக புனரமைக்கப்படாத வீதிகள் யாவும் திருத்தி அமைக்கப்படும்

## வட மாகாண வீதி அபிவிருத்தி திணைக்களப் பணிப்பாளர் தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்டத்தில் நீண்டகாலமாக புனர



மைக்கப்படாத வீதிகள் திருத்தி அமைக்கப் படவுள்ளதாக வடமாகாண வீதி அபிவிருத் தித்திணைக்கள பணிப்பாளர் ரி.சிவராஜ லிங்கம் தெரிவித்துள்ளார்.

வடமாகாண வீதி அபிவிருத்தி பணிப்பா ளர் அலுவலகம் நேற்று நல்லூர் நாவலர் வீதி யில் பணிகளை ஆரம்பித்துள்ளது.

இதில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில் ,

வடமாகாண வீதி அபிவிருத்தி பணிப்பா ளர் அலுவலகம் இதுவரை காலமும் திரு கோணமலையில் இயங்கிவந்தது.

இன்று முதல் யாழ்ப்பாணத்தில் தனது பணியை மேற்கொள்ளவுள்ளதோடு உட்கட்ட மைப்பு வசதிகளையும் அதிகரிக்கவுள்ளது.

வடமாகாண ஆளுநர் மேஜர் ஜெனரல் ஜி.ஏ. சந்திரசிறியின் பணிப்பிற்கமைய இந்த அலுவலகம் இங்கு இடமாற்றப்பட்டுள்ள தோடு நீண்டகாலமாக புனரமைக்கப்படாத வீதிகளும் திருத்தி அமைக்கப்படவுள்ளன.

இதற்கமைய யாழ். மாவட்டத்தில் உள்ள வீதிகள் புனரமைப்புக்கென 20 மில்லியன் அமெரிக்க டொலர் நிதி ஒதுக்கீடு செய்யப்பட் டுள்ளதோடு வவுனியா மற்றும் மன்னார் மாவட்டங்களில் உள்ள வீதிகள் புனர மைப்புக்கென 240 மில்லியன் ரூபா நிதியும் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதாக தெரிவித்தார்.

மக்களின்போக் குவரத்து வசதி களை இலகு படுத்தி துரிதப் படுத் தும் நோக்குட னுமே இந்த வீதி அபிவிருத்தி பணி கள் மேற் கொள் ளப்பட வேண்டி யது முக்கியமான தாகவுள்ளது.

மேலும் இந்த வீதி அபிவிருத் திப் பணிகளில் குறிப் பாக 160 கி. மீற்றர் நீளமான மாகாண சபை வீதிகளும் 100 கி. மீற்றர் நீள மான உள்ளூ ராட்சி சபை வீதிக ளும் துரித கதி யில் அபிவிரு த்தி மேற்கொள்ளப்பட வுள்ளன.

இதற்கென உலக வங்கி நிதி யுதவி வழங்கு கின்றமையும் இங்கு குறிப் பிடத் தக்கது என அவர் மேலும் தெரிவித் தார்.

(ஸ்ரீ-2-6)



**திருமதி ஞானபதி பரமேஸ்வரன்**

**(இளைப்பாறிய பரிசாரகர், யாழ்.போதனா வைத்தியசாலை)**

மானிப்பாய் மேற்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி ஞானபதி பரமேஸ்வரன் 22.01.2011 சனிக்கிழமை அகால மரணமானார். அன்னார் காலஞ்சென்றவர்களான யோகரட்ணம் செல்லம்மா தம்பதியினரின் அன்பு மகளும் காலஞ் சென்ற வீரவாகு மற்றும் இரத்தினம்மா ஆகியோரின் அன்பு மருமகளும், சீனியர் வீரவாகு பரமேஸ்வரனின் (இளைப் பாறிய கல்வித்திணைக்கள கணக்குப் பதிவு உத்தியோகத்தர்) அன்பு மனைவியும் அமரர் முரளிதரன் மற்றும் London ஐச் சேர்ந்தவர்களான ஞானகௌரி, சுமங்கலி, பரணிதரன் மற்றும் நிஜாந்தினி (Colombo) ஆகியோரின் அன்புத் தாயாரும், London ஐச் சேர்ந்தவர்களான ஜீவராஜன், தேவபாலன், காயத்திரி மற்றும் துஸ்யந்தன் (Colombo) ஆகியோரின் அன்பு மாமியாரும் செந்திமலர், துரைசிங்கம், பூபாலசிங்கம், சிலோசனாவதி, அற்புதவதி, சந்திராவதி, கமலாவதி ஆகியோரின் அன்புச் சகோதரியும் London ஐச் சேர்ந்தவர்களான விதுஷன், அமிஷா, ஆரணி, அபிந்தா, விஸ்ணு மற்றும் பிரவினி (Colombo) ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும், செல்வமலர், லிங்கமலர், தியாகலிங்கம், சுந்தரலிங்கம் ஆகியோரின் சிறிய தாயாரும், பிரலாத் (தீசன்) (London), சசிலா, வனஜா, அனுஷா, அஜந்தா, எழிலரசி, தர்சன், நிஷாத் ஆகியோரின் அன்பு பெரியதாயாரும், விமல்ராஜ், ரவிராஜ், பத்மராஜ், சுமதி, அகிலன், சுதா, திருமதி சங்கரி பிரலாத் ஆகியோரின் அன்பு மாமியாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் 25.01.2011 இன்று செவ்வாய்க்கிழமை நண்பகல் 12 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக பிப்பிலி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

மானிப்பாய் மேற்கு,
மானிப்பாய்.
0777563031

தகவல்
வீரவாகு பரமேஸ்வரன்
(கணவர்)

(3572)

# 23 உள்ளூராட்சி மன்றங்களின் ஆட்சிக்காலம் 3 மாதங்களுக்கு நீடிப்பு

(கொழும்பு)

தேர்தல் நடத்தப்படாத உள்ளூராட்சி மன் றங்களின் ஆட்சிக்காலம் மேலும் 3 மாதங் களுக்கு நீடிக்கப்படவுள்ளது.

23 உள்ளூராட்சி மன்றங்களின் தவ ணைக் காலம் இவ்வாறு மேலும் 3 மாதங் களுக்கு நீடிக்கப்பட்டுள்ளது.

16 மாநகரசபைகள், 2 நகரசபைகள்,5 பிரதேச சபைகள் ஆகியவற்றின் தவணைக் காலங்கள் இவ்வாறு நீடிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இதன்படி எதிர்வரும் ஜூன் மாதம் 30 ஆம் திகதி வரையில் தவணைக்காலம் நீடிக்கப் படும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை பொதுமக்கள் பாதுகாப்புத் தேவைகருதி இந்த உள்ளூராட்சி மன்றங் களின் தவணைக்காலம் நீடிக்கப்படுவதாக பாதுகாப்பு அமைச்சர் ஜனாதிபதி மகிந்த ராஜ பக்ஷ வர்த்தமானி மூலம் அறிவித்துள் ளார்.

(ஸ்ரீ-2)

# ஊடகவியலாளர்களுக்கான செயலமர்வு

(கொழும்பு)

பிராந்திய ஊடகவியலாளர்களுக்கான தகவல் தொழில்நுட்பம் தொடர்பான முதலா வது செயலமர்வு பெப்ரவரி மாதம் முத லாம் திகதி தொடக்கம் கொழும்பு நாரஹேன் பிட்டி யில் உள்ள தேசிய தொலைக்கல்வி நிலையத் தில் நடாத்தப்படவுள்ளது.

இச் செயலமர்வு ஊடக அமைச்சின் அரசாங்கத் தகவல் திணைக்களம்,கல்வி அமைச்சின் தேசிய தொலைக்கல்வி நிலை யம் என்பனவற்றினால் ஒழுங்கு செய்யப் பட்டுள்ளது.

அமைச்சர்கள் கெஹலிய ரம்புக்வெல , எஸ்.பி.திஸாநாயக்க ஆகியோர் இதில் கலந்து கொள்ளவுள்ளனர்.

19 மாவட்டங்களில் உள்ள 20 நிலையங் களைச் சேர்ந்த 500 ஊடகவியலாளர்கள் ஒரே தடவையில் இந்தச் செயலமர்வில் கலந்துகொள்வது விசேட அம்சமாகும்.

இணையத்தள பாவனை , ஈமெயில் , புகைப்பட வலையமைப்பு போன்ற விடயங் கள் பற்றி இந்தச் செயலமர்வில் கருத்துரை கள் வழங்கப்படும்.

கொழும்பில் விரிவுரைகளும் செயலமர்வு களும் நடாத்தப்படுகின்ற போதிலும் ஒவ் வொரு நிலையத்தையும் சேர்ந்த போதனாசி ரியர்கள் தேவையான விளக்கங்களையும் ஆலோசனைகளையும் ஊடகவியலாளர்க ளுக்கு வழங்குவார்கள்.

தமிழ் ஊடகவியலாளர்களுக்கென தமிழ் மொழியில் விளக்கம் அளிக்கப்படும்.

இதில் பங்கு பற்றுபவர்களிடமிருந்து கட்டணம் எது வும் அறவிடப்படமாட்டாது. இவர்களுக்கு சான்றிதழ்களும் வழங்கப் படும்.

இதே போன்ற செயலமர்வு பாடசாலை மாண வர்க ளுக்கு என பாடசாலையில் உள்ள ஊடகமை யங்களில் நாடெங்கிலும் நடத்தப்படவுள்ளது.

(ஸ்ரீ-4-9)

# நாட்டில் அரிசிக்கு தட்டுப்பாடு இல்லை

## அமைச்சர் ஜோன்ஸ்டன் தெரிவிப்பு

நாட்டில் அரிசி தட்டுப்பாடில்லை என்றும் எக்காரணம் கொண்டும் அரிசி இறக்குமதி செய்யப்படமாட்டாது என வர்த்தக மற்றும் நுகர் வோர் விவகார அமைச்சர் ஜோன்ஸ்டன் பெர் னாண்டோ தெரிவித்தார்.

தற்போது நெல் சந்தைப்படுத்தல் சபை யிடம் இரண்டு இலட்சம் மெற்றிக் தொன் நெல்லும் தனியார் துறையிடம் ஆறு இலட் சம் மெற்றிக் தொன் நெல்லும் கைவசம் உள் ளது.

இதனால் எக்காரணம் கொண்டும் நாட் டில் அரிசிக்கு தட்டுப்பாடு வரும் பேச்சுக்கே இடம் இருக்காது. இந்த வருடத்தின் முதல் ஆறு மாத காலத்தில் எக்காரணத்தாலும் அரிசி அல்லது நெல் வெளிநாடுகளிலிருந்து இறக் குமதி செய்யப்படமாட்டாது என்றும் அமைச் சர் தெரிவித்தார்.

எதிர்வரும் பெப்ரவரி மாத இறுதியில் நாட் டில் பெரும்போக நெல் அறுவடை இடம் பெறும் என்றும் அதனால் நாட்டில் கையிருப் பிலுள்ள நெல் அல்லது அரிசியின் தொகை மேலும் அதிகரிக்கும் எனவும் சுட்டிக்காட்டி னார்.

(ஸ்ரீ-2)

# மின்சாரம் தாக்கி ஒருவர் மரணம்

அன்டனா பொருத்தியிருந்த இரும்பு கம் பியினை அகற்ற முற்பட்ட போது மின்சாரம் தாக்கி ஒருவர் அவ்விடத்திலேயே உயிரிழந்த தோடு மற்றுமொருவர் எரிகாயங் களுக்கு உள் ளான சம்பவமொன்று ஏறாவூர் பிரதேசத்தில் இடம்பெற்றுள்ளது.

நேற்றுமுன்தினம் காலை 11 மணியள வில் ஏறாவூர் உதாபள்ளி வீதியில் இருவர் தனது வீட்டுக்கு முன்பாக இருந்த குறித்த அந்த இரும்பு கம்பியினை அகற்ற முற்பட்ட போது அது அருகிலிருந்த மின்சார கம்பி யின் மீது விழுந்ததாலேயே இவ்விபத்து நேர்ந்துள்ளது.

உயிரிழந்தவர் 36 வயதுடைய நைனா முகமது நஹிப் என்றும் காயத்திற்குள்ளா னவர் 32 வயதுடைய தனுஷ் எனவும் பொலி ஸார் தெரிவிக்கின்றனர்.

காயத்திற்குள்ளானவர் மட்டக்களப்பு பொது வைத்தியசாலையில் அனுமதிக்கப் பட்டுள்ளார்.

(ஸ்ரீ-2)



துன்னாலை அல்லையம்பதி வடிவேலர் மணிமண்டபத்தில் பண்பாட்டு விழா அண்மையில் நடைபெற்றது. இந்நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்ட பண்டிதர் பொன்.சுகந்தன் மாணவர் ஒருவருக்குப் பரிசில் வழங்குவதைப் படத்தில் காணலாம். (படம்: மருதங்கேணிச் செய்தியாளர்)

# கிளி.மின்பாவனையாளர் சேவை நிலையமூடாக 3 ஆயிரத்துக்கும் மேற்பட்டோருக்கு மின்னிணைப்பு

## கிளிநொச்சி மாவட்ட மின் அத்தியட்சகர் தெரிவிப்பு

(கிளிநொச்சி)

கிளிநொச்சி , முல்லைத்தீவு மற்றும் வவுனியா மாவட்டத்தின் வவுனியா வடக்கு பிரதேச செயலர் பிரிவுகளில் இதுவரையில் மூவாயிரத்துக்கும் மேற்பட்ட மின் பாவனையாளர்கள் மின்னிணைப்பைப் பெற்று பயனடைந்து வருவதாக இலங்கை மின்சாரசபையின் கிளிநொச்சி மாவட்ட மின் அத்தியட்சகர் தி.குகராஜ் தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பாக அவர் மேலும் கருத்துத் தெரிவிக்கையில்,

கிளிநொச்சி, முல்லைத்தீவு, வவுனியா மாவட்டத்தின் வவுனியா வடக்கு பிரதேச செயலர் பிரிவுகளில் உள்ள மின்பாவனையாளர்களிற்கான சேவையினை கிளிநொச்சியில் அமைந்துள்ள மின்பாவனையாளர் சேவை நிலையமே இதுவரையில் மேற்கொண்டிருந்தது. கடந்த 5 ஆம் திகதி தொடக்கம் முல்லைத்தீவு நகரில் மின்பாவனையாளர் சேவை நிலையமொன்று இயங்கி வரும் நிலையில் முல்லைத்தீவு , முள்ளியவளை, தண்ணீரூற்று , ஒட்டுசுட்டான் , நெடுங்கேணி போன்ற இடங்களினைச் சேர்ந்த மின்பாவனையாளர்கள் இச்சேவை நிலையமூடாகவும் சேவையினைப் பெற்று வருகின்றனர்.

முல்லைத்தீவு மாவட்டத்தில் மாந்தை கிழக்கு , துணுக்காய் பிரதேச செயலர் பிரிவு , வவுனியா மாவட்டத்தின் வவுனியா வடக்கு பிரதேச செயலர் பிரிவுகளிற்குட்பட்ட மின் பாவனையாளர்கள் இலங்கை மின்சாரசபையின் கிளிநொச்சி, வவுனியா மின்பாவனையாளர் சேவை நிலையங்களூடாகவும் சேவையினைப் பெற்று வருகின்றனர்.

வடக்கின் வசந்தம் மீள் எழுச்சித்திட்டத்தின் மூலம் வீட்டுப்பாவனைக்கான மின்னிணைப்புகளை இலவசமாகவே நிபந்தனைகளிற்கு அமைய மேற்கொண்டு வருகின்றோம். கிளிநொச்சி மாவட்டத்தின் 19 படி குறைப்பு மின்மாற்றிகள் மூலமாகவும் முல்லைத்தீவு மாவட்டத்தில் 19 படி குறைப்பு மின்மாற்றிகள் மூலமும் பாவனை மின் அழுத்தமாக (220-240V) மாற்றம் செய்து வழங்கப்பட்டு வருகின்றது. தற்போது கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்டங்களில் புதிய மின்விநியோக மார்க்கங்களிற்கான மின்னிணைப்புப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருவதுடன் கிளிநொச்சி மாவட்டத்தில் கரைச்சி பிரதேச செயலர் பிரிவிற்குட்பட்ட இரத்தினபுரம், மருதநகர் , திருவையாறு, கோவிந்தன் கடைச்சந்தி, வட்டக்கச்சி, இராமநாதபுரம், கண்டாவளை பிரதேச செயலர் பிரிவிற்குட்பட்ட முரசு மோட்டை, தருமபுரம் , விசுவமடு போன்ற இடங்களிற்கும் மின்னிணைப்புப் பணிகள் பூர்த்தியடைந்ததும் மின் வழங்கல் செயற்பாடுகள் மேற்கொள்ளப்படும் எனவும் அவர் மேலும் தெரிவித்தார். (ஸ்ரீ-3-30)

# புதிய தொழிற்பயிற்சி கற்கைநெறிகள்

(கிளிநொச்சி)

தேசிய தொழிற்பயிற்சி அதிகார சபையின் கிளிநொச்சி மாவட்டச் செயலகத்தில் இயங்கும் தொழில்பயிற்சி நிலையத்தின் புதிய கற்கை நெறிகளிற்கு கற்கையாளர்கள் இணைத்துக் கொள்ளப்படவுள்ளனர்.

வீட்டுமின்னிணைப்பு, அலுமினிய (பிற்றிங்) பொருத்துகை ஆகிய தொழில்நுட்ப கற்கை நெறிகளிற்கு கிளிநொச்சி மாவட்டத்தில் வதியும் 18 வயதிற்கு மேற்பட்ட கற்கைநெறியை தொடர ஆர்வம் உடையவர்கள் மாவட்டச் செயலகத்தில் இயங்கும் தொழிற்பயிற்சி நிலையத்துடன் தொடர்பு கொள்ளலாம் என தேசிய தொழிற்பயிற்சி அதிகார சபையினர் அறிவித்துள்ளனர். (ஸ்ரீ-3-30)




# கிளிநொச்சி மாவட்டத்திலிருந்து பல்கலைக்கு தெரிவான மாணவர்களுக்கு மடிக்கணனிகள்

(கிளிநொச்சி)

மகேஸ்வரி நிதியம் மற்றும் வடமாகாண சபை ஆகியன இணைந்து வழங்கிய மடிக்கணனிகளை 2010 ஆம் ஆண்டு கல்விப் பொதுத்தராதர உயர்தரப் பரீட்சையில் அதிதிறமைச் சித்தியடிப்படையில் கிளிநொச்சி மாவட்டத்தில் இருந்து பல்கலைக்கழகத்திற்கு தெரிவான மாணவர்களிற்கு வழங்கப்பட்டுள்ளதாக கிளிநொச்சி வலய கல்விப் பணிப்பாளர் த. குருகுலராஜா தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் மேலும் கருத்துத் தெரிவிக்கையில் , 2010 ஆம் ஆண்டு க.பொ.த. (உ/த) பரீட்சையில் அதிதிறமைச் சித்தியடைந்த மாணவர்களில் கிளிநொச்சி மாவட்டத்தில் இருந்து பொறியியல்பீடத்திற்கு தெரிவான முதல் மூன்று நிலைகளைப் பெற்ற மாணவர்களிற்கும், மருத்துவ பீடத்திற்கு தெரிவான முதன் நான்கு நிலைகளைப் பெற்ற மாணவர்களிற்கும் முகாமைத்துவபீடம், கலைப்பீடம் ஆகியவற்றிற்குத் தெரிவான முதல் இரண்டு நிலைகளைப் பெற்ற தலா இரண்டு மாணவர்களிற்கும் மடிக்கணனிகள் வழங்கப்பட்டுள்ளன.

இதேவேளை முல்லைத்தீவு மாவட்டத்தில் இருந்து அதிதிறமைச் சித்தியடிப்படையில் பல்கலைக்கழகத்திற்கு தெரிவான பத்து மாணவர்களிற்கும் வவுனியா மாவட்டத்தில் இருந்து தெரிவான 14 மாணவர்களிற்கும் மன்னார் மாவட்டத்தில் இருந்து தெரிவான 11 மாணவர்களிற்கும் மடிக்கணனிகள் வழங்கப்பட்டுள்ளமை இங்கு குறிப்பிடத்தக்கது. (ஸ்ரீ-3-30)

# கிளிநொச்சி -ஸ்கந்தபுரம் பிரதான வீதி மிக மோசமாக சேதமடைந்துள்ளது

## பொதுமக்கள் விசனம்

கிளிநொச்சி -ஸ்கந்தபுரம் பிரதான வீதி மிக மோசமாகச் சேதமடைந்துள்ளதால் போக்குவரத்து செய்வதில் மிகுந்த சிரமங்களை எதிர்கொள்வதாக பொதுமக்கள் விசனம் தெரிவித்துள்ளனர்.

கிளிநொச்சியில் இருந்து கனகபுரம், கோணாவில், புதுமுறிப்பு, ஊற்றுப்புலம், ஸ்கந்தபுரம் போன்ற இடங்களினூடான பேருந்துச் சேவைகளும் முழங்காவில், ஜெயபுரம், வலைப்பாடு, மன்னார் ஆகிய இடங்களிற்குமான பேருந்துச் சேவைகளும் இவ் வீதியூடாகவே மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

இவ் வீதியானது மிக மோசமாகச் சேதமடைந்து குன்றும் குழியுமாகக் காணப்படுவதுடன் போக்குவரத்து செய்ய முடியாதளவு சேதமடைந்து காணப்படுகின்றது.

எனவே, இவ் வீதியினை திருத்துவதற்கு சம்பந்தப்பட்ட தரப்பினர் நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் என பொதுமக்கள் கோரிக்கை விடுக்கின்றனர். (ஸ்ரீ-3-30)

# யுவதி மீது பாலியல் சேஷ்டையில் ஈடுபட முயன்றவர் தாக்கப்பட்டார்

(கிளிநொச்சி)

கிளிநொச்சி கந்தன் குளப் பகுதியில் யுவதியொருவர் மீது பாலியல் சேஷ்டையில் ஈடுபட முயன்றவர் அப்பகுதி இளைஞர்களால் தாக்கப்பட்டுள்ளார். கிளிநொச்சி-கோணாவில் வீதியின் கந் தன் குளப்பகுதியின் கிளிநொச்சிச் சந்தைக்குச் சென்று பொருட்களைக் கொள்வனவு செய்து விட்டு அவ்வழியால் வந்து கொண்டிருந்த யுவதியொருவர் மீது பாலியல் சேஷ்டையில் ஈடுபட முயன்ற ஊற்றுப் புலத்தைச் சேர்ந்த 40 வயதுடைய நபரொருவர் கந்தன் குளப்பகுதியில் வைத்து நேற்றுக்காலை 8.50 மணியளவில் அப்பகுதி இளைஞர்களால் கடுமையாகத் தாக்கப்பட்டு எச்சரிக்கை செய்யப்பட்டு விடுவிக்கப்பட்டுள்ளதாக அறியமுடிகின்றது.

கடந்த காலத்தில் இப்பகுதியில் வைத்து யுவதியொருவர் பாலியல் வன்முறைக்குள்ளாக்கப்பட்டு படுகொலை செய்யப்பட்டிருந்ததுடன் சம்பவத்துடன் தொடர்புடைய நபரிற்கு மரணதண்டனை வழங்கப்பட்டிருந்ததும் குறிப்பிடத்தக்கது. (ஸ்ரீ-3-30)

# உமையாள்புரம், பரந்தன் கடற்றொழிலாளர் கூ.ச. பயனாளிகளுக்கு கடற்றொழில் உபகரணங்கள்

## இன்று வழங்கப்படவுள்ளன

(கிளிநொச்சி)

உமையாள்புரம், பரந்தன் கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்க பயனாளிகளிற்கு இன்று கடற்றொழில் உபகரணங்கள் வழங்கப்படவுள்ளதாக கரைச்சி வடக்கு கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கங்களின் சமாச பொது முகாமையாளர் இ.கணேசபிள்ளை தெரிவித்துள்ளார்.

இவ்விடயம் தொடர்பாக கருத்துத் தெரிவிக்கையில், கரைச்சி வடக்கு கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசத்தினால் கரைச்சி வடக்கு கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்க சமாசத்தின் தலைமைப் பணிமனையில் நடைபெறவுள்ள நிகழ்வில் வைத்து 10 பய னாளிகளிற்கு வள்ளங்களும் வலைகளும் வழங்கப்படவுள்ளதுடன் மேலும் 10 பயனாளிகளிற்கு வலைகளும் வழங்கப்படவுள்ளன. வள்ளங்களும் வலைகளும் வழங்கப்பட்ட கடற்றொழிலாளர்கள் இணைந்து கடற்றொழி லில் ஈடுபடல் வேண்டும்.

கரைச்சி வடக்குகடற்றொழிலாளர்கள் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசத்தில் ஏழு கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கங்கள் உள்ளன. இக்கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கங்களின் உமையாள்புரம் , பரந்தன் கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கத்துக்கு முதற்கட்டமாக கடற்றொழில் உபகரணங்கள் வழங்கப்படவுள்ளன.

இன்று நடைபெறவுள்ள நிகழ்விற்கு சிறப்பு விருந்தினராக ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியின் யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரும் நாடாளுமன்றக் குழுக்களின் பிரதித் தலைவருமான முருகேசு சந்திரகுமார் , கிளிநொச்சி மாவட்ட அரச அதிபர் திருமதி றூபவதி கேதீஸ்வரன் , கண்டாவளை பிரதேச செயலர் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளதாகவும் அவர் மேலும் குறிப்பிட்டார். (ஸ்ரீ-3-30)

# தட்டுவன்கொட்டிப் பகுதியில் இறால் பிடிக்கத்தடை

(கிளிநொச்சி)

தட்டுவன்கொட்டி சிறு கடற்பகுதியில் தற்போது கூடுகள் மற்றும் வலைகள் மூலம் இறால் பிடிக்கப்பட்டு வருகின்றது. இங்கு பிடிக்கப்படும் இறால் வகைகளின் பெரியவற்றை மட்டும் எடுத்துவிட்டு சிறிய இறால்களை (குஞ்சுகளை) வீணே வீசிவிட்டு செல்வதனை அவதானிக்க முடிகின்றது.

எனவே, இறால்களின் முதிர்பருவகாலமான பங்குனிமாதம் வரையில் இக்கடல் நீரேரிப் பகுதியில் இறால் பிடிப்பது தடை செய்யப்பட்டுள்ளதாகத் தெரிய வருகின்றது. (ஸ்ரீ-3-30)

# கிளிநொச்சி மாவட்டத்தில் 300 பேருக்கு வீடமைப்புக்கடன் வழங்கப்படவுள்ளது

கிளிநொச்சி மாவட்டத்தில் கரைச்சி, கண்டாவளை , பூநகரி, பச்சிலைப்பள்ளி ஆகிய நான்கு பிரதேச செயலர் பிரிவுகளிலும் அரச உத்தியோகத்தர் மற்றும் அரச உத்தியோகத்தர் தவிர்ந்த 300 பேருக்கு வீடமைப் புக்கடன் வழங்கப்படவுள்ளதாக தேசிய வீடமைப்பு அதிகாரசபையின் கிளிநொச்சி மாவட்ட முகாமையாளர் எம்.ரவீந்திரன் தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில், தேசிய வீடமைப்பு அதிகார சபையின் கிளிநொச்சி மாவட்ட அலுவலகத்தால் அரச உத்தியோகத்தருக்கு 3 இலட்சம் ரூபாவும் அரச உத்தியோகத்தர் அல்லாதோருக்கு 2 இலட்சம் ரூபாவும் வழங்கப்படவுள்ளது. இக்கடனினைப் பெறுவதற்கு இரு அரச உத்தியோகத்தர்களால் பிணை ஒப்பமிட்டு உறுதி செய்தல் வேண்டும்.

இவ்வீடமைப்பு கடனினைப் பெற விரும்புபவர்கள் விண்ணப்பப் படிவங்களை 155 ஆம் கட்டைப்பகுதியில் அமைந்துள்ள தேசிய வீடமைப்பு அதிகார சபையின் கிளிநொச்சி மாவட்ட அலுவலகத்தில் அலுவலக நேரத்தில் பெற்றுக் கொள்ளலாம் எனத் தெரிவித்தார். (ஸ்ரீ-3-30)

# உணவல்லாத பொருட்கள் விநியோகம்

வெள்ள அனர்த்தத்தால் பாதிக்கப்பட்ட மக்களிற்கு இலங்கை செஞ்சிலுவைச் சங்கத்தின் கிளிநொச்சி மாவட்ட அலுவலகத்தினால் கடந்த 20 ஆம் திகதி உணவல்லாத பொருட்கள் வழங்கப்பட்டுள்ளன.

கிளிநொச்சி மாவட்டத்தில் கண்டாவளை பிரதேச செயலர் பிரிவிற்குட்பட்ட பரந்தன், சிவபுரம் கிராம அலுவலர் பிரிவில் மூன்று அங்கத்தவர்களிற்கு மேற்பட்ட குடும்பங்களின் 100 வரையான குடும்பங்களிற்கு உணவல்லாத பொருட்கள் வழங்கப்பட்டுள்ளதாக இலங்கை செஞ்சிலுவைச் சங்கத்தின் கிளிநொச்சி மாவட்ட நிறைவேற்று அலுவலர் எம்.ஜி. சிவபாலன் தெரிவித்தார். (ஸ்ரீ-3-30)



# கள்ளிக்காட்டு இதிகாசம்

24



கவிப்பேரரசு வைரமுத்து

கடவுள் வேலைக்காரனாக முடியாது; வேலைக்காரன் கடவுளாக முடியாது. ஆனால் விவசாயக் கலாசாரத்தில் கடவுளாகவும் வேலைக்காரனாகவும் இருப்பது மாடுதான். வருசமெல்லாம் அடி வாங்குவதும் அதுதான். தைப்பொங்கல் வந்தால், அவனவன் அரசியலைக் கொம்புகளில் தாங்கிக் கொண்டு சூடம்சாம் பிராணியோடு வணங்கப்படுவதும் அதே மாடுதான்.

பெண்டாட்டி இழந்த சோகத்திலிருந்தே இன்னும் கரையேறாத பேயத்தேவர் மாடுகளையும் பறிகொடுத்த போது இடிவிழுந்த வீட்டில் தீயும் பிடித்தமாதிரி நொறுங்கிக் கருகிப்போனார்.

மொத்த ராத்திரியும் கெட்டிப்பட்டு விட்டது போலவும், இருட்டையெல்லாம் உருட்டித் திரட்டிக் கல்லாக்கி நெஞ்சுக் குழிக்குள் யாரோ போட்டுவிட்டுப் போய் விட்டது போலவும் இருந்தது.

“என்ன தாத்தா இது... பேய் பிடிச்சமாதிரி ஒக்காந்துக்கிட்டு...? எவன் வீட்டிலயாவது பண்ணைக்கிருந்தாச்சும் மாட்ட நான் மீட்டிட்டு வாரேன். பேசாமக் களியத் தின்னு.”

ஆறிப்போன களித்தட்டை அவரருகே நகர்த்தி வைத்தான் மொக்கராசு.

சில்லென்ற காற்றடித்ததும் மேகக் காம்பு ‘சொளக்’ கென்று சுரந்து கொள்வதுமாதிரி பேயத்தேவரின் தொண்டைக்குள்ளிருந்த சோகம் கன்னத்தில் குதித்தது கண்ணீராய்.

“ஏலே மொக்க! பெத்தபிள்ள செத்திருந்தாலும் இப்படி உசுர்கொறஞ்சு ஒக்கார மாட்டண்டா. ஒங்க மாமன் இருக்கானே மசுராண்டி... அவனக் கூட நான் தோள்லதூக்கி வளத்ததில்லடா. அந்த மயிலக்காளயத் தோள்ல தூக்கிச் சுமந்திருக்கன்டா. இந்தா... இந்தத் தொழுவத்துலதான் அது பெறந்துச்சு. தலையீத்துக் கன்டு. ஒரு நா நான் வெள்ளக்கரட்டுக்கு மாடு மேய்க்கப் போனா தாயோட கன்டும் வாரேன் வாரேன்னு வந்திருச்சு. உச்சிக்கரட்டுல மேச்சுமுடிச்சு வீடுதிரும்ப-மழை! அப்டி இப்டி மழை இல்ல. பேய் மழை-பிடாரி மழை. சாயங்காலம் வந்த விருந்தும் மழையும் போகாதுங்கிற மாதிரி அடிஅடின்னு அடிக்குது. எங்க பாத்தாலும் தண்ணிநிக்கிது. வழியில காட்டோ(டை)ட மறிச்சிக்கிருச்சு. ரெண்டாளுமட்டம் தண்ணிபோகுது. மாடுகள்லாம் நீந்திப்போகுது; ‘கன்டு’ மருகுது. என்ன பண்ண...? இந்த ரெண்டு தோள்ல தூக்குனேன் கன்னுக்குட்டிய. “தண்ணியோட நான் போனாலும் பரவாயில்ல கன்டக் கரைசேத்திரு சாமி”ன்னு பாரத்த சாமி மேல போட்டுட்டுக் கன்ட என் தோள்லபோட்டுக் கரைசேத்தன்டா...! அன்னைக்கி அது என் ஒடம்புல ஒட்டுன வாசன இன்னைக்கி வரைக்கும் மணக்குதடா.”

- பேயத்தேவர் ஒப்புச்சொல்லி அழுதார்.

“தாத்தா! வண்டிநாயக்கர் கால்ல விழுந்தாச்சும் காசுகீசு வாங்கி நாளைக்கே மாட்ட ஓட்டிட்டு வந்திருவோம். அந்தக் கடன நாங் கட்றேன்”-மொக்கராசு அழுத்திச் சொன்னான்.

“அதுக்கில்லடா மொக்க! நாம போய்ச் சேர்றதுக்குள்ள மாடு கைமாறாம இருக்கணுமே... கறிக்கு உரிக்காம இருக்கணுமே.”

கிழவனின் நியாயமான கவலையில் மூச்சுப் பேச்சில்லாமல் போனான் மொக்கராசு.

கள்ளிக்காட்டு வாழ்க்கை முறையில் ஆளை வெட்டுவது கூட அன்றாடம் என்று சகித்துக் கொள்வார்கள். மாட்டை வெட்டுவதை மன்னிக்கமாட்டார்கள். ஒரு கள்ளிக்காட்டு விவசாயி ஆட்டுக்கறி, கோழிக்கறி, பறவைக்கறி, பன்றிக்கறி, உடும்புக்கறி, எலிக்கறி கூடத் தின்னுவானே தவிர மாட்டுக்கறி தின்ன மாட்டான்.

மாட்டை அடித்துத் தின்னுவது என்பது குடும்பத்தில் ஓர் ஆளை அடித்துச் சாப்பிடுவதுமாதிரி. எந்தக் கறிக்கும் மாட்டுக்கறி தாழ்ந்ததல்ல. ஆனால் மாட்டுக்கறி தின்ன மாட்டேன் என்னும் விரதம் மாட்டின்மீது அவன் கொண்டுள்ள பாசம்; விசுவாசம். தனக்குச் சோறு போடும் மாட்டைக் கூறுபோட விரும்பாது கள்ளிக்காட்டுக் கலாசாரம். மானம், வருமானம், சாப்பாடு, வீடு இதெல்லாம் விவசாயம் இல்லாமல் இல்லை. அந்த விவசாயமே மாடு இல்லாமல் இல்லை.

வேட்டையாடித் தின்ற விலங்குகளை விவசாயத்திற்கு அடக்கிப் பூட்டியதில் தொடங்கியதுதான் மனிதகுலத்தின் நாகரிகம். காட்டுமாட்டை அடக்கி வென்ற முதல் மாட்டுக்காரன் அந்த இனக்குழுவின் தலைவனானான். காலம் அவனுக்குக் கண்ணுகாது மூக்குவைத்துச் சிவபெருமானாக்கியது. அவனைக் காளை மாட்டு வாகனத்தின் மீது அமர்த்திவேறு அழகுபார்த்தது. பிறகு அவனையே கடவுளாக்கிக் கைகூப்பியது. இப்படியெல்லாம் கருதிக்கொண்டு பேயத்தேவர் சிவபெருமானைச் சொந்தக்காரனாக்கிக் கொள்வார்.

ஆறிப்போன களியும் ஆறாத உள்ளமும் ரொம்ப நேரம் சண்டை பிடிக்க-கடைசியில் ஆறாத உள்ளமே வென்றது.

“எம் மாட்டுக்குக் கூளம் கீளம் போட்டு வச்சிருப்பாங்களோ...? இல்ல கொலபட்டினியாப் போட்டுக் கொன்டுபுடுவாங்களோ?”

நினைத்து நினைத்து - தொண்டை வலித்து வலித்து வார்த்தை கட்டிக்கொண்டது பேயத்தேவருக்கு.

ரெண்டு வயசிலிருந்து பதினாலுவருசமா அந்த வீட்டுக்கு ஓடாத்தேஞ்ச மாடு இல்லையா?

ஒண்ணு செவலக்காளை-இன்னொண்ணு மயிலக்காளை, ரெண்டு மாடுகளும் என்னா அழகு! என்னா பொருத்தம்! சோடி சேர்ந்து ரெண்டும் மூஞ்சியத் தூக்கி முன்னாங்கால் எட்டுவச்சு நடந்தா சும்மா எட்டுத் திசையும் விட்டெறியுமே!

மதுரை மீனாட்சியம்மன் கோயில் கோபுரம் ரெண்டு மேலமாசிவீதியில் இறங்கி ஒன்னப்பாரு என்னப் பாருன்னு நடந்துபோனா எப்படியிருக்கும்? பேயத்தேவர் மாடு ரெண்டும் நடந்துபோனா அப்படியிருக்கும்.

கடந்த பதினைந்து ஆண்டுகளாக அவர் மனிதர்களோடு வாழ்ந்த நேரத்தைவிட மாடுகளோடுதான் நிறைய நேரம் வாழ்ந்திருக்கிறார்; நிம்மதியாகவும் வாழ்ந்திருக்கிறார்.

ஐந்தாறு ஆண்டுகளுக்கு முன்னால் தைப்பொங்கல் காப்புக்கட்டுக்கு ரெண்டுநாள் முந்தி மாடு மேய்க்கப் போன கொறண்டி பனமரத்தான் காட்டிலிருந்து ‘அய்யோ யப்பே!’ என்று வாயிலும் வயிற்றிலும் அடித்துக்கொண்டு ஓடிவந்தான். கைகாலெல்லாம் காயம். கிழிந்த சட்டைவழி முதுகுக் கறியும் பிய்ந்து தொங்கியது தெரிந்தது.

“யப்பே! என்னக் காப்பாத்துப்பே! நம்ம மயிலக்காள கிறுக்குப் புடிச்சு அலையுது. கிட்டப் போனா முட்டவருது. என்ன வளைச்சு வளைச்சுக் குத்துது. உசுரக் கையில் புடிச்சு ஓடியாந்தேன்.”

கொறண்டியில் கோலங்கண்டு பதற்றத்தில் என்ன ஏது என்று விசாரிக்கமறந்து பேயத்தேவர் மாட்டைத் தேடி ஓடினார் கையில் சாட்டைக்கம்போடு.

அன்று அவர் மயிலக்காளையை அடித்த அடி சாதாரண அடி இல்லை. விரட்டி விரட்டி அடித்தார்; புரட்டிப் புரட்டி அடித்தார். வரிவரியாய்த் தடம்பதிய- சிமிழ் கிழிய- வெள்ளைத்தோலில் சிவப்புக் கோடு எழும்ப அடித்தார். அன்னைக்கி ராத்திரி அழகம்மாள் வேப்பிலையையும் மஞ்சளையும் வச்சு அரைச்சு அடிபட்ட எடமெல்லாம் மாட்டுக்குப் பத்துப்போட்டாள்.


“ஏ ஆம்பள! மாட்ட ஒம் பொண்டாட்டின்னு நெனச்சியா?... இந்த அடி அடிச்சிருக்க?”

அவர் மாட்டை அடித்த அத்தனை அடிகளையும் ஒரே கேள்வியில் திருப்பி அடித்தாள்.


“கிறுக்குப் புடிச்ச மாட்ட என்ன செய்யச் சொல்றவ?”

“கிறுக்கு மாட்டுக்குப் பிடிக்கல ஆம்பள. மனுசங்களுக்குத்தான் புடிச்சிருக்கு. மாட்டுக்கு அடிமடியில உண்ணி புடிச்சிருந்திருக்கு. அதக் கோளாறா எடுத்து விடுறா கொறண்டின்னு சொல்லிட்டு வந்திருக்க. இவன் நோண்டிநோண்டிப் பாத்திருக்கான்... உண்ணி சிக்கல மூட்டப்பூச்சிக்கு வீட்டக் கொளுத்தற முட்டாப் பயலுக்கு ஒரு யோசன வந்திருக்கு. தூக்கணாங்குருவிக் கூட்டக் கொளுத்தி உண்ணி சாகட்டுமின்னு உள்ள விட்ருக்கான். சூடு தாங்குமா மாடு? வெரட்டிருக்கு; விழுந்திருக்கான். நீயும் ஒரு வெவரங்கெட்ட ஆளு. கோட்டிப்பய சொல்ல நம்பிச் சாட்டக்கம்ப எடுத்திட்ட”

(வளரும்)







யா/ கனகரத்தினம் மத்திய மகா வித்தியாலயத்தின் வருடாந்த பரிசளிப்பு விழா அண்மையில் நடைபெற்றது. இந்நிகழ்வில் விருந்தினர்கள் அழைத்து வரப்படுவதையும் அதிபர் வே.ஞானகாந்தன் உரையாற்றுவதையும் யாழ். மாநகர முதல்வர் திருமதி யோகேஸ்வரி பற்குணராஜா மாணவர் ஒருவருக்கு பரிசில் வழங்குவதையும் படங்களில் காணலாம். (படங்கள்:- என்.குமார்)

# யாழ். முஸ்லிம்களை கிளிநொச்சியில் மீள் குடியேற்றுவது தொடர்பாக ஆராய்வு

## மௌலவி சுபியான் தெரிவிப்பு

(கொழும்பு)

யாழ்.மாவட்டத்தில் மீளக் குடியமர திரும்பியுள்ள முஸ்லிம் குடும்பங்களில் சிலவற்றை கிளிநொச்சி மாவட்டத்தில் மீளக் குடியமர்த்துவது தொடர்பாக ஆலோசிக்கப்பட்டு வருவதாக யாழ். மாநகரசபை உறுப்பினர் மௌலவி பி.ஏ.எஸ்.சுபியான் தெரிவித்துள்ளார்.

யாழ். குடாநாட்டில் மீளக்குடியமர்வதற்கு இடம்பெயர்ந்து பிற மாவட்டங்களில் வசிக்கும் முஸ்லிம் குடும்பங்கள் ஆர்வமாயுள்ளனர்.

ஆயினும் இவர்களை மீளக்குடியமர்த்துவது தொடர்பில் காணிகள் பற்றாக்குறை பிரச் சினையாகவுள்ளது. இதனால் மீளக் குடிய மரவென யாழ். குடா நாட்டுக்கு வருகை தந்த ஏராளமான முஸ்லிம் குடும்பங்கள் தமக்கான மீள்குடியேற்றம் சம்பந்தப்பட்ட பதிவுகளை மேற்கொண்ட போதிலும் குடியமர காணிகள் இல்லாத காரணத்தால் அவர்கள் மீண்டும் தாம் இடம்பெயர்ந்து வசித்து வரும் இடங்களுக்கே திரும்பிச் சென்றுள்ளனர்.

இதனையடுத்து காணியற்ற யாழ். முஸ்லிம்களின் மீள்குடியேற்றத்துக்காக கிளிநொச்சி மாவட்டத்தில் காணிகளை பெற்றுக் கொள்வது தொடர்பில் ஆலோசிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பாக கிளிநொச்சி மாவட்ட அரசாங்க அதிபருடனும் ஆலோசிக்கப்பட்டிருப்பதாக குறிப்பிட்ட மௌலவி சுபியான் கிளிநொச்சி மாவட்டத்திலிருந்து இடம்பெயர்ந்த மக்களின் மீள்குடியேற்றம் மற்றும் புனர்வாழ்வு நடவடிக்கைகள் முழுமைபெற்ற பின்னர் இது பற்றி கவனம் செலுத்துவதாக கிளிநொச்சி அரச அதிபர் தனக்கு கூறியிருப்பதாகவும் கூறினார். (ஸ்ரீ-2)

# உள்ளூராட்சி மன்ற தேர்தலில் ஐ.ம.சு.மு.சார்பில் 5170 பேர் போட்டி

(கொழும்பு)

எதிர்வரும் உள்ளூராட்சி மன்றங்களுக்கான தேர்தலில் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி சார்பில் 5 ஆயிரத்து 170 பேர் போட்டியிடவுள்ளனர்.

வடக்கு -கிழக்கு உட்பட நாட்டின் அனைத்துப் பகுதிகளிலுமுள்ள 301 உள்ளூராட்சி மன்றங்களுக்கு ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி சார்பில் 5 ஆயிரத்து 170 பேர் போட்டியிடவிருப்பதாக கூட்டமைப்பின் செயலாளர் அமைச்சர் சுசில் பிரேமஜயந்த தெரிவித்தார்.

ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியில் அங்கம் வகிக்கும் அ னைத்துக் கட்சிகளையும் உள்ளடக்கிய ாக வேட்பாளர் பட்டியல்கள் தயாரிக்கப்பட்டுள்ளன.

வேட்பாளர்கள் பட்டியல்களில் கையெழுத்துப் பெறும் நடவடிக்கைகள் தற்பொழுது இடம்பெற்று வருகின்றன.

ஏற்கனவே தீர்மானிக்கப்பட்டமைக்கு அமைய பாராளுமன்ற உறுப்பினர்கள், அமைச்சர்கள் மாகாண சபை உறுப்பினர்களின் உறவினர்கள் வேட்பாளர்களாகத் தேர்வு செய்யப்படவில்லையென்றும் முன்னணியில் அங்கம் வகிக்கும் கட்சிகளையும் இணைத்துக் கொண்டதாக வேட்பாளர் பட்டியல்கள் தயாரிக்கப்பட்டுள்ளன என்றும் அமைச்சர் குறிப்பிட்டார்.

வேட்பாளர் பட்டியல்கள் அனைத்தும் நாளை புதன்கிழமை செய்யப்படவிருப்பதாகவும் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் செயலாளர் மேலும் தெரிவித்தார். (ஸ்ரீ-2)

# பௌத்த பிக்குகளை உள்ளூராட்சி தேர்தலில் நிறுத்தக் கூடாது

## அமைச்சர் தினேஷ் குணவர்த்தன தெரிவிப்பு

(கொழும்பு)



பௌத்த பிக்குகளை தேர்தலில் நிறுத்தக் கூடாது என நீர் வடிகாலமைப்பு அமைச்சர் தினேஷ் குணவர்த்தன தெரிவித்துள்ளார்.

உள்ளூராட்சி மன்ற வேட்பாளர் நியமனம் குறித்து அலரி மாளிகையில் நடைபெற்ற சந்திப்பின் போது அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

லங்கா சமசமாஜ கட்சி பௌத்த பிக்கு ஒருவரை எதிர்வரும் உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் நிறுத்துவதற்கு முயற்சி மேற்கொண்டு வருவதாகவும் அதனை ஏற்றுக் கொள்ள முடியாது எனவும் தினேஷ் குணவர்த்தன தெரிவித்துள்ளார்.

ஆளும் ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பில் லங்கா சமசமாஜ கட்சியும் தினேஷ் குணவர்த்தனவின் மக்கள் ஐக்கிய முன்னணியும் அங்கம் வகிக்கின்றமை குறிப்பிடத்தக்கது. பௌத்த பிக்குகளை வேட்பாளராக நியமிப்பது குறித்து இரு கட்சிகளுக்கும் இடையில் காரசாரமான விவாதம் இடம்பெற்றுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

பௌத்த பிக்குகளை வேட்பாளராக நியமித்து அதன் மூலம் அரசியல் கட்சிகளுக்கு இடையில் பிளவினை ஏற்படுத்த எவரும் முயற்சிக்கக்கூடாது என அவர் தெரிவித்துள்ளார். (ஸ்ரீ-2)

# பௌத்த ஜயந்தி நிகழ்வுகளுக்காக ஐ.நா.சபையில் விசேட அமர்வு

(கொழும்பு)


பௌத்த ஜயந்தி நிகழ்வுகளுக்காக ஐக்கிய நாடுகள் அமைப்பு விசேட அமர்வுகளை நடாத்தத் தீர்மானித்துள்ளது. 2600 ஆவது பௌத்த ஜயந்தி நிகழ்வுகளை நடாத்துவதற்காகவே இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.

இலங்கை அரசாங்கத்தினால் சமர்ப்பிக்கப்பட்ட யோசனைத் திட்டத்திற்கு அமைய இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளதாகவும் எதிர்வரும் மே மாதம் 16 ஆம் திகதி முதல் 21 ஆம் திகதி வரையில் ஐக்கிய நாடுகளின் அமைப்பில் இந்த நிகழ்வு நடைபெறவுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

நியூயோர்க்கில் அமைந்துள்ள ஐக்கிய நாடுகளின் தலைமைக் காரியாலயத்தில் விசேட நிகழ்வுகள் நடைபெறவுள்ளது.

பௌத்த ஜயந்தி நிகழ்வுகளுக்கு ஆசிய நாடுகள் பூரண ஆதரவளித்துள்ளதாகவும் வரலாற்றில் முதல் தடவையாக இவ்வாறான ஒரு பௌத்த ஜயந்தி நடைபெறுவதாகத் தெரிவிக்கப்படுகிறது. (ஸ்ரீ-2)





புலோலி தெற்கு சமூகத்தினரால் க.பொ.த உயர்தரப் பிரிவில் மூன்று பாடங்களிலும் ஏ சித்தி பெற்ற மாணவர்களை கௌரவிக்கும் நிகழ்வு அண்மையில் நடைபெற்றது. இந்நிகழ்வில் பாண்ட் வாத்திய இசையுடன் விருந்தினர்கள் அழைத்து வரப்படுவதையும் யாழ்.பல்கலைக்கழக முகாமைத்துவ பீட பேராசிரியர் மா.நடராஜசுந்தரம் சிறப்புரையாற்றுவதையும் க.பொ.த உயர்தரப் பிரிவு 2010 இல் 3ஏ சிறப்புச் சித்தி பெற்ற ஹாட்லிக் கல்லூரி மாணவனுக்கு பருத்தித்துறை பிரதேச செயலர் இரா.வரதீஸ்வரன் அன்பளிப்பு வழங்குவதையும் படங்களில் காணலாம். (படங்கள்:- அல்வாய் செய்தியாளர்)

# ஒப்பந்தங்களை மீறிய பல்கலைக்கழக ஆசிரியர்கள் திரும்பி வருவதற்கு வாய்ப்பு

(கொழும்பு)

வெளிநாடுகளில் டாக்டர் பட்டம் மற்றும் முதுமாணி பட்டப் படிப்புக்காக வெளிநாடுகளுக்குச் சென்ற பல்கலைக்கழக ஆசிரியர்களில் ஆயிரத்திற்கும் மேற்பட்டவர்கள் திரும்பிவரவில்லை என அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். மேற்படி ஆசிரியர்கள் திரும்பி வருவதை கட்டாயமாக்கும் ஒப்பந்தங்களில் கையெழுத்திட்டு அரச செலவில் வெளிநாட்டுப் பல்கலைக்கழகங்களில் படிப்பதற்காக சென்றவர்களாவர்.

இந்நிலையில் புத்திசாலிகளின் வெளியேற்றத்திற்கான ஒரு தீர் வாக தடுப்பதற்காக மேற்படி பல் கலைக்கழக ஆசிரியர்களை தாயகத்திற்குத் திரும்பி உள்நாட்டு பல்கலைக்கழகங்களில் பணியாற்றுமாறு ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ அழைப்பு விடுத்துள்ளார்.

ஒப்பந்தங்களை மீறிய பல்கலைக்கழக ஆசிரியர்களும் திரும்பி வந்து பணியாற்றக் கூடியவாறான அமைச்சரவைப் பத்திரமொன்றை உயர் கல்வி அமைச்சர் எஸ். பி.திசாநாயக்க சமர்ப்பிக்கவுள்ளதாக உயர்கல்வி அமைச்சின் செயலாளர் டாக்டர் சுனில் ஜயந்த நவரட்ண இணையத் தளத்திற்கு தெரிவித்துள்ளார்.

தனியார் பல்கலைக்கழகங்களை நிறுவும் கொள்கை காரணமாக பல்கலைக்கழக ஆசிரியர்களுக்கு அதிக தொழில் வாய்ப்புகள் கிடைக்கும் எனவும் அவர் தெரிவித்தார்.

இந்தியாவின் மனிபால் பல்கலைக்கழகம் உட்பட 3 பல்கலைக்கழகங்கள் எதிர்வரும் ஏப்ரல் மாதத்திற்கு முன் இலங்கையில் தமது கிளை வளாகங்களை தடுப்பதற்கு இணங்கியுள்ளன.

(ஸ்ரீ-2)

# வன்னிப் பிரதேசத்தில் பெரும்பாலான முதியவர்கள் நிர்க்கதியான நிலையில்

## சிறிதரன் எம்.பி. தெரிவிப்பு

(கொழும்பு)

இலங்கையில் முதியவர்களுக்கு உரிய மரியாதை வழங்கப்படுவதில்லை என தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் சி.சிறிதரன் தெரிவித்துள்ளார்.

பெரும் எண்ணிக்கையிலான முதியவர்கள் இன்று அநாதரவான நிலையில் காணப்படுவதாகவும் இதன் காரணமாகவே முதியவர்களை பாதுகாப்பதற்கு சட்டங்களை அறிமுகப்படுத்த வேண்டியுள்ளதென அவர் தெரிவித்துள்ளார்.

வன்னிப் பிரதேசத்தில் அநாதரவான நிலையில் காணப்படும் முதியவர்களுக்கு வீட்டு வசதிகள் வழங்கப்படவேண்டுமெனவும் பெரும் எண்ணிக்கையிலான முதியவர்கள் நிர்க்கதியான நிலையில் காணப்படுவதாக அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

(ஸ்ரீ-2)

# ஆன்மீக சொற்பொழிவு

தொண்டைமானாறு செல்வச்சந்நிதி ஆலயச் சூழலில் அமைந்திருக்கும் சந்நிதியான் ஆச்சிரமத்தில் பிரதி வெள்ளிக்கிழமை தோறும் நடைபெற்று வரும் ஆன்மீக நிகழ்வுத்தொடரில் எதிர்வரும் 28ஆம் திகதி வெள்ளிக்கிழமை காலை 10.30 மணியளவில் வீடு குலையும் முன்னே வந்து காத்தருள்வாய் என்னும் கருப்பொருளில் செஞ்சொற்செம்மல் இரா. கேதீசன் உரையாற்றவுள்ளார்.

(ஸ்ரீ-3-35)

# இலங்கை பெண்ணை துன்புறுத்தியதாக எகிப்தியர் மீது குற்றச்சாட்டு

இலங்கைப் பெண்ணொருவரை டுபாயில் வைத்து பாலியல் ரீதியில் தொந்தரவுக்கு உட்படுத்தியதாக எகிப்திய பிரஜையொருவர் மீது குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

லிப்ட் இயந்திரமொன்றில் சென்று கொண்டிருக்கும் போது இச்சம்பவம் இடம் பெற்றதாக டுபாய் குற்றவியல் நீதிமன்றமொன்றில்' 21 வயதான மேற்படி பெண் தெரிவித்தார்.

நான் லிப்டில் சென்றுகொண்டிருக்கும் போது மேற்படி நபர் நான் இந்தியரா என்று கேட்டார். நான் இலங்கையர் என பதிலளித்தேன். பின்னர் என்னுடன் இருக்கும் இளைஞர் குறித்து கேட்டார். அவர் எனது சகோதரன் எனக் கூறினேன். அதன்பின் அவர் அங்கு சேட்டை செய்தார். பின்னர் மன்னிப்பு கோரினார் என அப்பெண் தெரிவித்தார்.

அம்மனிதரின் நடத்தை குறித்து நான் மிகவும் சங்கடமடைந்தேன். நான் மீண்டும் மேலே சென்று எனது மைத்துனியின் கணவரிடம் கூறினேன்.

அவருடன் எனது மைத்துனியின் கணவர் மோதியபோது அம் மனிதர் தனது செயலுக்காக மீண்டும் மன்னிப்புக் கோரினார். எனினும் நாம் மன்னிப்பை ஏற்காமல் பொலிஸாரை வரவழைத்தோம் எனவும் அப்பெண் நீதிமன்றத்தில் தெரிவித்தார்.

(ஸ்ரீ-2)

# புதிய நிர்வாக சபை தெரிவு

(யாழ்ப்பாணம்)

வல்வெட்டித்துறை கணபதி படிப்பகத்தின் 44ஆவது வருடாந்தப் பொதுக் கூட்டத்தில் நடப்பாண்டிற்கான புதிய நிர்வாகசபை உறுப்பினர்கள் தெரிவு செய்யப்பட்டனர்.

இதில் தலைவராக ச.ஜெயகணேஸ், உப தலைவர்களாக இ.மகாலிங்கம், இ.இராதகிருஷ்ணன், செயலாளராக செல்வன் ச.விஸ்வரூபன், உப செயலாளராக சி.அருணாசலம், பொருளாளராக செல்வன் சி.மதுசூதனன் ஆகியோர் தெரிவாகினர்.

அத்துடன் உறுப்பினர்களாக வ.சோமசுந்தரம், ச.ரமேஸ்குமார், ச.சூரியகுமார், செல்வன் த.மிரேஸ், செல்வன் ஆ.மதியழகன், செல்வன் ச.மதிவர்ணன் , செல்வன் சீ.ஐங்கரன் ஆகியோர் தெரிவு செய்யப்பட்டனர்.

காப்பாளர்களாக திருமதி வி.சந்திரயோகன், கோ.சற்குணபாலன், பூ.அகமணிதேவர், கணக்காய்வாளராக ந.சிவனருள்காந்தி ஆகியோர் தெரிவு செய்யப்பட்டனர்.

(ஸ்ரீ-2)

# தேசிய நிர்ப்பீடனதிட்டம் ஆரம்பிக்கப்பட்டது

இவ் ஆண்டுக்கான தேசிய நிர்பீடன திட் டம் நேற்று ஆரம்பமானது இதனை சுகாதார அமைச்சர் மைத்திரிபால சிறிசேன, கல்வி அமைச்சர் பந்துல குணவர்த்தன ஆகியோர் நுகேகொடையில் உள்ள ஆனந்த சமரகோன் மைதானத்தில் ஆரம்பித்து வைத்தனர்.

இந்த திட்டத்திற்கு உலக சுகாதார நிறுவனம் அனுசரணை வழங்கியுள்ளதுடன் ஐக்கிய நாடுகளின் சிறுவர் நிதியத்தின் பிரதி நிதிகளும் இந்நிகழ்வில் பங்கேற்றனர்.

இந்த நிலையில் தேசிய நிர்ப்பீடன திட்டத்தை நூறு வீத வெற்றியுடன் மேற்கொள்ளப் போவதாக சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

இலங்கையின் தேசிய நிர்ப்பீடன திட்டம் உலகளாவிய ரீதியில் சிறந்த திட்டமாகக் கருதப்படுவதாகவும் சுகாதார அமைச்சு குறிப்பிட்டுள்ளது. (ஸ்ரீ-2)




★1327 - 14 வயது மூன்றாம் எட்வர்ட் இங்கிலாந்தின் மன்னனாக முடி சூடினான்.

★1494 - இரண்டாம் அல்பொன்சோ நேப்பில்ஸ் மன்னனாக முடிசூடினான்.

★1498 - போர்த்துக்கீச நாடுகாண்பயணி வாஸ்கொடகாமா தென்கிழக்கு ஆபிரிக்காவை அடைந்தார்.

★1755 - மொஸ்கோ பல்கலைக்கழகம் ஆரம்பிக்கப்பட்டது.

★1881 - தோமஸ் அல்வா எடிசன், அலெக்சாண்டர் கிரஹம்பெல் ஆகியோர் இணைந்து ஓரியண்டல் டெலிபோன் கம்பனி என்ற நிறுவனத்தை ஆரம்பித்தனர்.

★1882 - வேல்ஸ் இளவரசர்கள் அல்பேர்ட் விக்டர், ஜோர்ஜ் ஆகியோர் கொழும்பு வந்து சேர்ந்தனர்.

★1890 - நெல்லிபிளை தனது 72 நாள் உலகம் சுற்றும் பயணத்தை வெற்றிகரமாக முடித்துக்கொண்டார்.

★1917 - டானிஷ் மேற்கிந்தியத் தீவுகள் ஐக்கிய அமெரிக்காவுக்கு 25 மில்லியன்களுக்கு விற்கப்பட்டது.

★1918 - உக்ரேன் மக்கள் போல்ஷெவிக் ரஷ்யாவிடம் இருந்து விடுதலையை அறிவித்தனர்.

★1919 - நாடுகளின் அணி நிறுவப்பட்டது.

★1924 - முதலாவது குளிர்கால ஒலிம்பிக் விளையாட்டுக்கள் பிரான்ஸில் ஷாமனீ என்ற இடத்தில் ஆரம்பமானது.

★1942 - இரண்டாம் உலகப் போர்: தாய்லாந்து ஐக்கிய அமெரிக்கா மீதும் ஐக்கிய இராச்சியம் மீதும் போரை அறிவித்தது.

★1949 - சீனக் கம்யூனிஸ்டுகளின் படைகள் பீக்கிங்கினுள் நுழைந்தன.

★1949 - இஸ்ரேலில் இடம்பெற்ற முதலாவது பொதுத் தேர்தலில் டேவிட் பென் குரூயன் பிரதமரானார்.

★1955 - சோவியத் ஒன்றியம் ஜேர்மனி மீது அதிகாரபூர்வமாக போரை நிறுத்திய.

★1971 - உகண்டாவில் இடம்பெற்ற இராணுவப் புரட்சியில் மில்ட்டன் ஒபோட் ஜனாதிபதி பதவியில் இருந்து அகற்றப்பட்டு இடிஅமீன் ஜனாதிபதி ஆனார்.

★1971 - இந்தியாவின் 18ஆவது மாநிலமாக இமாசலப் பிரதேசம் ஏற்றுக்கொள்ளப்பட்டது.

★1981 - மா சே துங்கின் மனைவி ஜியாங்கிங் இற்கு மரணதண்டனை விதிக்கப்பட்டது. இது பின்னர் ஆயுள் தண்டனையாகக் குறைக்கப்பட்டது.

★1986- தேசிய எதிர்ப்பு இயக்கத்தினரால் உகண்டா அரசு கவிழ்க்கப்பட்டது.

★1994 - நாசாவின் கிளமென்டைன் விண்கலம் சந்திரனை நோக்கி ஏவப்பட்டது.

★1995 - யோசவ்வாஸ் அடிகளார் பாப்பரசர் இரண்டாம் அருளப்பர் சின்னப்பரால் முத்திப்பேறு பெற்றவராக அறிவிக்கப்பட்டார்.

★1998 - கண்டியின் தலதாமாளிகையில் இடம்பெற்ற தற்கொலைத் தாக்குதலில் 8 பேர் கொல்லப்பட்டு 25 பேர் படுகாயமடைந்தனர்.

★1999 - மேற்கு கொலம்பியாவில் இடம்பெற்ற 6.0 ரிக்டர் அளவு நிலநடுக்கத்தில் ஆயிரம் பேர் வரையில் கொல்லப்பட்டனர்.

★2002 - விக்கிபீடியா மீடியாவிக்கி மென்பொருளுக்கு மாறியது.

★2004 - ஒப்போர்ச்சுனிட்டி தளவுளவி (MER-B) செவ்வாயில் தரையிறங்கியது.

★2005 - இந்தியாவின் மகாராஷ்டிரா மாநிலத்தில் மந்திராதேவி என்ற இடத்தில் கோயில் ஒன்றில் சனநெரிசலில் சிக்கி பெண்கள், குழந்தைகள் உட்பட 258 பேர் கொல்லப்பட்டனர்.

### பிறப்புகள்

★1627 - றொபேர்ட் பொயில், ஐரிஷ் வேதியியலாளர் (இ.1691)

★1872 - பி.ஆர்.ராஜமய்யர், எழுத்தாளர், பத்திரிகையாசிரியர் (இ.1898)

★1917 - ஈலியா பிரிகோஜின், நோபல் பரிசு பெற்ற ரஷ்ய அறிவியலாளர் (இ.2003)

★1928 - எடுவார்ட் ஷெவார்டுநாட்சே, ஜோர்ஜியாவின் முன்னாள் ஜனாதிபதி.

★1933 - கொரசோன் அக்கினோ, பிலிப்பைன்ஸ் முன்னாள் ஜனாதிபதி (இ.2009)

★1941 - செங்கை ஆழியான், ஈழத்து எழுத்தாளர்

1949 - போல் நர்ஸ் நோபல் பரிசு பெற்ற பிரித்தானியர்

### இறப்புகள்

★1922 - சுன்னாகம் குமாரசாமிப் புலவர் (பி.1855)

★2005 - பிலிப் ஜான்சன், அமெரிக்கக் கட்டடக் கலைஞர் (பி. 1906)

★2006 - நெல்லை கிருஷ்ணமூர்த்தி, கர்நாடக இசைக் கலைஞர்.

**2006 - சூரியக் குடும்பத்திற்கு வெளியே பால் வழியின் நடுவிற்கு அண்மையாக பூமியில் இருந்து 21,500+_3,300 ஒளியாண்டுகள் தூரத்தில் OGLE-2005-BLG-390Lb என்ற கோள் கண்டு பிடிக்கப்பட்டது.**

# தேசிய அபிவிருத்தி சார்பாக இலவசக் கல்வி முறைமை உண்மையில் வெற்றி கண்டுள்ளதா?

9

ஏழைப்பெற்றோருக்கு இதனால் தேவையான உதவிகளும் கிடைக்க வேண்டும். இது பிள்ளையின் கற்றலுக்கான அடிப்படை மனித உரிமையும் ஆகும். ஆனால், தற்போது என்ன நடக்கிறது? பிள்ளை வாழும் சூழலில் சகல வசதிகள் கொண்ட 'பிரபல்யம் எனப்படுகின்ற பாடசாலைகளில், அப்பிள்ளை வளமற்ற நிலையில் இருந்தால் தரம் 1 இல் அனுமதிபெற முடியாத நிலை ஏற்படுகின்றது.

ஏனெனில் நன்கொடை செலுத்துவதற்கு பல ஆயிரம் ரூபாய்கள் அப் பிள்ளையின் பெற்றோரிடம் இல்லை.வசதி படைத்தோரின் பிள்ளைகளுக்கே, அவர்கள் பாடசாலையிலிருந்து பல கிலோமீற்றர் தூரத்தில் வசித்தால் என்ன, அண்மையான இடத்தில் வசிப்பதாக அத்தாட்சி பெறப்பட்டு , பல ஆயிரம் ரூபா நன்கொடையாகவும் பெறப்பட்டு அனுமதி கொடுக்கப்படுகிறது.

இதனால் வளமற்ற பிள்ளைகளின் வாய்ப்பு மறுக்கப்படுவது மாத்திரமன்றி அவர்கள் வீட்டிலிருந்து தொலைவில்லுள்ள வளமற்ற பாடசாலைகளில் நன்கொடையின்றி சேர்க்கப்படுகின்றனர். சிலவேளைகளில் தொலை தூரமும் பெற்றோரின் வறுமை நிலை காரணமான அக்கறையின்மையும் காரணமாக பாடசாலைக் கல்வி முறையில் இருந்து முற்றாக விடுபடுகின்றனர். இதனால் இவர்களும் பாடசாலை செல்லாத குழுவினருடன் சேர்க்கப்பட்டு எழுத்தறிவற்றோருடன் இணைகின்றனர். இலவசமாகக் கற்கவேண்டிய கல்வி, இலவசக் கல்விமுறைமைக்கு முன்பிருந்த, கல்வி கட்டணம் செலுத்தும் கல்விமுறைக்கு மாறுகின்றதா?

காலத்துக்குக் காலம்,இந்நிலை காரணமாக கல்வியமைச்சு பிள்ளைகளிடமிருந்து

> "கல்வியானது சமூகப் பொறுப்பும் பொருளியல் ரீதியான உற்பத்தித்திறனும் கொண்டநேர்மையான , கட்டொழுங்குள்ள, தேசபக்தியுள்ள குடிமக்களை உருவாக்க வேண்டும்"

பாடசாலை அனுமதிக்கு நன்கொடை ஏதும் அறவிடக் கூடாது அல்லது பணம் பெறக் கூடாது என அறிவுறுத்தலோ அல்லது சுற்று நிருபமோ அனுப்புவதில் தவறு விடுவதில்லை. அத்தோடு முடிந்து விடும்.ஆனால் செயற்படுத்துவதில்லை. இதைக் கண்டும் காணாதது போல் இருக்கிறது.இவற்றைப் பார்க்கும் போது இந் நாட்டில் இலவசக் கல்வி முறைமையும் கட்டணம் செலுத்தும் கல்வி முறையையும் வியாபித்திருப்பது போல் அரசாங்கப் பாடசாலைகள் தோற்றமளிக்கின்றன. வளமற்ற பெரும்பான்மையினரும் வளம்மிக்க சிறுபான்மையினரும் (சிறு தொகையினர்) இந் நாட்டில் இருப்பதனால் இவ் விரட்டைப் பாடசலை முறைமை தொடர்ந்து கொண்டே செல்லும். இதனால் வள மற்றவர்கள் தொடர்ந்தும் வளமிழந்தும் வளம்மிக்கவர்கள் தொடர்ந்தும் செல்வந்தர்களாகவும் இருக்க விதிக்கப்பட்டமை காலங்காலமாக கொண்டுவரப்பட்ட கல்விச் சீர்திருத்தங்களின் விளைவு எனச் சொன்னால் அது மிகையாகாது.

உண்மை என்னவெனில், பிரபல்யமான, வளமிக்க பாடசாலைகள் எனக்கருதப்படுவது பெற்றோரினதும் மற்றும் ஏனையவர்களினதும் உளப்பாங்கான ஒரு தோற்றமெனலாம். இவ்வகையயான பாடசாலைகளில் ஒரு குறிப்பிட்ட வகுப்பில் நூற்றுக்கு மேற்பட்டோர் கற்கின்றனர். உதாரணமாக ஒரு பிரபல்யமான ஆரம்பப் பாடசாலையில் நூற்றுக்கும் அதிகமான மாணவர்கள் தரம் 5 இல் கற்பர். அவர்கள் அத்தனை பேரும் புலமைப் பரிசில் பரீட்சையில் தோற்றி கணிசமான தொகையினர் சித்தியடைவர். இவ்வடைவு எண்ணளவில் பெரிதாகத் தோற்றலாம் ஆனால், சித்தியடைந்தோரின் வீதம், வளம் குறைந்த பாடசாலையில் கற்று அப் பரீட்சையில் தோற்றிய சிறிய எண்ணிக்கையுடையோரில் சித்தியடைந்தவர் வீதத்திலும் பெரும்பாலும குறைவாக இர க்கலாம்.இம்முறையே உண்மையான மதிப்பீடாகும். ஆனால், எண்ணிக்கை அடிப்படையில் அடைவைப் பார்ப் பது எம்மவர்களின் வழமையாகி விட்டது.



கல்வியானது கட்சி அரசியலுக்கு அப்பாற்பட்டதாக இருக்க வேண்டும். அத்துடன் தேசிய கல்வி முறைசார்பாக ஒரு தொடர்ச்சியான தேசியக்கொள்கை பின்பற்றப்பட வேண்டும். உண்மையில் கல்வித் திட்டமிடலானது பொருளாதாரத் திட்டமிடலில் ஒன்றிணைக்கப்பட வேண்டும்

கல்வித்திட்டமிடல் இல்லாமல் பொருளாதார வளர்ச்சியை விரைவாக அடைய முயற்சிப்பது பொருத்த மானதல்ல இதனை அரசாங்கங்கள் எந்தளவிற்கு உணர்ந்து கொள்கின்றனவோ அந்த அளவுக்கு நல்லது. (தொடரும்)

தம்பியப்பா காங்கேசபிள்ளை
முன்னாள் அதிபர்
பலாலி ஆசிரியர் கலாசாலை

# "ஸ்பெஷல்" நாடகம்; சில சிந்தனைகள்

2



சங்கரதாஸ் சுவாமிகள் 1867இல் பிறந்து 1922 வரை ஐம்பத்தைந்து வருடங்களே உயிர் வாழ்ந்தவர். 1891 முதல் 1921வரையான சுவாமிகளின் முப்பது வருட நாடக வாழ்க்கைக் காலத்தில், தனது பாலர் நாடக சபையைத் தோற்றுவித்த ஆண்டான 1910 இற்கு பின்பான பதினொரு வருட காலத்திலேயே முறையான இசை நாடகப் பிரதிகளை அவர் எழுதியிருக்க வேண்டும். அவர் உயிரோடிருந்த காலத்தில் அவரது நாடகப் பிரதிகள் எவையும் அச்சில் பதிக்கப் படவில்லை. 1929ஆம் ஆண்டிலேயே மு.கிருஷ்ணபிள்ளை என்பவரால் சத்தியவான் - சாவித்திரி, கோவலன், அல்லி, பவளக்கொடி, ஞானசௌந்தரி, சாரங்கதரன், வள்ளி திருமணம், நல்ல தங்காள், அரிச்சந்திர மயான காண்டம் ஆகிய ஒன்பது இசைநாடகங்களும் அச்சில் பதித்து வெளியிடப்பட்டன.

### ஈழத்தில் இசைநாடகம்

ஈழத்தில் இசைநாடக மரபானது தென்னிந்திய இசைநாடகக் குழுக்களின் வருகையுடனேயே ஆரம்பமானது எனலாம். வணிகத்திற்காக இலங்கைக்கு வந்திருந்த நாட்டுக் கோட்டைச் செட்டிமார் இந்த இசை நாடகக் குழுக்களை இந்தியாவிலிருந்து தருவித்து இலங்கையில் மேடையேற்றுவித்தனர். முதலில் இந்தியக் கலைஞர்கள் காங்கேசன்துறைத் துறைமுகத்தினூடாக யாழ்ப்பாணம் வந்த இசைநாடகங்களில் நடித்ததோடு, வடமராட்சியிலும் இந்நாடகங்களை மேடையேற்றினர். அதேவேளை பருத்தித்துறைத் துறைமுகத்தினூடாக நேரடியாகவும் இசை நாடகக் குழுக்கள் வடமராட்சிக்கு வந்து நாடகமாடிச் சென்றுள்ளனர்.

இந்நாடகக் குழுக்கள் திட்டவட்டமாக எந்த ஆண்டில் முதன்முதலில் இலங்கைக்கு வந்து நாடகமாடினர் என்பதற்கான வரலாற்றுப் பதிவுகள் இல்லை. ஆனால், இவர்களின் வருகை பற்றி நாடகக். கலைஞர் வடிவேலு, நடிகமணி வி.வி.வைரமுத்து, கலையரசு சொர்ணலிங்கம் போன்றோர் வெவ்வேறு சந்தர்ப்பங்களில் குறிப்பிட்டுள்ள, குறிப்பான சம்பவங்கள் இடம்பெற்றதாகச் சொல்லப்படும் ஆண்டுகள் பொருத்தமானவையாகத் தெரியவில்லை. ஏனெனில், 1850 ஆம் ஆண்டளவில் பம்பாயில் பார்ஸி நாடகக் கம்பனி புதிய முறையில் நாடகங்களை மேடையேற்றத் தொடங்கிய போதிலும் 1870 இலேயே இப்பார்ஸித் தியேட்டர் மரபு தமிழகத்தில் அறிமுகமானது. எனவே 1870 இற்கு முன்பு ஈழத்தில் மேடையேற்றப்பட்ட நாடகங்கள் பார்ஸி மரபு இசை நாடகங்கள் அல்ல. அவை விலாசங்களாக இருந்திருக்க வேண்டும்.

> கொழும்பில் நடைபெற்ற சர்வதேச எழுத்தாளர் மாநாட்டில் வாசிக்கப்பட்ட ஆய்வுக்கட்டுரை

கால வரையறைகளைக் கொண்டு பார்க்கும் போது, பார்ஸி மரபுவழி இசைநாடகங்கள் தோற்றுவிக்கப்படுவதற்கு முன்னரே 'விலாசம்' புதிய நாடக வடிவமாகக் தமிழ் நாடக உலகில் புகுந்திருக்க வேண்டும். "நாடகத்திற்கு விலாசம் என்ற பெயரிட்டுப் பல விலாசங்கள் தமிழகத்தில் நடைபெற்று வந்துள்ளன. இந்த விலாசம் என்ற பெயர் ஏன் வந்தது என்று இன்னும் தெளிவாகத் தெரியவில்லை" என்று டி.கே.சண்முகம் குறிப்பிட்டுள்ளார். யாழ்ப்பாணத்தில் மேடையேறியதாக ஆறுமுகநாவலராற் குறிப்பிடப்பட்ட, தென்னிந்தியக் கலைஞர்களின் நாடகங்களான அரிச்சந்திர விலாசம், தமயந்தி விலாசம் என்பன இப்புதிய வகை நாடகங்களாகவே இருந்திருக்க வேண்டும். எனவே 'விலாசம்' என்பது பார்ஸி மரபுவழி நாடக வடிவம் என்று குறிப்பிடுவது முற்றாகப் பொருந்தாது. மக்கள் கிராமியக் கலையாகத் தெருக்கூத்து பயிலப்பட்டவேளை, படித்த மத்தியதர வர்க்கத்தினர் கீர்த்தனைகளையும் வசனங்களையும் உள்ளடக்கியதாக நாடகப் பாடங்களை (Text) எழுதி, வடமொழி வழிவந்த 'விலாசம்' என்ற பதத்தை நாடகப் பெயரில் இடம்பெறச் செய்திருக்க வேண்டும். தெருக்கூத்திலோ அல்லது நாட்டுக் கூத்திலோ கர்நாடக சங்கீதக் கீர்த்தனைகள் இடம்பெறா. ஈழத்திலும் இராம விலாசம், இரத்தினவல்லி விலாசம், வாளபீமன் விலாசம், விஜயதர்ம விலாசம், தருமபுத்திர விலாசம் போன்ற விலாச நாடகங்கள் 1870இற்கு முன்னரே எழுதப்பட்டுள்ளன.

ஈழத்தில் இந்திய இசைநாடகங்களின் தாக்கம் மூன்று காலகட்டங்களில் வெளிப்படுத்தப்பட்டதெனக் காரை சுந்தரம்பிள்ளை கூறுவார். இவை முறையே 1919ஆம் ஆண்டுக்கு முன்னரான - அதாவது முதலாம் உலக மகா யுத்தத்துக்கு முன்னரான காலப் பகுதி, 1919ஆம் ஆண்டுக்கும் 1939ஆம் ஆண்டுக்கும் இடைப்பட்ட காலப்பகுதி, 1939ஆம் ஆண்டுக்குப் பின்னருள்ள - அதாவது இரண்டாம் உலக மகா யுத்தத்திற்குப் பின்பான காலப்பகுதி. முதலாம் காலப்பகுதியில் முற்றுமுழுதாக இந்தியக் கலைஞர்கள் இசைநாடகங்களில் நடித்தார்கள் என்றும், அடுத்த காலப்பகுதியில் இந்தியக் கலைஞர்களுடன் ஒரு சில ஈழத்துக் கலைஞர்களும் சேர்ந்து நடித்தனர் என்றும் மூன்றாம் காலகட்டத்தில் ஈழத்து நடிகர்கள் மாத்திரமே இசைநாடகங்களிற் பங்கு கொண்டனர் என்றும் காரை சுந்தரம்பிள்ளை குறிப்பிடுகிறார்.இக்கால வரையறைகளுடன் பார்க்கும்போது, காரை சுந்தரம்பிள்ளை குறிப்பிடும் முதலாம் காலகட்டத்தில் ஆரம்பத்தில் இலங்கையில் மேடையேறிய, தென்னகக் குழுக்களின் நாடகங்கள் விலாச நாடகங்களாக இருந்திருக்க வேண்டும். 1870 இற்குப் பின் பார்ஸி நாடக மரபு தமிழ் நாட்டில் அறிமுகமாகிய பின்பு, ஈழத்தில் மேடையேற்றப்பட்டவை பார்ஸி மரபுவழி விலாசங்களக இருந்திருக்க வேண்டும். 1900-1901 காலப் பகுதியல் இரண்டு, மூன்ற தடவைகள் தவத்திரு சங்கரதாஸ் சுவாமிகள் இலங்கைக்கு வந்திருந்து சூத்திரதாரராக நடித்தார் என்றும், சூத்திர தாரராக வருகையில் நாடக நுணுக்கங்களைப் பற்றியும் நடைபெறவிருக்கும் நாடகத்தின் நீதிகளைப் பற்றியும் எடுத்துக் கூறுவார் என்றும் குறிப்பிடப்பட்டிருப்பதும் கூட , பார்ஸி மரபுவழி விலாசங்கள் இக்காலகட்டத்தில் மேடையேறின என்பதற்கான சான்றுகளாகும். ஏனெனில், கூத்து மரபிலிருந்து விடுபட முடியாத நிலையில் விலாசங்களிலேயே கூத்தின் கட்டியகார னின் வகிபாகத்தை சூத்திரதாரர் எடுத்துக்கொள்ளும் நிலை காணப்பட்டது.

1910ஆம் ஆண்டுக்குப்பின்னர் சங்கரதாஸ் சுவாமிகள் எழுதிய முறையான இசை நாடகப்பிரதிகளே, பின்னர் தென்னகத்திலும் ஈழத்திலும் இசை நாடகங்களை முறையாகப் பயில்வதற்கு அடிப்படையாக இருந்தன. இந்நாடக நூல்களின் அமைப்பைப் பார்க்கின்ற போது, கூத்தின் அம்சங்கள் பெரிதும் குறைந்திருப்பதைக் காண முடிகின்றது. உரையாடல்கள் அடிக்கடி இடம் பெறுவதையும் காணக்கூடியதாக உள்ளது. இவ்வாறான சங்கரதாஸ் சுவாமிகள் பாணி நாடகங்களே ஈழத்தவர்கள் பயிலத் தொடங்கிய இசை நாடகங்களாகும். இவையே அக்காலத்தில் 'டிறாமா' என்று அழைக்கப்பட்டன. 1919ஆம் ஆண்டுக்கும் 1939 ஆம் ஆண்டுக்கும் இடைப்பட்ட காலத்தில் ஈழத்துக்கு வருகை தந்த நாடகக் குழுக்கள் 'சங்கரதாஸ் சுவாமிகள்' பாணியிலமைந்த, 'டிறாமாக்கள்' என அழைக்கப்பட்ட இசை நாடகங்களையே மேடையேற்றினர். இக்காலத்தில், இந்த இசைநாடகங்களைப் பார்க்க முடிந்தமையும் தென்னிந்தியக்கலைஞர்களுடன் சில ஈழத்துக்கலைஞர்கள் சேர்ந்து நடிக்க முடிந்தமையும் சங்கரதாஸ் சுவாமிகளினதும் இன்னும் சிலரினதும் நாடகப்பிரதிகளைப் பெறமுடிந்தமையும் ஈழத்துக்கலைஞர்களுக்கு 'சங்கரதாஸ் பாணி' இசைநாடகங்களைத் தாமும் மேடையேற்றுவதற்கு அநுகூலமாக இருந்திருக்க வேண்டும். (தொடரும்)

கலாநிதி த.கலாமணி
யாழ்.பல்கலைக்கழகம்

# டெங்குக் காய்ச்சல் DENGUE FEVER



(சென்றவாரத் தொடர்ச்சி)

**ஈரல் வீக்கம்**

இந்தக் காய்ச்சலில் மிக முக்கிய அறிகுறி ஈரல் வீங்கிப் போவது.

**வகைகள்**

பாதிப்பின் அளவை வைத்து டெங்கு ஹீமோராஜிக் காய்ச்சலை நான்கு வகைகளாகப் பிரிக்கலாம்.

ஷொக் மற்றும் இரத்தக் கசிவின் அளவைக் கொண்டு வகைப்படுத்தப்படுகிறது.

**வகை-1**

★ காய்ச்சல்

★ டானிக்குட் பரிசோதனையில் இரத்தக் கசிவு இருத்தல்.

**வகை-2**

★ வகை-1இல் உள்ளதுடன் தோலில் தாணாகவே இரத்தக் கசிவு இருத்தல்

**வகை-3**

★ இதயத் துடிப்பு வேகமாகவோ, மெதுவாகவோ இருப்பது.

★ இரத்த அழுத்தம் குறைவதால் நோயாளியின் உடல் சில்லிட்டுப்போவது.

★ பாதிக்கப்பட்ட குழந்தைகள் கவலையுடனும் பதற்றமாகவும் காணப்படுவது.

**வகை-4**

★ மிக மோசமான ஷொக்

★ இரத்த அழுத்தம் பதிவு செய்ய முடியாமல் போவது

★ நாடித் துடிப்பு அறிய முடியாமல் போவது டெங்கு ஷொக் சின்ட்ரோம் (DENGUE SHOCK SYNDROME -DSS)

மேலே பார்த்த நான்கு வகை அறிகுறிகளு டன் நாடித்துடிப்பு வேகமாகவும் வீரியம் குறைந்து இருத்தல், நாடித்துடிப்பின் அழுத்தம் குறைதல் அல்லது இரத்த அழுத்தம் குறைந்து குழந்தையின் உடல் சில்லென்று இருத்தல்.

**பரிசோதனைகள் மூலம் நோயை உறுதிப்படுத்தும் காரணிகள் சாதாரண டெங்கு காய்ச்சல்**

★ இரத்தத்தில் உள்ள எல்லா அணுக்களும் 3-4 நாட்களுக்குள் குறைதல்( Pancytopenia )

★ வெள்ளை அணுக்கள் தொடர்ந்து குறைவாக இருப்பது (Neutropenia)

★ இரத்த உறைதலுக்குக் காரணமான தட்டை அணுக்கள் (Platelets) குறைதல்

★ டார்னிக்குட் பரிசோதனையில் இரத்த கசிவு தென்படுவது .


★ அசிடேஸிஸ்

★ இரத்தம் கெட்டியதால் (Hemoconcentration)

★ இரத்தத்தில் ஈரல் என்ஸைம் அளவு அதிகரித்தல் (Increased Transaminase Values)

★ இரத்தத்தில் உள்ள புரோட்டீன் அளவு குறைவது (Hypoproteinemia)

டெங்கு ஹீமோராஜிக் காய்ச்சல்(**Dengue Hemorrhagic fever**) மற்றும் டெங்கு ஷொக் சின்ட்ரோம்(**Dengue Shock syndrome**)




★ இரத்தத்தை உறையவைக்கக்கூடிய அணுக்கள் குறைவது (Thrombocytopenia)

★ இரத்தக் கசிவு நேரம் நீண்டு கொண்டே இருப்பது (Prolonged Bleeding Time)

★ நெஞ்சு எக்ஸ்-ரேயில் நுரையீரல்சவ்வுகளுக்கு இடையில் நீர் காணப்படுவது.

## குழந்தைகளுக்கு வரும் காய்ச்சல்கள்

**சிகிச்சை**

★ நோயின் தன்மைக்கு ஏற்ப சிகிச்சை அளிக்க வேண்டும்

★ சிகிச்சை முறையாகவும் தகுந்த முறையிலும் அதே நேரம் குழந்தைகளுக்கு உதவிகரமாகவும் ஆபத்து விளைவிக்காமலும் இருக்க வேண்டும்.

★ நோயாளிகளை ஓய்வில் இருக்க அறிவுறுத்த வேண்டும்.

★ காய்ச்சல் குறைய மாத்திரை மற்றும் வெதுவெதுப்பான நீரில் நனைத்த துணியைப் பயன்படுத்தலாம்.

★ எக்காரணம் கொண்டும் அஸ்பிரின் மருந்தைக் கொடுக்கக்கூடாது.

★ வாந்தி, சாப்பிட முடியாமை, மிக அதிகமான வியர்வை, பேதி போன்றவை இருந்தால் வாய் வழியாக உப்பு, சீனிக்கரைக் கரைசலைக் கொடுக்க வேண்டும்.

★ குழந்தைகளின் நாடித்துடிப்பு, மூச்சு விடுதல், இரத்த அழுத்தம் மற்றும் நீர் ,உப்பு வெளி யேற்றம் (Dehydration) ஆகியவற்றை அடிக்கடி சரி பார்க்க வேண்டும்.

★ இரத்தம் கெட்டியாகும் தன்மையை அடிக்கடி அறிந்து கொள்ள வேண்டும்.

★ 48 மணி நேரத்துக்குள் குழந்தையை மருத்துவமனையில் சேர்த்து நிலைமையைத் தொடர்ந்து கண்காணிக்க வேண்டும்.

★ ஷொக் ஏற்படுகிறதா என்று கண்டறிய வேண் டும்.

★ குழந்தையின் உடல் ஊதா நிறமாக மாறினாலோ மூச்சு விட கஷ்டப்பட்டாலோ ஒட்சிசன் (பிராணவாயு) கொடுக்க வேண்டும்.

★ சிரை வழியாக சாதாரண சேலைன் (Normal Saline) கொடுக்க வேண்டும்

**கவனிக்க வேண்டியவை**

★ பாதிக்கப்பட்ட குழந்தைக்கு அதிக அளவு தண்ணீரையோ அல்லது தண்ணீரை மிக வேகமாகவோ கொடுக்கக் கூடாது. அப்படிக் கொடுத்தால் இதயம் செயல் இழக்கலாம். மூச்சுவிடுவதற்குக் கஷ்டப்படலாம். கை கால்கள் வீங்கலாம்.

★ இரத்தக் கசிவு ஏற்படும்போது புதிய இரத்தம் அல்லது தட்டை அணுக்கள் உள்ள பிளாஸ்மாவைக் கொடுக்கலாம்.

**டெங்கு ஷொக் ஸிண்ட்ரோம்- சிகிச்சை**


இது மிகவும் ஆபத்தான நிலைமையாகும். இதற்கு உடனே,

★ சிறு குழந்தைகளுக்கு 5 % Dex in 1/2 NSS or 5%Dex 1/3 NSS என்ற மருந்தை 10-20 மில்லி / கிலோ/ மணி என்ற அளவில் கொடுக்க வேண்டும்.

★ மருந்து கொடுத்த பின்னரும் ஷாக் சரியா காவிட்டால் புதிய இரத்தம் செலுத்த வேண்டும்.

★ குழந்தையின் உடல் நிலையில் முன்னேற்றம் இருந்தால் சிரை வழியாக சேலைன் ஏற்ற வேண்டும். ஒன்று அல்லது இரண்டு மணி நேரத்துக்கு ஒருமுறை என ஒரு நாள் முழுவதும் கொடுக்க வேண்டும்.

**குழந்தைகள் உடல்நிலையில் முன்னேற்றம் தென் படும் போது...**



உடலில் பிற பகுதிகளில் இருந்து இரத்தக் குழாய்களுக்கு நீர்வருவதால் இரத்தக் குழாயின் நீர் அளவு அதிகரித்து (Hypervolemia) இரத்தத்தின் அடர்த்தி குறைகிறது. (Hemodilution)

மேலும் நாடித் துடிப்பின் அழுத்தம் அதிகமாகி உயிருக்கு ஆபத்து ஏற்படலாம். இதையடுத்து இதயத்தைப் பாதுகாக்க மருந்தும் சிறுநீர் வெளியேற மாத்திரைகளும் கொடுக்க வேண்டும்.

**மோசமான விளைவுகள்.**

★ முதல் முறையாக வரும் டெங்கு காய்ச்சல் சாதாரணமானது. மேலும் அது தானாகவே சரியாகக் கூடியது. ஆனால் நோய் முற்றினால் மோசமான விளைவுகள் ஏற்படும். அவை,

★ சிறு குழந்தை மற்றும் குழந்தைகளுக்கு உப்பு நீர் வெளியேறுவது

★ அதிக காய்ச்சல்

★ மூக்கில் இரத்தம் வடிதல்

★ தோலில் இரத்தம் கசிதல் (சிலசமயங்களில்)

★ வலிப்பு வரலாம்

★ மனஅழுத்தம் ஏற்படலாம்.

★ இதயத் துடிப்பு குறைந்து போகலாம்.

**தடுக்கும் வழிமுறைகள்**

★ நுளம்பைக் கட்டுப்படுத்துவது (நுளம்பு மருந்து , நுளம்பு வலை , எப்போதும் சட்டை அணிந்திருத்தல் போன்ற நடவடிக்கைகள்)

★ தண்ணீர் உள்ள தொட்டிகளை எப்போதும் மூடிவைத்தல் மற்றும் தேங்கிய தண்ணீரில் கொஞ்சம் எண்ணெய் தெளித்து விட்டால்நுளம்பு முட்டை இடுவதைத் தடுத்தல்.

**தடுப்பூசி இல்லை**

டெங்கு காய்ச்சலுக்குத் தடுப்பு ஊசி இன்னும் கண்டுபிடிக்கப்படவில்லை. (முற்றும்)

டாக்டர் பி.சேகர்
குழந்தைநல மருத்துவர்
சென்னை

Health Care மருத்துவ உலகம்
உங்கள் நலம் உங்கள் கைகளில்

## தண்ணீர் அவசியம்



சிலருக்கு அடிக்கடி தலைவலி வரும். அப்படி தலைவலியால் அவதிப்படுபவர்களை டாக்டர் அடிக்கடி நிறைய தண்ணீர் குடிக்குமாறு ஆலோசனை கூறுவார்.ஏன் தெரி யுமா? நமது உடலில் உள்ள தண்ணீர் பற்றாக்குறை ஏற்பட்டால் உடனே ஏற்படுவது தலைவலிதான்! தினமும் முடிந்தளவு நிறையத் தண்ணீர் குடிப்பது அவசியம் என்கிறார்கள் உணவு ஆராய்ச்சியாளர்கள்.

'மனித இனத்தை ஆரோக்கியமாக வைத்திருப்பது சூரிய ஒளி பட்ட தண்ணீர் தான்' என்று கூறியுள்ளார் ஹிப்போக்கிரடிஸ். இவர் மருத்துவ உலகின் தந்தையாக போற்றப்படுபவர்.


இங்கிலாந்தில் சில மருத்துவமனைகளில் தண்ணீர் சிகிச்சைகள் செய்யப்படுவது தற்போது பிரபலமாகி வருகிறது.

'சூரியஒளி பட்ட நீரைக் குடிக்கும் போது அதன் ஒவ்வொரு சொட்டிலும் சூரியசக்தி பரவி 30 சதவீதம் கூடுதலான ஒட்சிசனும் நைதரசன் சக்திகளும் கிடைக்கின்றன.இவை உடம்பில் உள்ள திசுக்களை குணப்படுத்தி சக்தியைக் கொடுத்து நன்கு செயற்பட வைக்கின்ற.சூரிய ஒளிக்கதிரானது கெடுதலான பக்றீறியா கிருமிகளை ஒழித்து நீரைச் சுத்தப்படுத்துகின்றன' என்கிறார் பிரபல தண்ணீர் சிகிச்சை நிபுணர்.

சீனாவில் மூலிகைப் பொடிகளைக் கலந்து மூலிகைக் குளியல்முறையினால் பல நோய்களைக் குணப்படுத்துகிறார்கள்.அதேபோல் பௌத்தமதம், யூத மதம், இஸ்லாமிய மதங்களிலும் குளிப்பதும் ஒருசமயச் சடங்காகவே செய்யப்படுகிறது.

உடலைச் சுத்தப்படுத்துவது குளிப்பதன் மூலம் நடைபெறுகிறது.உடலின் உள் உறுப்புக்களைச் சுத்தப்படுத்துவது தண்ணீர் குடிப்பதன் மூலம் நடைபெறுகிறது.பல நாடுகளில் வெந்நீர் ஊற்றுக்கள் இயற்கையாகவே பூமியிலிருந்து வெளிவந்து கொண்டிருக்கின்றன. ரோமாபுரியில் குளிப்பதை மிகவும் முக்கியமான ஒரு சடங்காகவே வைத்திருந்தார்கள். அவர்கள் அதிகமாக சூரிய ஒளிபட்ட தண்ணீரில்தான் குளித்ததாக வரலாறு கூறுகிறது.

## ஆஸ்துமா அவஸ்தை...!



நமது மூளை,இதயம் , குடல் , சிறுநீரகம் என அனைத்து முக்கிய உறுப்புகளும் முறையாகச் செயற்பட ஒட்சிசன் அத்தியாவசியம். அதில் குறை ஏற்பட்டால் தலை முதல் கால் வரை பாதிப்பு ஏற்படுகிறது.




எனவே நுரையீரலின் இயக்கம் மிக முக்கியமானது. நுரையீரலை பாதிக்கும் மூச்சுக்குழலின் நாள்பட்ட மாற்றங்களைத் தான் நாம் ஆஸ்துமா என்கிறோம்.

ஆஸ்துமா மூச்சுக்குழலில் ஏற்படும் அலர்ஜி யின் வெளிப்பாடு. ஆஸ்துமா நோயாளிகளின் சளியை சோதனை செய்து பார்த்தால் அதில் எந்த வகையான வெள்ளை அணுக்கள் அதிகமாக இருக்கிறது ஈசினோபில்லா அல்லது நியூட் ரோபில்லா என்பதை கண்டுபிடித்து அதை வைத்து அவர்கள் எடுக்கும் ஸ்டீராய்ட் இன் கேலர் நன்றாக செயற்படுகிறதா... இல்லையா? எனத் தெரிந்து கொள்ளலாம்.

அதற்கேற்ப சிகிச்சை அளித்தால் மட்டுமே ஆஸ்துமாவை முழுமையாக குணப்படுத்த முடியும்.

## தெல்லிப்பழை அருள்மிகு ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தான மகா கும்பாபிஷேக பெருவிழா காட்சிகள்....




# யாழ்ப்பாணம் மூவாயிரம் ஆண்டுகள் பழைமையான வரலாறு கொண்டது

## யாழ்.பல்கலைக்கழக வரலாற்றுத்துறை பேராசிரியர் புஸ்பரட்ணம் தெரிவிப்பு



இலங்கை வரலாற்றைப் பொறுத்த வரை வட இலங்கைக்கும் அதற்குள் அடங்கும் யாழ்ப்பாணத்திற்கும் 3 ஆயிரம் ஆண்டு கால பழைமையான வரலாறு உண்டு என யாழ். பல்கலைக்கழக வரலாற்றுத்துறைப் பேராசிரியர் ப.புஸ்பரட்ணம் தெரிவித்துள்ளார்.

யாழ்ப்பாணத்தில் உள்ள மரபுரிமை மையங்களின் மீள் புனரமைப்பும் முகாமைத்துவமும் பற்றிய பயிற்சிப் பட்டறை நேற்று யாழ். கீறீன் கிராஸ் ஹோட்டலில் நடைபெற்றது.

இதில் யாழ்ப்பாணம் தொல்லியல் வரலாற்று நோக்கு என்ற தலைப்பில் உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில்,

இலங்கை வரலாற்றில் வட இலங்கையும் அதற்குள் அடங்கும் யாழ்ப்பாணத்திற்கும் 3 ஆயிரம் ஆண்டுகளுக்கு குறையாத தொன்மையான தொடர்ச்சியான வரலாறு உண்டு. அது பண்டு தொட்டு எமது பாளி இலக்கியங்களில் நாகதீபம் எனவும் தமிழ் இலக்கியங்களில் நாகநாடு எனவும் தனித்து அழைக்கப்பட்ட பிராந்தியமாகக் காணப்படுகிறது. அதன் பண்டைய வரலாறு இலக்கியங்களில் புகைபடர்ந்து காணப்பட்டாலும் 1980 களின் பின்னர் குடாநாட்டில் மேற்கொள்ளப்பட்ட சில தொல்லியல் ஆய்வுகள் அதன் புராதன வரலாற்றிற்குப் புதுவெளிச்சம் ஊட்டியுள்ளன.

எமது தேசிய மரபுரிமை அமைச்சர் தமது வாழ்த்துரையில் கூறியிருப்பது போல் எமது பணிப்பாளர் தமதுகட்டுரையில் விளக்கியிருப்பது போல் பண்டுதொட்டு மேற்காசியாவிற்கும் தென்கிழக்காசியா மற்றும் கிழக்காசிய நாடுகளுக்கு இடையிலான கடல்சார் வர்த்தகத்தில் யாழ்ப்பாணம் முக்கிய வர்த்தகப் பரிமாற்ற மையமாக இருந்துள்ளது. இதை கோட்டையில் மேற்கொள்ளப்பட்டு வரும் ஆய்வுப் பணியில் கிடைக்கும் தொல்லியற் சான்றுகளும் உறுதி செய்கின்றன. இற்றைக்கு 100 ஆண்டுகளுக்கு முன்னர் போல்பீரிஸ் என்ற அறிஞர் அநுராதபுரத்தை அடுத்து இலங்கையில் தோன்றிய புராதன நகரமாக கந்தரோடையைக் குறிப்பிட்டார். அதை கந்தரோடையில் மேற்கொள்ளப்பட்ட ஆய்வுகளும் உறுதி செய்கின்றன.

மேலும் இலங்கையில் ஏனைய பிராந்தியங்களை விட தென்னிந்தியாவின் பண்பாட்டுச் செல்வாக்கிற்கு உட்பட்ட பிராந்தியமாக வட இலங்கை காணப்படுகிறது. அதனால் இங்கு இந்து, பௌத்த மதங்கள் மட்டுமன்றி சமண ஆஜிவிக மதங்களும் முன்பொரு காலத்தில் இருந்திருக்கலாம். அவை எதிர் காலத்தில் இங்கு மேற்கொள்ளப்படும் தொல்லியல் ஆய்வுகளால் தெரியவரலாம். இஸ்லாமிய மதத்தை தென்னாசியாவின் ஏனைய மதங்களில் இருந்து வேறுபடுத்தவே 19ஆம் நூற்றாண்டில் இந்து மதம் என்ற பெயர் உருவாக்கப்பட்டது. அதற்குள் பௌத்த மதமும் உள்ளடங்குகிறது. இந்த மதமும் பௌத்த மதமும் ஒரு நாணயத்தின் இரு பக்கங்கள். இலங்கையின் கடந்த கால வரலாற்றுச் சம்பவங்களை ஆராய்ந்தால் இந்த உண்மைகள் நன்கு புலப்படும்.

இவ்வாறே தென்னாசியாவில் தொடர்ச்சியான வரலாற்று இலக்கிய மரபு கொண்ட நாடு என்ற சிறப்பு இலங்கைக்கு உண்டு. அதை உருவாக்கி தந்த பெருமை பௌத்த குருமாருக்கு உண்டு. இலங்கை சிறிய நாடாக இருந்தாலும் உயர்ந்த பண்பாட்டைக் கொண்ட நாடாகவும் அவற்றையெல்லாம் பேணிப்பாதுகாக்கும் நாடாகவும் உலக நாடுகளிடையே இலங்கை மதிக்கப்படுகிறது. அதை அநுராதபுரம், பொலனறுவை, கண்டி முதலான புராதன நகரங்களின் ஊடாக அறிந்து கொள்ள முடியும்.

வட இலங்கைக்கு 3 ஆயிரம் ஆண்டுகளுக்கு குறையாத பண்பாட்டு வரலாறு இருந்தும் அவற்றைக் கண்டறிந்து பாதுகாப்பதற்கான சாதகமான சூழ்நிலைகள் கடந்த காலத்தில் இருக்கவில்லை.

இப்போது குடாநாட்டின் பொருளாதார அபிவிருத்தியில் புதிய அத்தியாயம் தொடங்கியுள்ளது. அதன் தொடக்கப்புள்ளில் ஒன்றே கோட்டைப்புனரமைப்பாகும். இதற்காக நெதர்லாந்து அரசுக்கு இலங்கை மக்கள் நன்கு கடமைப்பட்டுள்ளனர். சமகால குடாநாட்டு அபிவிருத்தியில் அதன் பாரம்பரிய மரபுரிமைச் சின்னங்களை கண்டறிந்து பாதுகாப்பது என்பது முக்கிய அம்சமாக எடுத்துக் கொள்ளப்பட்டுள்ளது. அதற்கான வேலைத்திட்டங்களை தேசிய மரபுரிமை அமைச்சும் இலங்கைத் தொல்லியற் திணைக்களமும் எமது பல்கலைக் கழகத்தொல்லியற்துறையும் குடாநாட்டு அரச நிறுவனங்களும் இணைந்து தொடக்கியுள்ளன. இந்த பெறுபேறாகக் கிடைக்கும் உண்மைகள் இலங்கை மக்களிடையே சகோதரத்துவம், புரிந்துணர்வு, கலாசார ஐக்கியம், கலாசார ஒருமைத்தன்மை, அமைதி, சமாதானம் வளர உதவும் என்பதில் யாருக்கும் ஐயமில்லை என்று தெரிவித்தார்.

இந்நிகழ்வுக்கு தேசிய மரபுரிமை அமைச்சர் ,நெதர்லாந்து தூதர் ,தேசிய மரபுரிமை அமைச்சின் செயலாளர், தொல்லியற் திணைக்களப்பணிப்பாளர், யாழ். மேலதிக அரச அதிபர், பலாலி படைத்தலைமையக இராணுவ தலைமை அதிகாரி, பேராசிரியர்கள் தொல்லியற் திணைக்கள உத்தியோகத்தர்கள் மற்றும் அரச நிறுவன உத்தியோகத்தர்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.

இந்நிகழ்வை நெதர்லாந்து தூதரகம் தேசிய மரபுரிமை அமைச்சு மற்றும் தொல்லியல் திணைக்களம் ஆகியன இணைந்து ஒழுங்குபடுத்தியிருந்தமை குறிப்பிடத்தக்கது. (ஸ்ரீ-2-6)

# இலங்கையில் உயரமான விஷ்ணு தேவாலயம்

(கொழும்பு)

இலங்கையின் மிக உயரமான விஷ்ணு தேவாலயம் நேற்று காலை திறந்து வைக்கப்பட்டுள்ளதுடன் சமாதான கோபுரத்தையும் அக்கோயில் கொண்டுள்ளது.

சிலாபத்தை அண்டிய உடப்பு பிரதேசத்தில் நேற்று காலை சுப முகூர்த்தத்தில் திறந்து வைக்கப்பட்டுள்ள அக்கோயிலின் உயரம் 108 அடிகளாகும். அதன் இராஜகோபுரத்தில் சமாதானக் கோபுரம் ஒன்றும் நிர்மாணிக்கப்பட்டுள்ளது.

இலங்கையில் யுத்தம் நிலவிய காலகட்டத்தில் சமாதானத்தை வேண்டி நிர்மாணப் பணிகள் ஆரம்பிக்கப்பட்ட இக்கோயில் ஏழு கோடி ரூபா செலவில் நிர்மாணிக்கப்பட்டுள்ளது.

இலங்கையின் உயரமான வணக்கத் தலங்கள் வரிசையில் இக்கோயில் இரண்டாம் இடத்தைக் கொண்டுள்ளது. (ஸ்ரீ-2)

# பெற்றோல் இறக்குமதி சுங்கத்தீர்வை குறைப்பு

பெற்றோல் லீற்றர் ஒன்றை இறக்குமதி செய்வதற்காக விதிக்கப்பட்டிருந்த சுங்கத் தீர்வை 10 ரூபாவால் குறைக்கப்பட்டுள்ளது. பெற்றோலின் விலையை நிலையானதாக வைத்திருக்கும் முகமாகவே இந்த நடவடிக்கை எடுக்கப்படுவதாக நிதியமைச்சு தெரிவித்துள்ளது.

இதன்படி தற்போது 15 ரூபாவாக உள்ள பெற்றோலின் சுங்கத்தீர்வை இனிவரும் காலத்தில் 5 ரூபாவாக இருக்கும் என நிதியமைச்சு குறிப்பிட்டுள்ளது.

இதேவேளை இந்த சுங்கத்தீர்வை குறைப்பு காரணமாக பெற்றோல் மற்றும் டீசலின் விலைகளில் மாற்றங்கள் எவையும் ஏற்படாது என்றும் நிதியமைச்சு தெரிவித்துள்ளது. (ஸ்ரீ-2-9)

வயிற்றைப் பற்றி மட்டுமே நினைப்பவன். தலையை பட்டினி போடுகின்றான். - ஓர் அறிஞன்

வலம்புரி
T.P. 021 567 1530
Web: www.valampurii.com
e-mail: editor@valampurii.com

## ஆட்சியும் இல்லை; மீட்சியும் இல்லை வெறும் காட்சியில் காலம் கழிகிறது

கோதுமை மாவிற்கு நாம் பழக்கப்பட்ட கதையை பெரியதொரு வரலாறாக எழுதமுடியும். அந்த அளவிற்கு அதன் ஊடுருவல் பெரிய கதை.

காலையிலும்,மாலையிலும் அரிசி மாவை உணவாகக் கொண்டிருந்த நமக்கு கோதுமை மாவானது கடதாசிகளை ஒட்டுவதற்காக அறிமுகமான பசைப் பொருளாகும்.

குறிப்பாக இறுதிச் சடங்கின் போது இறந்தவரை எடுத்துச் செல்லப் பயன்படும் 'பாடைக்கு' தாள்களை ஒட்டுவதற்காகவே கோதுமை மா பயன்படுத்தப்பட்டது.

அவ்வாறு கோதுமை மா பயன்படுத்தப்பட்ட பாத்திரங்களைக் கூட எவரும் மீளப்பயன்படுத்துவது கிடையாது.

யாருக்கும் தெரியாத இடத்தில் அந்தப் பாத்திரம் எறியப்படும்.

இப்படியாக எங்களிடம் நுழைந்த கோதுமை மா இன்று,அரிசி மாவுக்குப் பாடை கட்டிவிட்டு அந்த இடத்தைத் தான் பிடித்துக் கொண்டது.

அந்தோ பரிதாபம்! இந்த மண்ணில் விளைந்து,எங்களோடு சீவியம் நடத்தி எங்கள் வீட்டு வளையில் 'புதிர்' என்ற பெயரில் நிறைவாக காட்சி தந்து, எங்கள் நிகழ்வுகளின் போது எல்லாம் கும்பங்களைத் தாங்கி எங்கள் பண்பாட்டோடு இரண்டறக் கலந்திருந்த நெல்லும், அரிசியும்,மாவும் எங்கள் களஞ்சிய அறைகளில் இருந்து விடைபெற்றுச் செல்ல கோதுமை மா,அந்த இடத்தை பிடித்துக் கொண்டது.

உடல் ஊதவும்,பித்தம் பெருகவும்,சலரோகம் பற்றிப் பிடிக்கவும் நாங்கள் சாப்பிடும் கோதுமை மா எங்களை சாப்பிடுகின்றது.

இது பற்றி எல்லாம் இவ்விடத்தில் எடுத்துரைப்பதன் மூலம் கோதுமை மாவை எங்கள் சமையலறை அரியாசனத்திலிருந்து அகற்றி விட முடியாதென்பது நிறுத்திட்டமான உண்மை.

அப்படியானால் இது பற்றி ஏன் கூறினீர்கள் என நீங்கள் கேட்பதும் நியாயமானதே! ஆம் கோதுமை மா எப்படி எங்கள் மண்ணில் நுழைந்ததோ அது போன்று இன்னும் பற்பல பொருள்கள் எங்களிடம் நுழையப் போகின்றன. அவற்றின் நுழைவுக்கான கால்கோள் விழாத் தான் யாழ்ப்பாணத்தில் நடைபெறும் சர்வதேச வர்த்தகக் கண்காட்சி.

எங்களின் வசந்தத்தைப் பறித்து தங்களின் வசந்தத்தை கட்டியெழுப்ப காட்சி நடக்கிறது. ஆட்சியும் இல்லை,மீட்சியும் இல்லை. வெறும் காட்சியில் காலங் கழிப்பது தகுமோ தமிழா! உணர்க.

## அனுமதி கிடைத்தும் பயிற்சிநெறியை மேற்கொள்ள முடியாமல்போன மாணவர்களுக்கான மீள் அனுமதி

(வவுனியா)

கடந்த ஆண்டுகளில் தேசிய கல்வியியற் கல்லூரிகளுக்கு விண்ணப்பித்து நேர்முகப் பரீட்சைக்கு சமுகமளிக்க முடியாமல் போன, கல்வியியற் கல்லூரிகளில் அனுமதி கிடைத்தும் பயிற்சி நெறியைத் தொடர முடியாமல் போன கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்டத்தைச் சேர்ந்தவர்களால் சமர்ப்பிக்கப்பட்ட மீள்பரிசீலனை விண்ணப்பங்கள் பரிசீலிக்கப்பட்டு அவர்களில் 10பேருக்கு ஆசிரியர் கல்வி பிரதம ஆணையாளரூடாக கல்வி அமைச்சின் செயலாளரின் அனுமதி பெறப்பட்டுள்ளது.

கடந்த 2007,2008, 2009,2010 ஆம் ஆண்டுகளில் கிளிநொச்சி, முல்லைத்தீவு ஆகிய மாவட்டங்களிலிருந்து தேசிய கல்வியியற் கல்லூரிகளுக்கு அனுமதிக்கப்பட்ட வெட்டு புள்ளிகளை விட அதிகமான Z புள்ளிகளை கொண்டிருந்தவர்களுக்கு மட்டுமே மீள் அனுமதிக்காக அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

இதற்கமைய அனுமதியளிக்கப்பட்டவர்களின் பெயர் விபரங்கள்,

எஸ்.அன்னதாரகை-ஆரம்பக் கல்வி (2007),ஜே.ஸ்ரீபன்-கிறிஸ்தவம் (2007),பீ.கருணைரூபி-ஆரம்பக் கல்வி (2007),டீ.ஜசிந்தன்-சித்திரம் (2007),ப.கஜேந்தினி-சங்கீதம் (2007),எம்.நர்மதா-ஆங்கிலம் (2008),எம்.கமலதாஸ்-இந்துசமயம் (2008),கே.டினேஸ்குமார்-ஆரம்பக்கல்வி (2009), எஸ்.கணேஸ்வரன்-ஆரம்பக்கல்வி (2009), வ.நிஷாந்தினி-நடனம் (2010),

அனுமதியளிக்கப்பட்டவர்களினது தகுதிநிலை பற்றி பரிசீலித்து உறுதிப்படுத்தி கொள்வதற்காக பின்வரும் மூல ஆவணங்களுடனும்,அவற்றின் நிழற்பட பிரதிகளுடனும் எதிர்வரும் 31ஆம் திகதி திங்கட்கிழமை வவுனியா தேசிய கல்வியியற் கல்லூரிக்கு காலை 9மணிக்கு சமுகமளிக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

பிறப்புச் சான்றிதழின் மூலப்பிரதி, தேசிய அடையாள அட்டையும் அதன் பிரதியும்,க.பொ.த. உயர்தர பரீட்சை சான்றிதழின் மூலப்பிரதி,Z புள்ளி சான்றிதழின் மூலப்பிரதி, க.பொ.த (சாதாரணம்) தரப் பரீட்சை சான்றிதழின் மூலப்பிரதி, பாடசாலை விடுகைப் பத்திரம், கிராம சேவகர்,பாடசாலை அதிபரின் நற்சான்றிதழ்களின் மூலப் பிரதி, அரசாங்கத் தொழில் புரியவில்லை என்பதையும் பல்கலைக் கழகத்தில் பதிவு செய்யப்படவில்லை என்பதையும்,திருமணம் ஆகவில்லை என்பதையும் உறுதிப்படுத்தும் கிராம சேவையாளரின் உறுதிப்படுத்தலுடன் கூடிய கடிதம் தனித்தனியாக,போட்டோ பிரதிகளுடன் கொண்டு வருதல் வேண்டும்.

மேற்குறிப்பிட்டவர்களுக்கு தனித் தனியாக கடிதங்கள் அனுப்பப்பட்டுள்ளன. கடிதங்கள் கிடைக்காது விடினும் மேற் குறிப்பிட்டவர்கள் உரிய திகதியில் குறித்த ஆவணங்களுடன் சமுகமளிக்குமாறு வவுனியா தேசிய கல்வியியற் கல்லூரி பீடாதிபதி க.பேர்ணாட் கேட்டுள்ளார். (ஸ்ரீ-2)

## மன்னாரில் ஆட்கடத்தல் சந்தேகநபர்கள் கைது

(மன்னார்)

மன்னாரில் இடம்பெற்ற ஆட்கடத்தலுடன் தொடர்புடையதாகச் சந்தேகிக்கப்படும் சிலர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.மாந்தை மேற்கு விடத்தல்தீவு பிரிவிற்குட்பட்ட அடம்பன் பகுதியில் மீளக்குடியேறிய பொதுமக்களினால் வழங்கப்பட்ட தகவல் ஒன்றின் அடிப்படையிலேயே குறித்த சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

தாம் பொலிஸ் புலனாய்வுப் பிரிவைச் சேர்ந்தவர்கள் எனக்கூறி குறித்த சந்தேக நபர்கள் பூட்டப்பட்டிருந்த வீடொன்றினைப் பலாத்காரமாகத் திறந்து இருபது வயது மதிக்கத்தக்க இளைஞன் ஒருவரை கடுமையாகத் தாக்கியிருக்கின்றனர்.

தாக்குதலுக்கு இலக்கான வர்ணகுலசிங்கம் டென்சில் காயமடைந்த நிலையில் வைத்தியசாலையில் அனுமதிக்கபட்டிருப்பது தொடர்பாகவும் தாக்குதலை மேற்கொண்டவர்கள் தொடர்பிலும் விடத்தல்தீவு பொலிஸாருக்கு தெரிவிக்கப்பட்டதை அடுத்து குறித்த நபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இது தொடர்பாக நான்கு சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டு நீதிமன்றத்தின் உத்தரவிற்கமைய தடுப்புக் காவலில் வைக்கப்பட்டிருப்பதாக மன்னார் பொலிஸ் நிலைய சிரேஷ்ட பொறுப்பதிகாரி தெரிவித்துள்ளார்.

இவர்களை 14நாட்களுக்கு விளக்கமறியலில் வைக்குமாறு மன்னார் நீதவான் நீதிமன்றம் பொலிஸாருக்கு உத்தரவிட்டுள்ளது.

கடந்த வாரம் மன்னாரில் பாடசாலை மாணவர்கள் இருவர் கடத்தப்பட்டு தாக்கப்பட்ட நிலையில் விடுவிக்கப்பட்டதற்கும் மேற்படி தாக்குதல் மற்றும் குற்றச் செயலில் ஈடுபட்டவர்களுக்கும் தொடர்பேதும் உள்ளதா என்பது தொடர்பிலும் தாம் விசாரணைகளை முடுக்கி விட்டிருப்பதாக மன்னார் பொலிஸ் நிலைய சிரேஷ்ட பொறுப்பதிகாரி தலுவத்த தெரிவித்துள்ளார். (ந-5)

## வடமராட்சி கிழக்கு பாடசாலைகளுக்கு அமைச்சர் டக்ளஸ் சி.டி.எம்.ஏ. வழங்கினார்

(யாழ்ப்பாணம்)

வடமராட்சி கிழக்கு மருதங்கேணி கோட்டத்திற்குட்பட்ட பத்து பாடசாலைகளுக்கு பாரம்பரிய கைத்தொழில்கள் மற்றும் சிறுதொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சர்டக்ளஸ்தேவானந்தா சி.டி.எம்.ஏ. தொலைபேசிகளை வழங்கியுள்ளார்.

யாழ்ப்பாணத்திலுள்ள அமைச்சரின் செயலகத்தில் வைத்து இத் தொலைபேசிகள் நேற்று அந்தந்த பாடசாலைகளின் அதிபர்களிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளன.

மருதங்கேணி கோட்டத்திற்குட்பட்ட உடுத்துறை மகாவித்தியாலயம், தாளையடி றோமன் கத்தோலிக்க தமிழ்க் கலவன் பாடசாலை, செம்பியன்பற்று அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலை, அம்பன் அமெரிக்கன் தமிழ்க் கலவன் பாடசாலை, குடத்தனை அமெரிக்கன் மிசன் தமிழ்க் கலவன் பாடசாலை, நாகர் கோயில் மகாவித்தியாலயம், மருதங்கேணி இந்து தமிழ்க் கலவன் பாடசாலை, மணற்காடு றோமன் கத்தோலிக்க தமிழ்க் கலவன் பாடசாலை, ஆழியவளை இந்து தமிழ்க் கலவன் பாடசாலை, வெற்றிலைக்கேணி பரமேஸ்வரா வித்தியாலயம் போன்ற பாடசாலைகளுக்கு இத் தொலைபேசிகள் வழங்கப்பட்டன.

இந் நிகழ்வில் மருதங்கேணி பிரதேச செயலாளர் திருலிங்கநாதன், வடமராட்சி ஈ.பி.டி.பி அமைப்பாளர் ரங்கன், வடமராட்சி கிழக்கு ஈ.பி.டி.பி அமைப்பாளர் சதீஸ்,வடமராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் செல்வரா்ஜா உள்ளிட்ட பலரும் கலந்து கொண்டனர். (ந)

## சுவாமி விவேகானந்தரின் சிகாகோ சொற்பொழிவுகள்



அமெரிக்க சகோதரிகளே, சகோதரர்களே!

இன்பமும் இதமும் கனிந்த உங்கள் வரவேற்புக்கு மறுமொழிகூற இப்போது உங்கள் முன் நிற்கிறேன். என இதயத்தில் மகிழ்ச்சி பொங்குகிறது. அதனை வெளியிட வார்த்தைகள் இல்லை. உலகத்தின் மிகப்பழைமை வாய்ந்த துறவியர் பரம்பரையின் பெயரால் உங்களுக்கு நன்றி கூறுகிறேன். அனைத்து மதங்களின் அன்னையின் பெயரால் நன்றி கூறுகிறேன். பல்வேறு இனங்களையும் பிரிவுகளையும் சார்ந்த கோடிக்கணக்கான இந்துப் பெருமக்களின் பெயரால் நன்றி கூறுகிறேன்.

இந்த மேடையில் அமர்ந்துள்ள பேச்சாளர்களுள் சிலர் கீழ்த்திசை நாடுகளிலிருந்து வந்துள்ள பிரதிநிதிகளைப் பற்றிக் குறிப்பிடும்போது, 'வேற்று சமய நெறிகளை வெறுக்காத பண்பினைப் பல நாடுகளுக்கு எடுத்துச் சென்ற பெருமை, தொலைவிலுள்ள நாடுகளிலிருந்து வந்துள்ள இவர்களைத்தான்சாரும்' என்று உங்களுக்குக் கூறினார்கள். அவர்களுக்கும் என் நன்றி. பிற சமயக் கொள்கைகளை வெறுக்காமல் மதித்தல், அவற்றை எதிர்ப்பு இன்றி ஏற்றுக் கொள்ளுதல் ஆகிய இரு பண்புகளை உலகத்திற்குப் புகட்டிய மதத்தைச் சார்ந்தவன் நான் என்பதில் பெருமை அடைகிறேன். எதையும் வெறுக்காமல் மதிக்க வேண்டும் என்னும் கொள்கையை நாங்கள் நம்புவதோடு, எல்லா மதங்களும் உண்மை என்று ஒப்புக்கொள்ளவும் செய்கிறோம். உலகிலுள்ள அனைத்து நாடுகளாலும் அனைத்து மதங்களாலும் கொடுமைப்படுத்தப் பட்டவர்களுக்கும், நாட்டை விட்டு விரட்டி அடிக்கப்பட்டவர்களுக்கும் புகலிடம் அளித்த நாட்டைச் சேர்ந்தவன் நான் என்பதில் பெருமைப்படுகிறேன். ரோமானியரின் கொடுமையால், தங்கள் திருக்கோயில் சிதைந்து சீரழிந்த அதே வருடம் தென்னிந்தியாவிற்கு வந்து எங்களிடம் தஞ்சமடைந்த அந்தக் கலப்பற்ற இஸ்ரேல் மரபினர்களுள் எஞ்சி நின்றவர்களை மனமாரத் தழுவிக் கொண்டவர்கள் நாங்கள் என்று கூறிக்கொள்வதில் பெருமைப்படுகிறேன். பெருமைமிக்க சொராஸ்டிரிய மதத்தினரில் எஞ்சியிருந்தோருக்கு அடைக்கலம் அளித்து இன்னும் பேணிக்காத்து வருகின்ற சமயத்தைச் சார்ந்தவன் என்பதில் பெருமை கொள்கிறேன்.

# கராச்சியில் கலவரம் அதிகரிப்பு பாக். மக்கள் கட்சி கொதிப்பு

(இஸ்லாமாபாத்)

கராச்சி நகரில் கலவரத்தைத் தூண்டி விடுபவர்கள் மீது அரசு இரும்புக்கரம் கொண்டு நடவடிக்கை எடுக்கும் என்று பாகிஸ்தான் மக்கள் கட்சி தெரிவித்துள்ளது.

கராச்சியில் சமீப காலமாக தொடர்ந்து பல காரணங்களைக் காட்டி கலவரங்கள் இடம் பெற்று வருகின்றன. சமீபத்தில் நடந்த ஒரு கலவரத்தில் முன்னாள் துணை மேயர் ஒருவர் கொல்லப்பட்டார்.

கடந்தாண்டில் அந்நகரில் நடந்த கலவரங்களில் ஆயிரத்து 981 பேர் கொல்லப்பட்டனர். இவர்களில் 177 பேர் பெண்கள் , 78 பேர் குழந்தைகள் ஆகும்.

இக்கலவரங்களை பாக். ஆளும் கூட்டணியில் அங்கம் வகிக்கும் முட்டாஹிதா குவாமி இயக்கம் மற்றும் அவாமி தேசிய கட்சிக் ஆகியவற்றின் ஆதரவாளர்கள் நிகழ்த்துவதாக குற்றச்சாட்டுகள் எழுந்துள்ளன.

இந்நிலையில் கராச்சி நகரின் சட்டம், ஒழுங்கு நிலை குறித்து ஆராய்வதற்காக அந்நாட்டு ஜனாதிபதி ஆசிப் அலி சர்தாரி தலைமையில் பாக். மக்கள் கட்சிக் கூட்டம் நேற்று முன்தினம் நடந்தது. அதில் பிரதமர் யூசுப் ரஸா கிலானி மற்றும் வெளியுறவுத்துறை அமைச்சர் ரகுமான் மாலிக் உள்ளிட்ட முக்கிய அரசியல் தலைவர் கலந்து கொண்டனர்.

இக் கூட்டத்தின் இறுதியில் வெளியிடப்பட்ட அறிக்கையில் கராச்சியில் கலவரத்தைத் தூண்டி விட்டு கொலை செய்பவர்கள் மீது எவ்வித பாரபட்சம் இல்லாமல் இரும்புக் கரம் கொண்டு நடவடிக்கைகள் எடுக்கப்படும். எவ்வழியிலாவது நகரின் அமைதி மீண்டும் நிலை நாட்டப்படும் என்று தெரிவிக்கப்பட்டது. (ஸ்ரீ-2)



பாகிஸ்தானின் கராச்சி நகர் அருகில் நூரியாபாத் என்ற இடத்தில் பயணிகள் பேருந்தும் எண்ணெய் லொறியும் மோதிக் கொண்ட விபத்தில் 22 பேர் பலியாகினர். 32 பேர் காயம் அடைந்தனர். பலியானோரின் உடல்களை மீட்புக் குழுவினர் அகற்றுகின்றனர்.

# உலகின் பெரிய பணக்காரர் தொடங்கும் அருங்காட்சியகம்

உலகில் மிகவும் பணக்காரர் என போர்ப்ஸ் பத்திரிகையில் புகழப்பட்ட மெக்சிகோ நாட்டு தொழிலதிபர் கார்லோஸ் ஸ்லீம் என்பவர் மெக்சிகோ சிட்டி நகரில் கலைநுட்பத்துடன் கூடிய அருங்காட்சியகம் ஒன்றை நிறுவவுள்ளார்.

இதற்கான மெக்சிகோ சிட்டியில் 6 ஆயிரம் சதுர மீற்றர் பரப்பளவில் ஐரோப்பிய நாட்டு கட்டட வடிவமைப்பாளர் ஈல்- கிரிகோ என்பவர் வடிவமைத்து தரவுள்ளாா.

இதில் 66 ஆயிரம் பணியாளர்கள பல்வேறு கலைஞர்களின் கைவண்ணத்தில் அரங்குகள் நிர்ணயித்து வருகின்றனர். இதற்கான ஏற்பாட்டினை தொழிலதிபர் மருமகன் பெர்னாண்டோ ரோமிரே எனும் கட்டட வடிவமைப்பாளர் செய்து வருகிறார். இதற்கான திட்டம் கடந்த 2008 ஆம்ஆண்டு முதல் தொடங்கப்பட்டதுடன் இதற்கான திட்டம் எதிர்வரும் ஏப்ரல் மாதம் இந்த அருங்காட்சியகம் திறக்கப்படவுள்ளது. (ஸ்ரீ-2)




# மோனாலிசா ஓவியப் பின்னணி தொடர்பாக புதிய தகவல்

(ரோம்)



இத்தாலியின் புகழ்பெற்ற லியனார்டோ டாவின்சியின் பிரபலமான மோனலிசா ஓவியத்தைப் பற்றி அந்த ஓவியத்துக்கு யார் மொடலாக இருந்தனர். ஓவியத்தின் பின்ணிக் காட்சிகள் கற்பனையா, உண்மையா என்பன போன்ற புதிய தகவல்கள் வெளியாகியுள்ளன.

லியனார்டோ டாவின்சி வரலாற்றுப் புகழ்பெற்ற ஓவியர். இவரது ஓவியங்களுள் இன்றுவரை சாகாவரம் பெற்றது மோனா லிசா ஓவியம். இப்படத்தில் லிசாவின் பின்னணியில் ஒரு பாலம் மற்றும் சாலை மங்கலாகக் காட்டப்பட்டிருக்கும் . இந்த ஓவியத்தைப் பற்றி இதுவரை பல்வேறு ஆய்வுகள் நடந்துள்ளன. அவை அனைத்தும் லிசாவைப் பற்றி மட்டுமே ஆய்வு செய்தவை. அவரின் பின்னணியில் உள்ளதை யாரும் கண்டு கொள்ளவில்லை. பாலமும் சாலையும் டாவின்சியின் கற்பனைச் சித்திரங்கள் என்றே பலரும் கருதிவந்தனர்.

இந்நிலையில் இதுகுறித்து கர்லா க்ளோரி என்பவர் விரிவான ஆய்வுகளைச் செய்தார். பொதுவாக மோனாலிசா ஓவியத்துக்காக இத்தாலியின் ப்ளோரன்ஸ் நகரில் வாழ்ந்த லிசா டெல் ஜியோகாண்டோ என்ற பெண்ணைத் தான் டாவின்சி மொடலாக பயன்படுத்தினார் என்று நம்பப்படுகிறது.

ஆனால் 15 ஆம் நூற்றாண்டில் இத்தாலியின் மிலன் நகரத்து இளவரசியாக இருந்த பியங்கா கியோவன்னா போர்சா என்ற பெண்ணையே டாவின்சி தனது ஓவியத்துக்கான மொடலாக பயன்படுத்தியுள்ளார் என்று கர்லா தனது ஆய்வில் கண்டறிந்துள்ளார்.

இந்த ஆய்வில் அவர் ஈடுபட்டிருந்த போதுதான் லிசாவின் பின்னணியில் உள்ள காட்சிகள் இத்தாலியின் வடபகுதியில் உள்ள போபியோ என்ற சிறு நகரத்தில் உள்ளன என்பதையும் கண்டறிந்தார். அந்நகரத்தின் மத்தியில் உள்ள அரண்மனை ஜன்னல் வழியாகப் பார்த்தால் லிசாவின் பின்னணிக் காட்சிகள் அப்படியே தெரிவதாகவும் அவர் தெரிவித்தார். அவரது ஆய்வு உண்மைதான் என்பதை நிரூபிக்கும் வகையில் இன்றும் அந்நகரத்தில் லிசாவின் பின்னணியில் தெரியும் பாலம் ஒன்று உள்ளது. (ஸ்ரீ-2)

# தென்னாபிரிக்காவில் கனமழை; வெள்ளத்தில் சிக்கி 70 பேர் பலி

(ஜோகன்னஸ்பேர்க்)

தென்னாபிரிக்காவில் கடந்த சில நாட்களாக பெய்து வரும் கன மழையால் ஏற்பட்ட வெள்ளத்தில் சிக்கிப் பலியானோரின் எண்ணிக்கை 70 ஆக அதிகரித்துள்ளது.

ஆபிரிக்கக் கண்டத்தில் உள்ள மேலும் ஐந்து நாடுகள் வெள்ள அபாயத்தை எதிர் நோக்கியுள்ளன. *லாநினா* பருவநிலை மாறுபாட்டால் தென்னாபிரிக்கா உள்ளிட்ட ஆபிரிக்கக் கண்டத்தின் தென்பகுதியில் உள்ள ஆறுநாடுகளில் கடந்த சில நாட்களாக கன மழை பெய்து வருகிறது. இதனால் அங்கு பாயும் ஆறுகளில் இரண்டு மடங்கு வெள்ளம் அதிகரித்துள்ளது.


தென்னாபிரிக்காவில் மட்டும் வெள்ள அபாயத்தால் எட்டாயிரம் பேர் தங்கள் வீடுகளை விட்டு வெளியேற்றப்பட்டுள்ளனர். வெள்ளத்தில் சிக்கி பலியானோரின் எண்ணிக்கை 70 ஆக அதிகரித்துள்ளது.

நாட்டின் ஒன்பது மாகாணங்களில் எட்டு மாகாணங்கள் பேரிடர் பகுதிகளாக அறிவிக்கப்பட்டள்ளன. தென்னாபிரிக்காவின் மாகாண மற்றும் உள்ளூர் நிர்வாகத்துறை அமைச்சர் சிசலோ ஷிசகா , 225 கோடி ரூபாவுக்கு வெள்ளச்சேதம் ஏற்பட்டள்ளதாக தெரிவித்துள்ளார்.

ஜாம்பியா நாட்டில் ஓடும் ஒக்காவாங்கோ ஆறு மற்றும் நமீபியா நாட்டில் ஓடும் ஜாம்பேசி ஆறு ஆகியவற்றில் வெள்ளம் அதிகரித்து வருகிறது. இதனால், ஆபிரிக்கக் கண்டத்தின் தென்பகுதியில் உள்ள நமீபியா , போட்ஸ்வானா, ஜாம்பியா ,சிம்பாவே மற்றும் மொசாம்பிக் ஆகிய ஐந்து நாடுகளில் வெள்ள அபாய எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

மொசாம்பிக் நாட்டில் வெள்ளத்திற்கு இதுவரை 10 பேர் பலியாகியுள்ளதுடன் 10 ஆயிரம் பேர் வீடுகளை விட்டு வெளியேறியுள்ளனர். (ஸ்ரீ-2)

# வானத்தில் புதிய சூரியன் தோன்றும்



(வோஷிங்டன்)

வானில் அடிக்கடி அதிசயங்கள் நிகழ்ந்து வருகிறது. இந்நிலையில் வானில் மிகவும் சக்தி வாய்ந்த வெளிச்சம் ஏற்படவுள்ளது. பூமி தோன்றியதில் இருந்து இதுவரை அது போன்ற நிகழ்வு ஏற்பட்டிருக்காது என்ற நிலை உருவாகும். அந்த வெளிச்சம் இரவை பகல் போன்று ஆக்கும். அது ஒரு வாரம் முதல் 2 வாரங்கள் வரை ஏற்படும் வாய்ப்புள்ளது.


அதிசக்தி வாய்ந்த விண்மீன் கூட்டம் பூமியில் இருந்து 640 வெளிச்சம் ஆண்டுகள் தூரத்தில் உள்ளது. இவை சிவப்பு நிறத்தில் இராட்சத வடிவிலானவை.இவற்றின் ஆயுட்காலம் முடியும் போது அவை கூட்டம் கூட்டமாக வெடித்து சிதறும். இவ்வாறு வெடித்து சிதறும் போது வானில் சிவப்பு மற்றும் மஞ்சள் நிறத்தில் வெளிச்சம் தோன்றும்.

இது மற்றொரு சூரியன் புதிதாக உதிப்பதை போன்ற தோற்றத்தை உருவாக்கும். இச்சம்பவம் இந்த ஆண்டு இறுதியில் ஏற்படும் வாய்ப்பு ஏற்பட்டுள்ளது.

இல்லாவிட்டால் அடுத்த 10 இலட்சம் ஆண்டுக்குள் தான் உண்டாகும். இந்தத் தகவலை அவுஸ்திரேலியாவின் தெற்கு குவின்ஸ்லாந்து பல்கலைக்கழகத்தின் இயற்பியல் துறை தலைவர் பேராசிரியர் பிராட்கார்டர் தெரிவித்துள்ளார். (ஸ்ரீ-2)



தாய்லாந்தில் உடனடியாக பொதுத்தேர்தலை நடத்தக்கோரி செஞ்சட்டை இயக்கத்தைச் சேர்ந்தவர்கள் தலைநகர் பாங்கொங் நகரில் அரசுக்கெதிராக ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டதைப் படத்தில் காணலாம்.



அமெரிக்கத் தகவல் கூடம் நேற்று யாழ்ப்பாணத்தில் திறந்துவைக்கப்பட்டது. இந்நிகழ்வில் விருந்தினர்கள் அழைத்து வரப்படுவதையும், இக் கூடத்தை இலங்கை, மாலைதீவுக்கான அமெரிக்கத் தூதுவர் பற்றீசியா புட்னீஸ் நாடாவை வெட்டித் திறந்து வைப்பதையும், நிகழ்வில் கலந்துகொண்டவர்களையும் படங்களில் காணலாம்.

# ஆஸி.ஓபன் டென்னிஸ் தொடர் காலிறுதியில் நடால், கிளைஸ்டர்ஸ்

(மெல்போர்ன்)

அஸ்திரேலியன் ஓபன் டென்னிஸ் தொடரின் ஒற்றையர் பிரிவு காலிறுதிக்கு ஸ்பெயின் ரபெல் நடால், இங்கிலாந்தின் அன்டி முர்ரே, பெல்ஜியத்தின் கிம் கிளைஸ்டர்ஸ் உள்ளிட்ட முன்னணி நட்சத்திரங்கள் முன்னேறி உள்ளனர்.

மெல்போர்னில் அவுஸ்திரேலியன் ஓபன் கிராண்ட்ஸ்லாம் டென்னிஸ் தொடர் நடக்கிறது. இதில் நேற்று நடந்த ஆண்கள் ஒற்றையர் 4வது சுற்றில் உலகின் நம்பர்-1 வீரரான ஸ்பெயினின் ரபெல் நடால், குரோஷியாவின் மரின் சிலிக்கை சந்தித்தார். இதில் அபார ஆட்டத்தை வெளிப்படுத்திய நடால் 6-2,6-4,6-3 என்ற நேர் செட்டில் வெற்றி பெற்று காலிறுதிக்கு முன்னேறினார்.

**சோடர்லிங் அவுட்**

மற்றொரு 3வது சுற்றுப் போட்டியில் சுவீடனின் ரொபின் சோடர்லிங், உக்ரைன் வீரர் அலெக்சாண்டர் டோல்கோபோலோவை சந்தித்தார். இதில் சோடர்லிங் 6-1,3-6,1-6,6-4,2-6 என்ற செட் கணக்கில் தோல்வியடைந்து வெளியேறினார். மற்ற போட்டிகளில் இங்கிலாந்தின் ஆன்டி முர்ரே, ஸ்பெயினின் டேவிட் பெரர் உள்ளிட்டோர் வெற்றி பெற்று காலிறுதிக்குள் நுழைந்தனர்.

**கிளைஸ்டர்ஸ் முன்னேற்றம்**

பெண்கள் ஒற்றையர் 4வது சுற்றில் பெல்ஜியத்தின் கிளைஸ்டர்ஸ், ரஷ்யாவின் எகடரினா மகரோவாவை சந்தித்தார். இதில் கிளைஸ்டர்ஸ் 7-6,6-2 என்ற நேர் செட் கணக்கில் வெற்றி பெற்று காலிறுதிக்கு முன்னேறினார்.

மற்ற போட்டிகளில் செக் குடியரசின் பெட்ரா கெவிடோவா, ரஷ்யாவின் சுவனரேவா, போலத்தின் அக்னீஸ்கா ரத்வான்ஸ்கா உள்ளிட்டோர் வெற்றி பெற்று காலிறுதிக்கு தகுதி பெற்றனர்.

# ஹயூரிட்சிற்கு சத்திரசிகிச்சை

(மெல்போர்ன்)

தோள் பட்டை காயம் காரணமாக அணியில் இருந்து நீக்கப்பட்ட அவுஸ்திரேலிய வீரர் நதன் ஹயூரிட்சிற்கு சத்திரசிகிச்சை செய்யப்படவுள்ளது.

இங்கிலாந்துக்கு எதிரான இரண்டாவது ஒரு நாள் போட்டியின் போது நாதன் ஹயூரிச் வலது தோள் பட்டையில் காயம் அடைந்தார். இதையடுத்து அணியில் இருந்து நீக்கப்பட்டு டோவரஸ்ரி சேர்க்கப்பட்டார்.

இதனிடையே ஹயூரிட்சிற்கு விரைவில் சத்திரசிகிச்சை செய்யப்படவுள்ளது. இதனால் உலகக் கிண்ண தொடரில் பங்கேற்பாரா என்பது குறித்து சந்தேகம் ஏற்பட்டுள்ளது.

# தோல்விக்குக் காரணம் துடுப்பாட்டம் சொல்கிறார் அணித்தலைவர் தோனி

(செஞ்சூரியன்)

துடுப்பாட்ட வீரர்கள் ஏமாற்றியதால்தான் தென்னாபிரிக்க அணிக்கு எதிரான ஒரு நாள் தொடரை வெல்லமுடியாமல் போனது. ஆனால் உலகக்கிண்ணத் தொடரில் இது போல் நடக்காது என நம்புகிறேன் என இந்திய அணித்தல்லவர் தோனி தெரிவித்துள்ளார்.


தென்னாபிரிக்கா சென்ற இந்திய அணி ஒருநாள் தொடரை 2:3 என்ற கணக்கில் இழந்தது. இது குறித்து அணித்தலைவர் தோனி கூறியதாவது,

ஒருநாள் தொடர் முழுவதும் இந்தியத் துடுப்பாட்ட வீரர்கள் அதிக ஓட்டங்களை எடுக்கவில்லை. முதலில் விராட் ஹோலியும் பின் வரிசையில் யூசுப்பதானும் சிறப்பாகச் செயற்பட்டனர். ஆனால் போட்டியை வெல்ல ஒருங்கிணைந்து சிறப்பாக விளையாடவேண்டும்.

துடுப்பாட்ட வீரர்கள் ஒட்டுமொத்தமாகச் சொதப்பியதால்தான் தொடரை இழக்க நேரிட்டது. ஆனால் உலகக் கிண்ணத் தொடர் ஆரம்பமாகவுள்ள நேரத்தில் இவை சரியாகிவிடும் என்று நம்புகிறேன்.

தவிர வீரர்களின் பயிற்சிக்கு போதிய நேரம் இல்லை என்பதுதான் உண்மை. எப்போதுமே போட்டிகளில்பங்கேற்றுக்கொண்டுள்ளோம். ஆண்டுக்கு 30முதல் 35 போட்டிகளில் பங்கேற்கும்போது போர்மில் ஏற்ற இறக்கங்கள் இருக்கத்தான் செய்யும். இது கிரிக்கெட்டில் சகஜம்தான் என தோனி தெரிவித்துள்ளார்.

# இந்திய அணியின் பயிற்சியாளர் கிரிஸ்டன் பதவி விலகுவது உறுதி



கிறிஸ்டன்

(பெங்களூர்)

உலகக்கிண்ணத் தொடருக்குப் பின் இந்திய அணியின் பயிற்சியாளர் பதவியிலிருந்து கிறிஸ்டன் விலகுவது உறுதியாகியுள்ளது.

இந்திய அணியின் பயிற்சியாளராக கடந்த மூன்று ஆண்டுகளுக்கு முன் ஒப்பந்தமானவர் தென்னாபிரிக்காவின் கிறிஸ்டன். இவரது பயிற்சியில் இந்திய அணி டெஸ்ட் தர வரிசையில் நம்பர்-1 இடத்தைப் பெற்றது.

இதனிடையேவரும் உலகக்கிண்ணத் தொடருடன் கிறிஸ்டனின் பதவிக்காலம் முடிகிறது.

இதற்குப் பின் தனது குடும்பத்துடன் நேரம் செலவிட விரும்புவதால் பதவியில் நீடிக்க விரும்பவில்லைஎன கிரிஸ்டன் தெரிவித்துள்ளதாகத் தெரிகிறது.

இது குறித்து இந்திய கிரிக்கெட் சபைகள் (பி.சி.சி.ஐ.) நிர்வாகி ஒருவர் கூறியதாவது,

இந்திய அணியின் பயிற்சியாளர் பதவியில் அடுத்த மூன்று ஆண்டுகளுக்கு கிரிஸ்டன் பயிற்சியாளராகத் தொடரவேண்டும் என அனைவருமே விரும்புகின்றனர். ஏனெனில் இவரது பயிற்சியில் இந்திய அணி சிறப்பான வெற்றிகளைப் பெற்றது. இந்த வெற்றிகள் அனைத்திலும் அவருக்கும் பங்குள்ளது. அணியை ஒற்றுமை ஏற்படுத்தி வலிமையானதாக மாற்றினார்.

மீண்டும் பதவியில் தொடர்வது குறித்து அவரிடம் நீண்ட நேரம் பேசினோம். ஆனால் உலகக் கோப்பைத் தொடருக்குப் பின் பதவியிலிருந்து விலகுவது என்ற முடிபில் உறுதியாகவுள்ளார்.

குடும்பத்தினருடன் நேரம் செலவிட வேண்டும் என்ற அவரது முடிபுக்கு நாங்கள் மரியாதை தருகிறோம்.

இவ்வாறு அந்த நிர்வாகி தெரிவித்தார்.

# பௌத்த...

தனியார் வைத்தியசாலையில் கடுமையான காயங்களுக்கு உள்ளான பௌத்த துறவிகள் அனுமதிக்கப்பட்டு இருப்பதாக அங்கிருந்து வரும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

தமிழக மீனவர்கள் இலங்கை கடற்படையால் தாக்கப்படுவதன் எதிரொலியாகவே இந்தத் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டதாக தமிழக செய்திகள் தெரிவிக்கின்றன. (ந-5)

# மனித உரிமைகள் விவ...

புதிய அமைச்சரவையில் அவர் பெருந் தோட்டக் கைத்தொழில் அமைச்சராக நியமிக்கப்பட்டார்.

மேலும் இவர் வகித்த மனிதவுரிமைகள் மற்றும் இடர் முகாமைத்துவ அமைச்சு இரண்டாகப் பிரிக்கப்பட்டு மனித உரிமைகள் பிரிவு வெளிவிவகார அமைச்சின் கீழ் கொண்டு வரப்பட்டது. எனினும் கடந்த நவம்பர் மாதம் இடம்பெற்ற புதிய அமைச்சரவையிலும் தொடர்ந்து வெளிவிவகார அமைச்சின் கீழ் இயங்கிவந்த மனிதவுரிமைகள் பிரிவே தற்போது அமைச்சர் மஹிந்த சமரசிங்கவின் கீழ் கொண்டு வரப்பட்டுள்ளது.

மனித உரிமைகள் விடயத்தில் சர்வதேசம் அரசுக்கு நெருக்கடிகளை வழங்கி வருவதனால் அவற்றை திறமையுடன் கையாளக் கூடிய ஒருவரான மஹிந்த சமரசிங்கவிடம் இப்பிரிவு தற்போது மாற்றப்பட்டுள்ளதாக கூறப்படுகிறது.

இனிவரும் காலங்களில் ஜெனிவாவில் இடம்பெறும் ஐ.நாவின் மனித உரிமைகள் தொடர்பான கூட்டங்களில் அமைச்சர் சமரசிங்கவே கலந்து கொள்வார் என மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. இவர் 2006ஆம் ஆண்டு ஐக்கிய தேசியக் கட்சியிலிருந்து ஆளும் கட்சியினருடன் இணைந்து கொண்டவர் என்பது குறிப்பிடத்தக்கது. (ந-5)

# அவலங்களோ, அச்சு...

கடத்தல், கொலை, கொள்ளை போன்ற செயற்பாடுகள் முற்றாக இல்லாது ஒழிப்பதாக உறுதியளித்தார். ஆனால், இது வரையில் மேற்படி சம்பவங்களைக் கட்டுப்படுத்த நடவடிக்கைகள் எடுக்கப்பட்டதாக தெரியவில்லை.

ஏனெனில் இன்னும் சம்பவங்கள் நாளுக்கு நாள் தொடர்ந்து கொண்டே உள்ளது. கடந்த சில தினங்களுக்கு முன் ஆசிரியர் என்று சந்தேகிக்கப்படும் பெண்ணொருவரின் சடலம் வடக்கில் கிணற்றுக்குள் இருந்து மீட்கப்பட்டுள்ளது. எனவே அரசாங்கம் வடக்கில் எப்போது அமைதியை ஏற்படுத்தப் போகின்றது.

கடந்த மூன்று தசாப்த கால யுத்தத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு மீண்டும் வேதனைகளையும் சோதனைகளையும் கொடுப்பது நியாயமற்ற செயலாகும். உறுதியான ஜனநாயக சூழலை வடக்கு கிழக்கு மக்களுக்கு ஏற்படுத்திக் கொடுக்க வேண்டியது அரசாங்கத்துக்கு கடமையும் பொறுப்புமாகும்.

யுத்தம் முடிபடைந்தும் சுதந்திரமான தேர்தல் ஒன்றை சந்திக்க முடியாத சூழ்நிலையிலேயே வடக்கு வாழ் மக்கள் உள்ளனர். இன்று எதிர்கட்சிகளுக்கு தமது வேட்பாளர்களை தெரிவு செய்ய முடியவில்லை. பல நபர்களிடமிருந்து அச்சுறுத்தல்கள் வருகின்றன என்றும் நாடாளுமன்ற உறுப்பினர் விஜித ஹேரத் தெரிவித்துள்ளார். (ந-5)

# கனடா உலகத் தமிழர்...

புலி ஆதரவு நடவடிக்கைகளுக்குப் பெரும் பின்னடைவை ஏற்படுத்தியிருப்பதாக கனேடிய ஊடகங்களும் செய்தி வெளியிட்டுள்ளன.

உலகத் தமிழர் அமைப்பானது கனடாவில் விடுதலைப் புலிகளுக்கு மிகவும் முக்கியமானதொரு அமைப்பாகச் செயற்பட்டு வந்தது என கனேடிய றோயல் பொலிஸ் அதிகாரி ஸ்ரீவ் டப்ரெயுல் தெரிவித்துள்ளார்.

இந்த அமைப்பின் உடைமைகளை முடக்கி கனேடிய அரசாங்கத்துக்கு வழங்குமாறு கனேடிய நீதிமன்றம் வழங்கியிருக்கும் உத்தரவைத் தாம் சாதகமாகவே பார்ப்பதாக கனேடிய றோயல் பொலிஸின் பிரதி ஆணையாளர் கிலிஸ் மிச்சவுட் கனேடிய ஊடகங்களுக்குக் கூறியுள்ளார்.

பயங்கரவாத அமைப்புகளின் செயற்பாடுகளைத் தடுப்பதற்கு தாம் முன்னெடுத்திருக்கும் நடவடிக்கைகளை கனேடிய நீதிமன்றத்தின் தீர்ப்பு மேலும் உறுதிப்படுத்துவதாக அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார்.

வன்னி யுத்தத்தின் பின்னர் கனடாவில் இயங்கிவரும் விடுதலைப்புலிகளின் ஆதரவு அமைப்புக்களிடையே பெரும் பிளவுகளும் கருத்து மோதல்களும் இருந்து வந்த சூழலில் தற்போது கனேடிய அரசு எடுத்துள்ள சட்ட நடவடிக்கைகளை விடுதலைப் புலிகள் ஆதரவு அமைப்புக்கள் ஓர் அணியில் நின்று எதிர்கொள்வது அவசியம் என கனடா தமிழ் மக்கள் கருதுவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. (ந-5)

# அநுராதபுரம் சிறைச்சா...

இது தொடர்பில் மேலும் தெரிய வருவதாவது,

அனுராதபுர கைதிகள் நேற்று முன்தினம் தொடக்கம் சிறைச்சாலை நிர்வாகத்திற்கு எதிரான உண்ணா விரதப் போராட்டத்தை மேற்கொண்டிருந்தார்கள். அதனையடுத்து அப்பிரதேசமெங்கும் இராணுவத்தினர் குவிக்கப்பட்டார்கள்.

அவ்வாறான நிலையில் நேற்று மாலை திடீரென சிறைச்சாலைப் பிரதேசத்திலிருந்து துப்பாக்கி பிரயோக சத்தங்கள் கேட்டுள்ளன. அத்துடன் கல்லெறி சம்பவங்களும் நடத்துள்ளதாக அறியப்படுகின்றது.

இவ்வாறான நிலையில் அங்கு தடுத்து வைக்கப்பட்டிருக்கும் தமிழ் அரசியல் கைதிகளின் உயிருக்கு உத்தரவாதம் பெற்றுக்கொள்ளும் நடவடிக்கையில் தமிழ் அரசியல்வாதிகளும், முக்கியஸ்தர்களும் உடனடி நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு கைதிகள் மற்றும் அவர்களின் உறவினர்கள் சார்பில் அவசர வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது.

குறிப்பாகதமிழ்க் கைதிகள் இலக்கு வைத்து தாக்கப்படுவதாகவும் அங்கிருந்து கிடைக்கும் செய்திகள் உறுதிப்படுத்துகின்றன. நேற்று மாலை 6.30 மணி வரை காயப்பட்டவர்களை மருத்துவ மனைக்கு எடுத்துச் செல்ல முடியாதளவு நிலைமைகள் கடும் மோசமாக இருந்ததாக அறிவிக்கப்படுகின்றது.

தற்போதைக்கு 6 அம்புலன்ஸ் வண்டிகள் மூலம் 20 க்கும் அதிகமான கைதிகள் மருத்துவமனைக்கு எடுத்துச் செல்லப்பட்டுள்ளதாக மருத்துவமனை வட்டாரங்கள் மூலம் தெரிய வந்துள்ளது.

ஆயினும் 50இற்கும் மேற்பட்டவர்கள் வரையில் காயமுற்றிருப்பதற்கான அறிகுறிகள் இருப்பதாக தெரிகிறது. மேலதிகமாக சுமார் இருபது வரையான அம்புலன்ஸ் வண்டிகள் அப்பகுதிக்கு சைரன் ஒலியெழுப்பிக் கொண்டு சென்றுள்ளதாக அங்கிருந்து கிடைக்கும் தகவல்கள் கூறுகின்றன.

மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்ட கைதிகள் பெரும்பாலும் தலையில் இரத்தம் வழிந்தோடும் நிலையில் காணப்பட்டனர்.

நேற்றுக் காலை அனுராதபுர நீதிவான் நீதிமன்றத்தில் ஏற்பட்ட தீ அனர்த்தின் போது முன்னை நாள் வடமத்திய மாகாண சபை எதிர்க்கட்சித் தலைவர் மேஜர் ஜெனரல் ஜானக பெரேராவைப் படுகொலை செய்த கொலையாளியின் குற்ற அறிக்கையும் எரிந்து நாசமாகி யுள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

அதன் பின்பே நேற்று நண்பகல் தொடக்கம் சிறைச்சாலைக்குள் கடும் கொந்தளிப்பான நிலை ஏற்பட்டுள்ளது.

அதன்பின் நேற்று மாலை தமிழ் அரசியல் கைதிகள் இலக்கு வைத்துத் தாக்கப்பட்டுள்ளார்கள். (ந-5)

# இராணுவ நீதிமன்றம்...

இதன்படி இன்று இராணுவ நீதிமன்றம் சட்ட பூர்வமானதா என்பது குறித்து தீர்மானிக்கப்படவுள்ளது. இராணுவ நீதிமன்றம் சரத் பொன்சேகாவிற்கு 30 மாத கால சிறைத் தண்டனை விதித்துள்ளது.

எவ்வாறெனினும் அரசியல் அமைப்பின்படி இராணுவ நீதிமன்றை ஓர் நீதிமன்றமாக ஏற்றுக்கொள்ள முடியாதுஎனதீர்ப்பளித்தால்சரத்பொன்சேகா விடுதலை செய்யப்படக் கூடிய சாத்தியம் உண்டு. (ந-5)

# ஜனாதிபதி மகி...

இணைந்த மருத்துவ மனையிலேயே அவர் தற்போது அனுமதிக்கப்பட்டுள்ளதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

அவருக்கு குணமடைய வேண்டி ஜனாதிபதியின் பாரியார் ஷிராந்தி ராஜபக்ஷ ஆயிரம் சுமங்கலிகளுக்கு அன்ன தானம் வழங்கியுள்ளதாகவும் அறியப்படுகின்றது.

ஜனாதிபதியின் சுகவீனம் பாரியளவில் இல்லாத போதிலும் எதிர்வரும் சுதந்திரதினக் கொண்டாட்டங்களில் அவரால் பங்கெடுக்க முடியுமா என்பது சந்தேகம் என்பதாக மருத்துவ மனை வட்டாரங்கள் மூலம் தெரியவருகின்றது. (ந-5)


CONSULATE GENERAL OF INDIA JAFFNA

REPUBLIC DAY FUNCTION

(C-2292)

On the occasion of India's 61st Republic Day, there will be a flag hoisting ceremony at CONSULATE GENERAL OF INDIA 280, Palaly Road, Jaffna, on Wednesday, January 26, 2011 at 0900 hours. All Indian nationals and their families in Northern Province are cordially invited to participate in the function and are requested to reach the venue latest by 0830 hrs. To facilitate entry into The CONSULATE, they are requested to bring their passports or any other photo identity document.

Diploma Courses upto 90%Discount. அனைத்து மாணவர்களுக்கும்

Ms Office - Rs.2400
Multimedia - Rs.3600
Accounting - Rs.3600
AutoCAD-2&3D - Rs.6000
Web Development - Rs.27000

Free Dip. English ICDL DTP Typing

SMS your name & course to 772 395 895 & Get Schol.

Rs.800 Upwards

MCS Closing Date 26.01.2011

Supported By UNDP/JRRP

324,Palaly Road,Parameswara Junction

THE COLLEGE OF CHEMISTRY

DAY-CLASS

ORGANIC



Sat, Sun -7.30-9.30 Tue, Thu - 3.00-4.30

DIAS B.Sc (Hons) Spl.in Chem.

(3575)

இல்லறப் பொன்விழா வாழ்த்துக்கள்

மார்க்கண்டன்-ஞானம்மா தம்பதிகள் இல்லற வாழ்வில் இணைந்து ஐம்பது ஆண்டுகள் நிறைவடைந்துள்ளதை வாழ்த்துவதுடன் நீடூழி காலம் வாழ்க! என வாழ்த்துகின்றோம்.



25.01.1961

திரு. ஐ. மார்க்கண்டன் SLPS G-1, J.P.

- ஓய்வு பெற்ற அதிபர்
- சமாதான நீதவான்
- பொதுச் செயலாளர்-அளவெட்டி தென்னிந்தியத் திருச்சபை
- ஆதீன பிரதிநிதி, தென்னிந்தியத் திருச்சபை யாழ். ஆதீனம்
- உப தவிசாளர்-மத்தியஸ்த சபை, வலி தென்மேற்கு பிரதேச செயலகம்
- பொதுச் செயலாளர்-ஓய்வூதியர் ஒன்றியம், வலி தென்மேற்கு பிரதேச செயலகம்
- பொருளாளர், மாகியப்பிட்டிக் கிராம அபிவிருத்திச் சங்கம்
- பொதுச் செயலாளர்-வலி தென்மேற்கு பிரதேச செயலகக் கிராம அபிவிருத்திச் சங்கங்களின் சமாசம்

திருமதி மா. ஞானம்மா

- சான்றோர் எனக் கேட்ட இல்லத்தரசி



25.01.2011

மணநாளை நினைவுகூரும் திருநாள் வழிபாடு பேராயர் அதிவண. கலாநிதி டானியேல் எஸ்.தியாகராஜா அவர்களின் தலைமையில் பண்டத்தரிப்புத் தென்னிந்தியத் திருச்சபையில் இன்று 2011.01.25 செவ்வாய்க்கிழமை காலை 11.00 மணிக்கு நடைபெறவுள்ளது. அனைவரையும் கலந்துகொண்டு வாழ்த்தி ஆசி வழங்குமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்

- சுபேந்திரினி-மகள் (ஆசிரியர், தி/நிலாவெளி மகாவித்தியாலயம்), வண.சி.பஞ்சரட்ணம் (மருமகன்) (சபைக்குரு நிலாவெளி மெதடிஸ்த ஆலயம்) பொனோபர், கிறிஸ்ரோபர் (புனித ஜோசப் கல்லூரி, திருகோணமலை)
- மதிவதனன் -மகன் (முன்னாள் பிரபல விளையாட்டு வீரர் , யா/ஸ்கந்தவரோதயக் கல்லூரி), பராசக்தி (மருமகள்) பிரியங்கா, சோபியா, ஆஷிகா (கனடா).
- ஞானவதனன்-மகன் (முன்னாள் பிரபல விளையாட்டு வீரர், யா/ அருணோதயக் கல்லூரி), பியுலா (மருமகள்) (கனடா).
- ஜெயவதனன்-மகன் (பண்டத்தரிப்பு அரசினர் மருத்துவமனை) உதயகுமாரி (மருமகள்), காயத்திரி (யா/அருணோதயக் கல்லூரி), சூரியகங்கோி (யா/அருணாசலம் வித்தியாலயம்), ஜெயராஜ், சூரியராஜ் (யா/மகாஜனக் கல்லூரி). ஆசியசங்கரி
- கிருபாகனி-மகள் (ஆசிரியர், யா/அருணோதயக் கல்லூரி), அன்ரனி பெனடிக் (மருமகன்), அபிஷன் (யா/மகாஜனக் கல்லூரி).
- அருள்வதனன்-மகன் (ஆசிரியர், மன்/புனித சேவியர் ஆண்கள் கல்லூரி), பிறின்சி அனிற்றா -மருமகள் (ஆசிரியர், மட்/ வாழைச்சேனை வை. அஹமட் வித்தியாலயம்).
- ரூபவதனன்-மகன் (விரிவுரையாளர், ஊவா வெல்லஸ்ஸப் பல்கலைக்கழகம், பதுளை).

(3568)

'மதிபதி' மாகியப்பிட்டி, சண்டிலிப்பாய்.

021 3008620, 0777422217


இப்பத்திரிகை வலம்புரி அன்.கோஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 25.01.2011 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.